# எங்கள் தேசம்

மாதம் இரு முறை

QD/13/NEWS/2014

மனிதம் வாழுமிடமெல்லாம் எங்கள் தேசமே!

Engal Thesam එංගල් දේසම්

மலர்: 13 | இதழ்: 24 | டிசம்பர் 15–31 ஹிஜ்ரி: 1436 | பக்கங்கள்: 20 | விலை: ரூபா 30.00 | 283


## ஜீன் 21 உலக யோகா தினம் ஐ.நா. பிரகடனம்

ஜூன் மாதம் 21 ஆம் திகதியை உலக யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை பிரகடனம் செய்துள்ளது.

உலக யோகா தினமொன்றை அறிவிக்க வேண்டும் என சர்வதேச நாடுகளுக்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி மூன்று மாதங்களுக்கு முன்னர் கோரிக்கை விடுத்திருந்தார். பிரதமரின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட்டு 90 நாட்களுக்குள் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளதுடன், 170 க்கும் மேற்பட்ட நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

ஐ.நா. வின் இந்த அறிவிப்பு தொடர்பில் மகிழ்ச்சி வெளியிட்டுள்ள இந்திய பிரதமர், இந்த தீர்மானமானது யோகா தொடர்பில் மக்களை மேலும் ஊக்குவிக்கும் என தெரிவித்துள்ளார்.

### அரசியல் எதிரிகள் நண்பர்களாகும் தேர்தல் களம்



07

### நேர்காணல்
### ஹுனைஸ் பாரூக் எம்.பி.



10

# மு.கா. வின் ஆதரவு, முஸ்லிம்களின் தெரிவு;

# மைத்திரி? மஹிந்த?



ஏ. முஹம்மத் பாயிஸ்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் உச்சகட்டத்தை எய்து வருகின்ற நிலையில், சிறுபான்மைக் கட்சிகளான த.தே.கூ. மற்றும் மு.கா.வின் முடிவுகள் இன்னும் ஊர்ஜிதப்படுத்தப்படாமல் இருப்பதால் பிரதான கட்சிகளுக்கு அவை பெரும் தலையிடியாகவே மாறிவிட்டன. த.தே.கூ. இம்மாத இறுதியில் தமது முடிவை

➡ 17

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்க சர்வஜன வாக்கெடுப்பு

### ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ



அஸ்ரப் ஏ. சமத்

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதென்றால் இந்த நாட்டின் மக்களிடம் அதனை ஒப்படைத்து சர்வஜன வாக்குக்கு விடுவேன். இம்முறையை வேண்டாம் என நீங்கள் தெரி த்து வாக்களித்தால் அதனை இல்லாமல் செய்வேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். அனுராதபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே இதனைத் தெரிவித்தார்.

அவர் உரையாற்றும் போது மேலும் தெரிவித்துள்ளதாவது;

எதிர்க்கட்சியினர் எமது கட்சிச் செயலாளரை எடுத்தார்கள். நாம் அவர்களது செயலாளரை இந்தப்பக்கம் எடுத்துள்ளோம். முடியுமானால் தேத்தண்ணீர் கோப்பையை கொடுத்து ரணில் விக்கிரமசிங்கவைக் கூட இந்தப் பக்கம் எடுக்க முடியும். அவர்கள் இந்தப் பக்கம் எடுத்தாலும் நாங்களும் அந்தப் பக்கத்தில் இருந்து எமது பக்கம் எடுப்போம்.

இந்த முறை வரவு-செலவுத் திட்டத்தில் அடுத்த ஆண்டு ஒன்றரை இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில்வாய்ப்பு வழங்கப்படும்.

➡ 17

## தாய் நாட்டை அரசு துஷ்பிரயோகம் செய்கிறது

### மங்கள சமரவீர எம்.பி.



**தேர்தல் சட்டத்தை மீறும் அதிகாரிகளுக்காக ப்ளெக் புக் அறிமுகம்**

நீரில் மூழ்கிய ஒரு பெண்ணை காப்பாற்றி துஷ்பிரயோகம் செய்ய முடியாது. ஆனால், இந்த அரசோ மீட்டெடுத்த தாய் நாட்டை துஷ்பிரயோகம் செய்கின்றது. இதற்கு எம்மால் இடமளிக்க முடியாது. யுத்த வெற்றியை விற்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதினூடாக தமது தோல்வியை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் மங்கள சமர வீர தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தேர்தல் சட்டத்தை மீறும் அதிகாரிகளுக்கெதிராக 'பிளெக் புக்' திட்டத்தை அறிமுகம் செய்து வைத்து ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

➡ 16

## தேசிய அரசில் ஜே.வி.பி. அங்கம் வகிக்காது

### அனுரகுமார தெரிவிப்பு



பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன வெற்றி பெற்றதும் அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படும் சர்வகட்சி அரசில் ஜே.வி.பி. அங்கம் வகிக்காது என்று அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் 3 ஆம் கூட்டணியொன்றை அமைத்து களமிறங்குவது சம்பந்தமாக பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அவர் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலே இதனைத் தெரிவித்துள்ளார். ஜனநாயகத்தை அழித்து, மனித உரிமைகளை மதித்து, இன ஐக்கியத்தை சீர்குலைத்து, ஊழல் மோசடிகளுடன் அழிவை நோக்கிச் செல்லும் இந்த அரசின்

➡ 17

## தேர்தல் வன்முறை அதிகரிப்பு நீதியான தேர்தலுக்கு ஒத்துழைக்கவும்

### தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்புகள் கூட்டாக கோரிக்கை

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து அதிகளவான வன்முறை சம்பவங்களும் அரச வளங்களை உபயோகித்தமை தொடர்பிலான முறைப்பாடுகளும் கிடைப்பதாக தெரிவிக்கும் தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் அமைப்புகள், நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று இடம்பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன.

➡ 16

## பொதுபல சேனா மஹிந்தவை ஆதரித்தால் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவேன்



ஜனாதிபதித் தேர்தலில் பொதுபல சேனா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவு வழங்கினால் தான் அரசாங்கத்துடன் இருக்கப் போவதில்லை என முதலீட்டு ஊக்குவிப்பு பிரதிய மைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா ஜனாதிபதிக்கு ஆதரவு அளிப்பதாக இன்னும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அறிவிக்கவில்லை என கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் உரையாற்றிய பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா ஜனாதிபதிக்கு ஆதரவளித்தால் தான் அரசாங்கத்தில் இல்லை என அவர் தெரிவித்தார்.


நீங்களும் ஒரு Engineer ஆகலாம்...

City & Guilds World's top rated qualifications

Quantity Surveying (QS)
Civil Engineering
Automobile Engineering

For details: Type 'engineering' & sms to
077 3171 722

Chartered Engineer UK
↑
City & Guilds Post Graduate Diploma
↑
City & Guilds Graduate Diploma
↑
City & Guilds Advance Technicain Diploma
↑
City & Guilds Technicain Diploma
↑
G.C.E. A/L


Entry requirement:
(A/L) two passes in any stream

INSIGHT

Next in Take January 2015

தங்குமிட வசதிகள் உண்டு

Insight School of Engineering
@ Mawanella Campus



Insight Institute of Management and Technology
18A, Palmyrah Avenue, Colombo - 03

Hotline: 077 3171 722
Email: insight.soe@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத்தின் ஊழலுக்கு நடவடிக்கை எடுப்பேன்



## ஜனாதிபதி வேட்பாளர் மைத்திரிபால

தான் அதிகாரத்துக்கு வந்து 100 தினங்களில் பொருத்தமான ஆணைக் குழுக்களை அமைத்து தற்போதைய அரசாங்கத்திலுள்ள ஊழல், மோசடிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதாக ஜனாதிபதி பொது வேட்பாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்பொழுது நாட்டில் அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் நிதியில் மூன்றில் இரண்டு மோசடி செய்யப்படுகின்றது எனவும் அவர் மேலும் சுட்டிக் காட்டினார்.

# மஹிந்த வெற்றி பெற்றால் கொழும்பை முற்றுகையிடுவோம்

## அதுரலிய ரத்ன தேரர்



அரசாங்கம் எந்த சூழ்ச்சிகளையும் செய்து வெற்றி பெற முடியாது. அவ்வாறு வெற்றி பெற முனைந்தால் பத்து இலட்சம் பேரைத் திரட்டி கொழும்பை முற்றுகையிட்டு அரசாங்கத்தின் அதிகாரத்தை கைப்பற்றுவோம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் அதுரலிய ரத்ன தேரர் கண்டியில் சூளுரைத்தார்.

கண்டியில் நடைபெற்ற எதிரணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன் அரசாங்கம் சர்வதேச சூழ்ச்சி என்று கூறி வாக்குகளைப் பெற முயற்சிப்பதாகவும் அவ்வாறு ஒரு சூழ்ச்சியும் இல்லை என்றும் அரசிற்குள்ளேயே சூழ்ச்சிக்காரர்கள் உள்ளதாகவும் அவர் கூறினார்.

# மைத்திரி அரசியல் ஸ்திரத் தன்மையை சீர்குலைக்க முயற்சிக்கிறார்



## திஸ்ஸ குற்றச்சாட்டு

ஐக்கிய தேசியக் கட்சி உரிய இலக்குகளை நோக்கி செல்லாமையே கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை இராஜினாமா செய்யக் காரணமென பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், திஸ்ஸ அத்தநாயக்க இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

பொது வேட்பாளராக மைத்திரிபால சிறிசேன நியமிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தேர்தலில் போட்டியிடா விட்டால், கட்சியின் பிரதித் தலைவருக்கு அந்த வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமென யோசனை முன்வைத்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், தமது கோரிக்கைகளை செவிமடுக்காது, மைத்திரிபால சிறிசேன பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டமை ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மையான ஆதரவாளர்களை வெகுவாக பாதிக்கும் என திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தமக்கு ஆதரவளிக்கும் பல்வேறு தரப்பினருடன், தனித் தனியான உடன்படிக்கைகளை செய்து கொண்டு, மைத்திரிபால சிறிசேன நாட்டின் அரசியல் ஸ்திரத் தன்மையை சீர்குலைக்க முயற்சிப்பதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



# தேர்தல் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பொலிஸாருக்கு சிக்கல்



தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள பதாதைகள், சுவரொட்டிகள் என்பவற்றை அகற்றுவதில் பொலிஸார் சிக்கல் நிலையை எதிர் நோக்கியுள்ளதாக பொலிஸ் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு அமைக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள், பதாதைகள் என்பவற்றை அகற்ற வேண்டாம் என பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் செல்வாக்கு உள்ளவர்களிடமிருந்து வரும் அச்சுறுத்தல்களே இதற்குக் காரணம் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

எதிர்வரும் நாட்களில் இந்த பிரசார நடவடிக்கைகள் அனைத்தையும் கட்டம் கட்டமாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல்களுக்குப் பொறுப்பாகவுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரத்ன சிங்கள ஊடகமொன்றிடம் குறிப்பிட்டுள்ளார்.

# மதிநுட்பமான அரசியல் நகர்வால் மாற்றங்களை ஏற்படுத்த முடியும்

## பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார்



மக்களின் பயன்பாட்டுக்கு அனுமதி மறுக்கப்பட்ட கிளாலி மீன்பிடி இறங்கு துறையைக் கூட மீட்டு அதை மீள நிர்மாணித்து மக்களிடம் வழங்கியுள்ளோம். இது சாத்தியப்படுமென அன்று எவருமே எதிர்பார்த்திருக்கவில்லை. இதுவே எமது நுட்பமான அரசியல் வழிமுறையின் தந்திரோபாயமான நகர்வுகள் என பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவருமான மு. சந்திரகுமார் தெரிவித்துள்ளார். மீள் நிர்மாணிக்கப்பட்ட கிளாலி மீன்பிடி இறங்குதுறையை கடற்தொழிலாளர்களின் பயன்பாட்டுக்கு கையளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்;

பல புனரமைக்கப்படாத வீதிகள் மக்களுக்கு அன்றாடம் அவலங்களை ஏற்படுத்தி வருகின்றன. ஆனாலும் இவற்றையெல்லாம் புனரமைத்து, மக்களுக்கு இலகுவான வாழ்நிலைச் சூழலை ஏற்படுத்துவதற்காக அரசாங்கத்தால் வடக்கு மாகாண சபைக்கு வழங்கிய நிதியை மாகாண சபை மக்கள் நலத் திட்டங்களுக்காக பயன்படுத்தாது சுமார் மூவாயிர மில்லியன் வரையான நிதியை வரும் இருபது நாட்களுக்குப் பின் மீளவும் அரசாங்கத்திடம் ஒப்படைக்கவுள்ளனர்.

கடந்த காலங்களில் நிலவிய யுத்தம் இளைஞர்களின் வாழ்வியலில் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதனால் யுத்த காலத்தில் நாட்டை விட்டு வெளியேற முயற்சித்ததில் நியாயத் தன்மைகள் இருக்கின்றன. ஆனால் இன்றும் இவ்வாறான சட்டத்திற்கு மாறான வகையில் நாட்டை விட்டு வெளியேற முயற்சிக்கின்றமையும் அதனால் பொருளாதார இழப்புகளையும் உயிரிழப்புகளையும் எதிர்கொள்கின்றமை தொடர்பிலும் இளம் தலைமுறையினர் சிந்தித்து செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# தங்கம் பகிரும் செயற்பாட்டால் ரயில் திணைக்களத்திற்கு ரூ. 10 கோடி நஷ்டம்



வடக்கு மக்களுக்கு தங்கம் பகிர்ந்தளிக்கவென யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு தொகுதி மக்களை கொழும்புக்கு இலவசமாக ரயிலில் அழைத்து வந்த, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கையின் காரணத்தால் இலங்கை ரயில் திணைக்களத்திற்கு பத்துக் கோடி ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருப்பதாக அகில இலங்கை புகையிரத சேவை ஊழியர் பொதுச் சேவை சங்கம் தெரிவித்துள்ளது.

யுத்தம் இடம்பெற்ற காலப் பகுதியில் வடக்கின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் கண்டெடுக்கப்பட்ட தங்க ஆபரணங்களை உரியவர்களிடத்தில் பகிர்ந்தளிக்கும் வேலைத் திட்டத்தை முன்னிட்டு அலரி மாளிகையில் இடம்பெற்று வரும் அன்னதான நிகழ்வில் வடக்கு மக்களையும் இணைத்துக் கொள்வதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து ஒரு தொகுதி மக்கள் ரயில் மூலம் கொழும்புக்கு அழைத்து வரப்பட்டனர். இலவசமாக இவர்கள் ரயிலில் அழைத்து வரப்பட்டமையால் இலங்கை ரயில் திணைக்களத்திற்கு சுமார் 10 கோடி ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# மாற்றம் ஒன்றிற்காகவே ஒன்றிணைந்தோம்

## ரணில் விக்கிரமசிங்க

தற்போது அரசாங்கம் விலைவாசியை அதிகரித்துள்ளது. என்றாலும் சம்பளத்தை அதிகரிக்கவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வத்தளையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

தற்போதைய அரசாங்கம் பொதுமக்களுக்கு தேவையான நிவாரணங்களை வழங்க தவறியுள்ளது. இதனால் மக்கள் பாரிய அசௌரியத்தை சந்திக்க வேண்டி இருக்கிறது. இந்த நிலைமையை மாற்றுவதற்காகத்தான் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, ஜாதிக்க ஹெல உறுமய உள்ளிட்ட கட்சிகள் ஒன்றிணைந்து, செயற்பட ஆரம்பித்துள்ளன என அவர் கூறினார்.

# கிழக்கிலங்கை அரபுக் கல்லூரிக்கு மூன்று மாடிக் கட்டடம்



கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமா லெப்பையின் நிதி ஒதுக்கீட்டில் அண்மையில் அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள 3 மாடிக் கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் நடைபெற்றது.

இந்நிகழ்வில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அடிக்கல்லை நட்டி வைத்தார். இதற்கென முதற் கட்டமாக 2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ப. முஹாஜிரீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் பொலிஸாருக்கு செயலமர்வு



பழுலுல்லாஹ் பர்ஹான்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பொலிஸ் பணியகத்தைச் சேர்ந்த, பெண்கள், சிறுவர் பிரிவு பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கான செயலமர்வு அண்மையில் மட்டக்களப்பு கிறீன்காடன் ஹோட்டலில் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. இந்து கருணாரட்ண மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவி பொலிஸ் அத்தியட்சகர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் ஆணைக்குழுவின் தவிசாளரும் ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதியுமான பிரியந்த ஆர்.பி. பெரேரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

இந்நிகழ்வில் விரிவுரையாளர்களாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவாவும் ஆணைக்குழுவின் நீதிச் செயலாளர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவாவும் கலந்து கொண்டு விரிவுரையாற்றினார்கள்.

# வீதி புனரமைப்பு



அ. றஹ்மான்

அட்டாளைச்சேனை 12 ஆம் பிரிவு நூர் பள்ளிவாசல் குறுக்கு வீதி கொங்கிரீட் வீதியாக புனரமைக்கும் பணி அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் சோபர் விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான ஏ.எஸ்.எம். உவைஸ் தலைமையில் இடம்பெற்றது.


மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டிருந்த நூர் பள்ளி குறுக்கு வீதியை புனரமைக்கும்படி பிரதேச சபை உறுப்பினர் உவைஸ் விடுத்த கோரிக்கைக்கு அமைய மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் பொருளாதார அமைச்சின் நிதியில் இவ்வீதியின் ஆரம்ப வேலை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினரும் அம்பாறை மாவட்ட பொதுப் பணிகள் அமைப்பின் தலைவருமான எஸ்.எல். முனாஸ் மற்றும் கோணாவத்தை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைக் குழு செயலாளர் எஸ்.ஆப்தீன் மற்றும் பொதுமக்கள், முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு இந்த வீதியின் வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தனர்.

# இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் இரத்ததான முகாம்







இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாவனல்லை கிளை பிரதேச முஸ்லிம் மக்களுடன் இணைந்து வருடாந்தம் நடத்தி வரும் இரத்ததான முகாம், அண்மையில் மாவனல்லை ராழியா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த இரத்ததான முகாமில் 528 பைந்து (Units) இரத்தம் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இந்நிகழ்விற்கு மாவனல்லை பிரதேச வாழ் மக்கள் இன, மத பேதமின்றி பெரும் ஆர்வம் காட்டியதுடன், பெண்கள் பலரும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. இந்த இரத்ததான முகாமிற்கு மாவனல்லை, கண்டி, கம்பளை, கேகாலை, நாவலப்பிடிய வைத்தியசாலைகளின் இரத்ததான வங்கிகள் கலந்து கொண்டு அதி கூடிய இரத்த பைந்துகளை (Units) பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த இரத்ததான முகாமிற்கு விசேட அதிதிகளாக சுகாதார பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்க, மாவனல்லை பிரதேச சபை தலைவர் கீர்த்தி மதுகொடுவ, விசேட வைத்திய நிபுணர் ஆரியசேன யு. கமகே மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இவ்வருடம் மாவனல்லை சுகாதார வைத்திய அலுவலகமும் இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாவனல்லைக் கிளையும் இணைந்து 2014.12.01 முதல் 2014.12.06 வரை சுகாதார வார நிகழ்ச்சித் திட்டமொன்றை பிரகடனப்படுத்தி பல்வேறு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தன. இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் மாவனல்லைக் கிளை 1999 ஆம் ஆண்டு முதல் இரத்ததான முகாம்களை நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் காசிமிய்யா அரபுக் கல்லூரிக்கு புதிய மாணவர் அனுமதி

2015 புதிய கல்வி ஆண்டுக்கான புதிய மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை 2014.12.21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு கல்லூரியில் நடை பெறவுள்ளது.

க.பொ.த. சாதாரண தர, உயர் தர பாடங்களுடன் கிதாபு ஷரிஆப் பிரிவுக்கு தோற்ற விருப்பமுள்ளவர்கள் 9 ஆம் ஆண்டு பாடசாலைக் கல்வியைப் பூர்த்தி செய்தோராகவும், 15 வயதுக்கு மேற்படாதவர்களாவும் இருக்க வேண்டும்.

ஹிப்ழு பிரிவுக்கு தெரிவு செய்யப்படும் மாணவர்கள் 2015 ஆம் வருடம் பாடசாலை கல்வியில் 6 ஆம் தரத்தில் கற்கக் கூடியோராக இருத்தல் வேண்டும். பாடசாலைக் கல்வியை காலை வேளையில் புத்தளம் சாஹிரா தேசியப் பாடசாலையில் தொடர்வதோடு, மாலை வேளையில் கல்லூரியில் தங்கி இருந்து அல்குர்ஆனை மனனம் செய்வார்கள்.

கிதாபு ஷரீஆப் பிரிவு மாணவர்களுக்கு க.பொ.த சாதாரண தரப் பாடங்களும் உயர் தரப் பாடங்களும், அல்ஆலிம் பரீட்சை, அஹதிய்யா, தர்மசாரிய பரீட்சை, தொழில் கல்விப் பாடங்களும் மத்ரஸாவில் நடத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 032 22 65 738 0714018077 எனும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கல்லூரி அதிபர் தெரிவிக்கின்றார்.

# வருடாந்த பாலர் கலை விழா

காத்தான்குடி அப்றா பாலர் பாடசாலையின் 2014 வருடாந்த பாலர் கலை விழா காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

அப்றா பாலர் பாடசாலையின் தலைவர் வை.எல்.எம். இப்றாஹீம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி பிரதியமைச்சருமான எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் கலந்து கொண்டதோடு, கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் கலந்து கொண்டார்.

இதன் போது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வினால் பாலர் கலை விழாவில் சிறப்பாக நிகழ்ச்சிகளை செய்த பாலர்களும் அவர்களை வழி நடத்திய ஆசிரியைகளும் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய அறிவிப்பாளர்களும் பரிசும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.








பொலன்னறுவை மாவட்டத்தில் பல பிரதேசங்களிலும் உள்ள வசதி குறைந்த மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்களை ஐ.தே.க. வட மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம். அன்சார் வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.

படமும் தகவலும்: வினாசர் ராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தேசம்

மலர் : 13 இதழ் : 24 டிசம்பர் 15 - 31

77, ஸ்ரீ வஜிரஞான மாவத்தை, கொழும்பு- 09, இலங்கை
தொலைபேசி: 0112 698771 / 0777 412561, பெக்ஸ்: 0112 686030,
மின்னஞ்சல்: engalthesamnews@gmail.com

# இந்த அக்கறை அப்போதே இருந்திருக்கக் கூடாதா?

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி குறிப்பிடப்பட்டு இரண்டு அணிகளும் ஆதரவு திரட்டுவதில் மும்முரமாக ஈடுபடுகின்ற வேளையில் சிறுபான்மையினரின் வாக்குகள் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும் தீர்மான காரணியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. யுத்தம் முடிவடைந்த காலம் முதலே தமிழ் மக்கள் அரசாங்கத்தின் மீது ஆத்திரத்துடன் செயற்படும் நிலையில் முஸ்லிம்களின் வாக்குகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியிலிருந்தும் முக்கிய உறுப்பினர்கள் பிரிந்து சென்ற நிலையில் இதன் முக்கியத்துவம் மேலும் வலுவடைகின்றது.

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி மற்றும் பாதுகாப்புச் செயலாளர் உட்பட அரசின் உயர் தரப்பினர் முஸ்லிம்களுக்கு நூறு வீத பாதுகாப்பு வழங்கப்படுவதாகவும், முஸ்லிம்களின் பல கோரிக்கைகள் நிறைவேற்றப்பட இருப்பதாகவும் தெரிவித்துள்ளனர். கிழக்கு மாகாண சபைத் தேர்தலின்போது அமீர் அலிக்குத் தருவதாக வாக்களிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் பதவியும் வழங்கப்பட்டுள்ளது. முஸ்லிம் அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு அமைச்சர் பதவிகள், பிரதியமைச்சர் பதவிகள், பணிப்பாளர் பதவிகள் குறித்த கோரிக்கைகள் இருந்தாலும் முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கையாக அவை இல்லை. முஸ்லிம்கள் இந்த நாட்டில் 1000 வருடங்களுக்கு மேல் வாழ்ந்தது போன்று தமது சமய கலாசாரப் பெறுமானங்களுடன் பாதுகாப்பாக வாழ்வதொன்றையே எதிர்பார்க்கின்றனர். அந்த எதிர்பார்ப்பு இன்றைய அரசின் கீழ் கேள்விக் குறியாக மாறியமையும் முஸ்லிம்களின் பாதுகாப்புக்குப் பாரிய அச்சுறுத்தல் வந்த போதும் அரசு அதற்கான எவ்வித உத்தரவாதத்தையும் வழங்க முன்வராத, வழங்க விரும்பாத மெத்தனப் போக்கை காட்டியமையும் அவதானிக்கப்பட்டன. அந்த வகையில் 2005 இலும் 2010 இலும் அரசோடிருந்த பல முஸ்லிம் சக்திகள் அதிர்ச்சியடைந்து நிலைமையை எதிர்கொள்ளும் மாற்று வழிவகைகளை தேடியமையும் உண்மையாகும்.

இப்போது அரசாங்கம் முஸ்லிம்கள் தொடர்பாக காட்டும் அக்கறை, பாதுகாப்பு உத்தரவாதம் அப்போதே வழங்கப்பட்டிருந்தால் முஸ்லிம்கள் அரசுடன் முரண்பட்டிருக்க எந்த நியாயமும் இல்லை. பள்ளிவாசல் உடைக்கப்படும்போது, அளுத்கமை அழிக்கப்படும்போது, பெஷன் பக் தீ வைக்கப்படும்போது, ஹலால் முறை புறக்கணிக்கப்படும் போது, தொழுமிடங்களில் பன்றி இறைச்சி போடப்படும்போது, கஃபதுல்லாஹ்வுடன் பன்றியின் உருவப்படம் இணைக்கப்படும் போது அரசாங்கம் முஸ்லிம்களின் புண்பட்ட உணர்வுகளைப் புரிந்து கொள்வதை வேண்டுமென்றே புறக்கணித்தது. இன்று இக்கட்டான நிலையில் போட்டி உக்கிரமடைந்த போது முன்னர் எதிர்பார்க்கப்பட்டது போல சிறுபான்மையினரின் வாக்குகளின்றியே வெற்றி பெறலாம் என்ற உறுதி தளரும்போது வழங்கப்படும் வாக்குறுதிகள், அறிவிக்கப்படும் சலுகைகள் எந்தளவுக்கு வேலை செய்யும் என்பது சந்தேகமே.

முஸ்லிம்கள் தனிநாடு கோரவில்லை. பிரிவினையை விரும்பவில்லை. 25 வருடங்களாக அகதி முகாமில் நீடிக்கும் நிலை வட மாகாண முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டது. கடந்த நான்கு வருடங்களில் அது சரி செய்யப்பட சந்தர்ப்பம் இருந்தும் அவ்வாறு செய்யப்படவில்லை. குறிப்பாக பல எம்பிக்கள், அமைச்சர்கள் அரசில் அங்கம் வகிக்கும் நிலையிலும் முஸ்லிம்கள் மோசமாகப் புறக்கணிக்கப்பட்டார்கள் என்றே கூற வேண்டும்.

வரும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெறப் போகிறார் என்பதை யாரும் உத்தரவாதப்படுத்த முடியாது. ஆனால், தேவையில்லை என்று நினைக்கின்ற சிறுபான்மை வாக்குகள் இப்போது தேவைப்படுகின்றன. அலட்சியம் செய்யப்பட்ட கோரிக்கைகள் இப்போது அக்கறையோடு பார்க்கப்படுகின்றன. புறக்கணிப்பு நீங்கி அரவணைப்பு நிலை முன்வைக்கப்படுகிறது. முஸ்லிம்களின் பக்கத்திலிருந்து எவ்வித திங்கும் இந்த நாட்டுக்கு இழைக்கப்படாத நிலையில், ஏன் இவ்வாறு அவமதிக்கப்படுகிறோம் என்பது பற்றி விடைதேட முடியாத நிலையிலேயே இத்தேர்தலை பயன்படுத்த முஸ்லிம்கள் முனைகிறார்களேயன்றி, வேறில்லை.

# பள்ளிவாசல்களை வக்பு சபையில் பதிவு செய்வது பாதுகாப்பானது

**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி)**



நிறைய பள்ளிவாசல்கள் நீண்ட காலங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை இந்த வக்பு சபை சட்டத்திற்கு ஏற்ப சரியான முறையில் பதிவு செய்யப்படவில்லை. அதாவது, இருபது வருடங்களுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் கூட இன்னும் பதிவு செய்யப்படாமலுள்ளன. அது எமது சமூகத்தவர்கள் விட்ட ஒரு தவறு என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், வக்பு சட்டத்திற்கமைவாக வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டிருப்பது பாதுகாப்பானது என்பதை இப்போது உணருகிறார்கள் என முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி) தெரிவித்தார். எங்கள் தேசத்துக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகிறோம்.

நேர்காணல் : ஏ. முஹம்மத் பாயிஸ்
படம்: முல்லை நசீர்

**எங்கள் தேசம்: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்ற சேவைகளை தெளிவுபடுத்த முடியுமா?**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சின் கீழியங்கும் ஒரு சமய திணைக்களமாகும். இதனது பிரதான பணிகளில் ஒன்று வக்பு சொத்துக்கள், அதாவது பள்ளிவாசல்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகும். இதில் பள்ளிவாசல்களை பதிவு செய்வது, நம்பிக்கையாளர் சபையினை 3 வருடங்களுக்கு ஒரு தடவை நியமனம் செய்வது, கணக்குகளை பரிசீலனை செய்து தேறிய இலாபத்திலிருந்து கொடுப்பனவுகளை முஸ்லிம் தர்ம நிதியத்திற்கு சேகரித்தல் போன்றவையாகும்.

மேலும், அரபுக் கல்லூரிகள், குர்ஆன் மத்ரஸா, ஹிப்ழு மத்ரஸா போன்றவற்றை பதிவு செய்யும் நடவடிக்கைகளையும் திணைக்களம் மேற்கொள்கிறது. இவை தவிர, இலங்கையிலுள்ள மௌலவிமாருக்கு அடையாள அட்டை வழங்குதல் ஹஜ் மற்றும் உம்ரா தொடர்பான நடவடிக்கைகள், இஸ்லாமிய விழாக்களை நடத்துதல் போன்ற பல்வேறு பணிகளையும் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது.

**எங்கள் தேசம்: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கீழியங்கும் ஏனைய சபைகள் தொடர்பாக கூற முடியுமா?**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** சட்ட ரீதியாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தோடு இணைந்ததாக வக்பு சபையும் வக்பு நியாய சபையும் காணப்படுகின்றன. 1956 ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட சட்டத்திற்கேற்ப இந்த இரண்டு சபைகளும் திணைக்களத்துடன் இயங்குகின்றன. பள்ளிவாசல்களின் பதிவு, பள்ளிவாசல்களின் நிருவாக சபையின் நியமனம் போன்ற அனைத்தும் வக்பு சபையினால் மேற்கொள்ளப்படும். வக்பு சபையின் ஓர் உறுப்பினராக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரும் அங்கம் வகிப்பார். இந்த வக்பு சபையில் எடுக்கப்படும் தீர்ப்புகளில் திருப்திப்படாதவர்கள் வக்பு நியாய சபைக்குச் செல்லலாம். அவர்களது பிரச்சினைகளை வக்பு நியாய சபை விசாரணை செய்து தீர்ப்புகளை வழங்கும்.

வக்பு நியாய சபை என்பது நீதிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு நீதிமன்றமாகும்.

**எங்கள் தேசம்: முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் பல பள்ளிவாசல்கள் இன்னும் பதியப்படாமல் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இது ஏன் என்று தெளிவுபடுத்த முடியுமா?**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** இது ஒரு பிரச்சினைக்குரிய விடயம்தான். நிறைய பள்ளிவாசல்கள் நீண்ட காலங்களுக்கு முன் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அவை இந்த வக்பு சபை சட்டத்திற்கு ஏற்ப சரியான முறையில் பதிவு செய்யப்படவில்லை. அதாவது இருபது வருடங்களுக்கு மேற்பட்ட பள்ளிவாசல்கள் கூட இன்னும் பதிவு செய்யப்படாமலுள்ளன. அது எமது சமூகத்தவர்கள் விட்ட ஒரு தவறு என்றுதான் நான் கருதுகிறேன். ஏனென்றால், வக்பு சட்டத்திற்கமைவாக வக்பு சபையில் பதிவு செய்யப்பட்டிருப்பது பாதுகாப்பானது என்பதை இப்போது உணருகிறார்கள்.

ஆரம்ப காலங்களில் தேவையை பெரிதாக உணராததன் காரணமாக தற்போது பாதிப்புகள் எதிர்நோக்கப்படுகின்றன. அவ்வாறான பள்ளிவாசல்களை பதிவு செய்வதில் கால தாமதம் இருக்கின்றது. மேலும், கடந்த 2013 ஒக்டோபர் 23 ஆம் திகதி காலம் முடிவடைந்து செயலிழந்த வக்பு சபைக்குப் பிறகு 2014 ஜூன் இல் தான் புதிய வக்பு சபை நியமிக்கப்பட்டது. இந்த புதிய வக்பு சபை வருவதற்கு நீண்ட காலம் சென்றதனால் இந்நிலை இருந்தது. எதிர் வரும் காலங்களில் இவை நிவர்த்தி செய்யப்படும்.

**எங்கள் தேசம்: ஹஜ் விவகாரத்தில் அண்மைக் காலங்களில் பிரச்சினைகள் நிலவின. இவற்றுக்கான காரணம் என்ன?**

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** கடந்த 2012 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலப் பகுதியில் இலங்கைக்குரிய கோட்டா வரையறுக்கப்படாது அதிகமாக இருந்தது. இலங்கையிலிருந்து 7 ஆயிரம் வரை ஹாஜிகள் ஹஜ்ஜுக்காகச் சென்ற காலமும் இருந்தது. ஆனால் 2012 இற்கு பிறகு சஊதி அரசாங்கத்தினால் இலங்கைக்கு வழங்கப்பட்ட கோட்டாவின் எண்ணிக்கை 2800 ஆக மாற்றப்பட்டது. சஊதி அரசாங்கத்தினால் பின்னர் 2013 இல் மேலும் 20 சத வீதம் குறைக்கப்பட்டு 2240 ஆக மாற்றப்பட்டது. இலங்கைக்கு மாத்திரமல்ல, சர்வதேச ரீதியாக இந்த மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

➡ 08

எங்கள் தேசம் சந்தா விபரம்

உள்நாடு
தனிப்பிரதி: 30.00
வருட சந்தா: 1200.00
ஆறு மாதங்கள்: 600.00

வெளிநாடு
இந்தியா, பாகிஸ்தான், மாலைதீவு, மலேஷியா, சிங்கப்பூர்:3600.00
மத்திய கிழக்கு நாடுகள்: 3750.00
அவுஸ்திரேலியா, தென்கொரியா: 4700.00
இங்கிலாந்து: 5750.00, அமெரிக்கா, கனடா: 6900.00, ஜப்பான்: 4800.00

எங்கள் தேசத்துக்கு காசுக்கட்டளை அனுப்ப விரும்புபவர்கள்: காசுக்கட்டளை பெறுவோர், Engal Thesam, தபால் நிலையம் Dematagoda எனவும் குறிப்பிட்டு அனுப்பவும். முகவரி: 77, Dematagoda Road, Colombo - 09
Accont Name: SLJEI | Bank Account No. BOC: 372132 | Commercial Bank: 1320009182

தொடர்புகளுக்கு: 077 2992220

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மைத்திரி VS மஹிந்த வெற்றி யாருக்கு?

- ஹெட்டி ரம்ஸி -

**ரா**ஜபக்ஷ கட்டவுட்கள் இன்று நாட்டின் எல்லா இடங்களிலும் மழை பொழிந்த தன் பின் பூமியில் காளான்கள் தோன்றுவது போல் முளைக்க ஆரம்பித்துள்ளன. ஆனாலும் ராஜபக்ஷ அணியில் கட்டவுட்களை அமைத்து அவற்றுக்கான வாசகங்களைப் பொறிப்பவர்களுக்கு இம்முறை பிரச்சினையுள்ளது போல் தெரிகிறது. மூன்றாவது தடவையாகவும் ராஜபக்ஷ உருவத்தை வாக்காளர்களுக்கு விற்பது எப்படி? அது இலகுவான விடயமொன்றல்ல. காரணம், மறுபுறத்தில் மைத்திரி எனும் உருவம் மிக அழகிய முறையில் விற்பனை செய்யப்படுகிறது. அன்பான ஆட்சி, உண்மையான மாற்றம், ஊழலற்ற அரசு, சுயாதீனமான நீதித்துறையும் பொலிஸ்துறையும் என்று இவை மக்களை மிகவும் ருசிப்படுத்துகின்ற, வெகுவாகக் கவருகின்ற சுலோகங்கள். மைத்திரியின் உருவத்தை விற்பது இலகு. ஆனால் மஹிந்த என்னும் உருவத்தை விற்பது அவ்வளவு இலகுவான காரியமல்ல.

அப்படியென்றால் யுத்த வெற்றி? நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு மேற்கொண்ட வேலைத்திட்டங்கள்? இங்குதான் அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டும் பிரச்சினையொன்று மேலெழுகிறது. அரசியல் ஆய்வாளர்களின் கருத்தின்படி இன்னும் ஆறு வருடங்களுக்கான ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு கடந்த ஆறு வருடங்களுக்குள் செய்த விடயங்களைச் சொல்லிப் பிரயோசனமில்லை. எதிர்வருகின்ற ஆறு வருடங்களுக்குள்ளால் செய்யப் போகின்ற விடயங்களைப் பற்றியே சொல்ல வேண்டும். ராஜபக்ஷவினுடைய ஆட்சிக் காலப் பகுதியில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் சகலரையும் திருப்திப் படுத்துவதாய் இல்லை.

ஹம்பாந்தோட்டையில் செய்த அபிவிருத்திகளை ஏன் எமது பிரதேசத்தில் செய்யவில்லை என ஏனைய பிரதேசங்களிலுள்ள மக்கள் கேட்பார்கள். ராஜபக்ஷவினுடைய அபிவிருத்திகள் ஜே.ஆர். உம் பிரேமதாஸவும் மேற்கொண்ட அபிவிருத்திகளை விடவும் வித்தியாசப்படுகின்றன. ஜே.ஆர்., பிரேமதாஸ போன்றோர் மேற்கொண்ட மஹாவலி அபிவிருத்தித் திட்டம், பத்து இலட்சம் வீட்டுத் திட்டம் போன்றவற்றினால் சகல இலங்கை வாழ் பிரஜைகளும் பிரயோசனம் பெற்றனர். இவ்வாண்டில் கடந்த சில மாதங்களாக சில பகுதிகளில் வரட்சி நிலவியது. மஹாவலித் திட்டத் தண்ணீர் இல்லாது போயிருந்தால் நாட்டு மக்களுக்கு உண்பதற்கு அரிசி கிடைக்காமல் போயிருக்கும். ஆனால் ஹம்பாந்தோட்டையில் ஒரு துறைமுகம் அமைக்கப்பட்டது, காலியிலிருந்து ஹம்பாந்தோட்டைக்கு பயணிப்பதற்கு அதிவேக நெடுஞ்சாலை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது என்றால் கீழ்த்தட்டு மனிதன் எவ்வாறு சந்தோஷப்படுவான். இதுவே முறையான அபிவிருத்திகளினதும் முறையற்ற அபிவிருத்திகளினதும் பிரதிபலனாகும். இதனை முறையாகக் கையாள்வதில் ராஜபக்ஷ தோற்றுப் போயுள்ளார் என்றே கூற வேண்டும்.

ரணில் வடக்கில் புதியதொரு யுத்தத்தைத் தொடக்கவுள்ளார். மேற்கத்தேய நாடுகளுக்கு கூஜா தூக்குவதற்காகவே மைத்திரி பொது வேட்பாளரானார். இது போன்ற கருத்துக்களையே ஆளும் கட்சி இன்று அரசியல் தளத்தில் பரப்பி வருகின்றது. இவை நகைப்புக்கிடமான சொல்லாடல்கள் என்று பொதுமக்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. நாட்டில் யுத்தமொன்று நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது சமாதானத்தையும் யுத்த நிறுத்தத்தையும் ஏற்படுத்தத் துணிந்த ரணில் மீண்டும் ஏன் யுத்தம் ஒன்றைத் துவக்க வேண்டும்? மக்கள் விடுதலை முன்னணியும் ஹெல உறுமயவும் மேற்கத்தேய சூழ்ச்சிகளுக்கு அடி பணியுமா? இத்தகைய கேள்விகளுக்கு முன்னால் அத்தகைய கேள்விகளும் கருத்துக்களும் செல்லுபடியற்றதாகின்றன.

எதிரணிகளின் பொது வேட்பாளராகவுள்ள மைத்திரிபால பல எண்ணற்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளார். இவர் எதிர்கொள்கின்ற பிரதான பிரச்சினையாக இருப்பது, கந்தையான ஆடைகளை மீண்டும் மீண்டும் ஒட்டுப் போட்டு காலம் கழிக்கும் ஒரு நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்குகள் அவருக்கு மிக முக்கியமானவை. ஆனால் ஐ.தே.க. தலைவர் அரசியல் மேடைகளில் அர்த்தமற்ற விடயங்களை உழறி வருகிறார். அவர் ஒருமைப்பாட்டு வாதம் ஒன்றைப் பற்றிப் பேசி வருகிறார். லியுஜெட் அரசனுக்கு புத்தபெருமான் போதித்த விடங்களைப் பற்றிக் கூறி வருகிறார்.

➡16

# நாட்டை அழிவின் விளிம்பில் நிறுத்தியுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை

மஸிஹூத்தீன் இனாமுல்லாஹ்



**அ**மெரிக்காவினதும் பிரான்ஸினதும் அரசியலமைப்பிலுள்ள சாதகமான நிறைவேற்று அதிகாரங்களை உள்ளடக்கி உலகில் எங்குமே இல்லாத சர்வாதிகார ஜனாதிபதியை தோற்றுவிக்கும் அரசியலமைப்பை 1978 இல் ஜே.ஆர். ஜெயவர்த்தன அறிமுகம் செய்தார்.

ஆனால், அந்த நாடுகளிலுள்ள செனட், லெஜிஸ்லேசர் மற்றும் ஏனைய பொது சேவைகள், இராணுவ, காவல் துறை, தேர்தல், நீதித்துறை, ஊடகம் என்பவற்றின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துகின்ற உத்தரவாதங்கள் இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்படவில்லை.

இனப் பிரச்சினைக்கான தீர்வு, யுத்தம், சமாதானம் என்ற விடயங்களில் தீர்க்கமான முடிவுகளை எடுத்துக் கொள்வதற்கான அவசரத் தேவைக்காகவே ஜே.ஆர். தான் பதவிக்கு வருமுன்பே இவ்வாறான ஓர் அரசியல் யாப்பை அறிமுகப்படுத்தினார்.

யுத்தமாக இருப்பினும் சமாதானமாக இருப்பினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை ஜே.ஆர். ஜெயவர்த்தனவினால் மிகவும் கவனமாகவே கையாளப்பட்டது. அன்று இந்திய- இலங்கை உடன்படிக்கையை கைச்சாத்திட்டு அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தை மேற்கொண்டு மத்தியிலுள்ள அதிகாரங்களை மாகாணங்களுக்கு பகிர்வதற்கு நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறை உதவியது. என்றாலும் அரசியல் ரீதியாக ஜே.ஆர். நிறைவேற்று அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்த சந்தர்ப்பங்களும் இருந்தன.

பின்னர், ஜனாதிபதி பிரேமதாஸ இந்தியப் படைகளை திருப்பி அனுப்பவும் தனி நாட்டு பிரகடனத்துடன் வடகிழக்கு மாகாண சபையினை கலைக்கவும் உள்நாட்டு கலவரங்களை அடக்கவும் அதனை பயன்படுத்தினார். தனியாளை மையப்படுத்திய சர்வாதிகார ஆட்சிமுறை ஒன்றை நோக்கி பயணிக்க முற்பட்ட பொழுதே காமினி, லலித் உற்பட பல சிரேஷ்ட உறுப்பினர்கள் கட்சியை விட்டு வெளியேறினர்.

சந்திரிகா அம்மையார் மேற்படி நிறைவேற்று அதிகாரங்கள் குவிந்த ஜனாதிபதி முறையை இல்லாமல் செய்வதாக பிரகடனம் செய்து பதவிக்கு வந்து புதிய அரசியலமைப்பிற்கான உத்தேச வரைபினை அமைச்சர் அஷ்ரஃப் ஊடாக பாராளுமன்றில் சமர்ப்பித்து அது அன்றைய பிரதான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் கிழித்து வீசப்பட்டு நிராகரிக்கப்பட்டது முதல் அவர் பதவி விலகும் வரை நிறைவேற்றதிகார முறையை மாற்றவில்லை.

என்றாலும், 2000 மற்றும் 2002 காலப் பிரிவில் அரசியல் ரீதியாக நிறைவேற்று அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்த அவர், ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது, நோர்வே ஊடாக மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்கு ஆதரவை வழங்கி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் ஒன்றை விடுதலைப் புலிகளுடன் மேற்கொள்ள நிறைவேற்று அதிகாரத்தை உபயோகித்தார்.

இறுதியாக, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் பதவியேற்றவுடன் சகல சமாதான முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்கவும் யுத்தத்தின் மூலம் பயங்கர வாதத்தை ஒழிப்பதற்கான முடிவை எடுக்கவும் நிறைவேற்று அதிகாரங்களை உச்சளவில் பயன்படுத்தினார்.

அத்தோடு, தற்காலிகமாக இணைந்திருந்த வடக்கு - கிழக்கு மாகாணம் நீதிமன்றத்தினூடாக இரண்டாக பிரிக்கப்பட்டது, யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது போன்ற விடயங்களில் நிறைவேற்றதிகாரம் பயன்படுத்தப்பட்டதுடன் திவிநெகும போன்ற சட்ட மூலங்களை அறிமுகப்படுத்தி மாகாண சபைகளின் அதிகாரங்கள் பறிக்கப்பட்டது முதல் வடகிழக்கில் இராணுவ மயமாக்கல், பல்வேறு நோக்கங்களுக்காக காணி சுவீகரிப்பு, திட்டமிட்ட குடியேற்றங்கள் என பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் நிறைவேற்று அதிகாரம் அபரிமிதமாக பயன்படுத்தப்படுகிறது.

நிறைவேற்று அதிகாரத்தை மட்டுப்படுத்தி பொதுச் சேவைகள், காவல்துறை, நீதித்துறை,

➡08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் மீடியா போரத்தினால் ஊடகவியலாளர்களுக்கு செயலமர்வு



ஏ.எஸ்.எம். ஜாவித்

ஸ்ரீ முஸ்லிம் மீடியா போரத்தின் ஏற்பாட்டில் 'இலங்கை முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்களும் அவற்றை எதிர் கொள்வதில் ஊடகவியலாளர்களின் பங்கும்' என்ற தொனிப் பொருளில் ஊடகவியலாளர்களுக்கான ஒரு நாள் கருத்தரங்கு தெமடகொட நிதா உல் கைர் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் போரத்தின் தலைவர் என். எம். அமீன் தலைமையில் இடம் பெற்றது.

மேற்படி நிகழ்வில் நிதா உல் கைர் நிறுவனப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் நவ்பர் (கபூரி), பாராளு மன்ற ஆய்வு அதிகாரி எம். அஜ்வதீன், எம்.பி.எம். பைறுஸ் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

மேற்படி நிகழ்வில் அதிதிகளாக சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா, புரவலர் ஹாஸிம் உமர் ஆகியோர் கலந்து கொண்டு கருத்தரங்கில் பங்குபற்றியவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தனர்.


# கல்முனையில் வெள்ளம்



எஸ்.எம்.எம். றம்ஸான்

கல்முனைப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பெய்யும் மழை காரணமாக அதிகமான வீடுகளினுள் வெள்ள நீர் உட்புகுவதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

கல்முனைப் பகுதியில் வடிகான்கள் சீரற்றுக் காணப்படுவதனாலேயே இந்நிலை தோன்றியதாகவும் அதை உரியவர்கள் சீர் செய்கிறார்கள் இல்லையெனவும் இப்பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். ஒவ்வொரு வருடமும் மாரி காலம் வந்தால் இவ்வாறான பிரச்சினைகளை தொடர்ந்தும் எதிர் நோக்குவதாகவும் வடிகான்களை உரிய முறையில் சீர் செய்யுமாறும் மக்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.



மாகாண மற்றும் தேசிய கலை இலக்கிய போட்டியில் பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கல்முனை பிரதேச கலாசார உத்தியோகத்தர் வி. பற்பராசா தலைமையில் இடம் பெற்றது. இதில் பிரதம அதிதிகளாக கல்முனை பிரதேச செயலாளர் ஏ. மங்களராச்சி, சிரேஷ்ட முகாமைத்துவ உத்தியோகத்தர் ரம்சான், கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் ஜெஸுர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எல்.ஏ. அஸீஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். 50 போட்டியாளர்கள் இதில் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றனர்.

படமும் தகவலும்: எம். ஹாத்தீம்

# ஜமாஅத்தே இஸ்லாமியினால் இலவச மருத்துவ முகாம்



அஹமட் இர்ஸாட்

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஓட்டமாவடி மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இலவச மருத்துவ முகாம் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

தொடர்ந்தேர்ச்சியாக பெய்து வருகின்ற அடைமழை காரணமாக கல்குடா பிரதேசத்தில் வைரஸ் நோய் தொற்றுக்கள் அடங்கலாக பல்வேறு நோய்களுக்கு பொதுமக்கள் முகம் கொடுத்து வருகின்றனர். இதனை கருத்தில் கொண்ட இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் ஓட்டமாவடி மன்றமானது, திடீர் நோய் தொற்றுக்களில் இருந்து பொதுமக்களை பாதுகாக்கும் முகமாக நிவாரணத்துக்கும் அபிவிருத்திக்குமான செரண்டிப் நிறுவனத்தின் உதவியின் மூலம் இந்த இலவச மருத்துவ முகாம் நடத்தப்பட்டது.

# காத்தான்குடி அஷ்ஷுஹதா வித்தியாலயத்தின் நாற்பெரும் விழா



மட்டக்களப்பு காத்தான்குடி அஷ்ஷுஹதா வித்தியாலயத்தின் நாற்பெரும் விழா காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

அஷ்ஷுஹதா வித்தியாலயத்தின் அதிபர் எஸ். அப்துல் அஸீஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சிப்லி பாரூக் கலந்து கொண்டார்.

இதன்போது புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவர்கள், பல்வேறு போட்டிகளில் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள், அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள், முன்னாள் பாடசாலை அதிபர்கள் ஆகியோர் அதிதிகளினால் விருதும் சான்றிதழும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமாவின் தலைரும், காழி நீதிபதியுமான மௌலவி எஸ்.எம். அலியார் (பலாஹி), காத்தான்குடி பிரதேச கோட்டக் கல்வி அதிகாரி எம்.ஏ.சீ.எம். பதுறுதீன், மட்டக்களப்பு மத்தி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.எம். இப்றாஹீம் உட்பட உலமாக்கள், ஊர்ப் பிரமுகர்கள்,கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## 'எங்கள் தேசம்' இலச்சினை மாற்றம் செய்தல்

எங்கள் தேசம்

எங்கள் தேசத்தின் இலச்சினை (Master Head) போதியளவு கவர்ச்சிகரமானதாக இல்லை என்றும் எங்கள் தேசத்தின் பழைய இலச்சினை பொருத்தமாக உள்ளதாகவும் வாசகர்களிடமிருந்தும் ஊடகவியலாளர்களிடமிருந்தும் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டமையால் இவ்வேண்டுகோளுக்கு இணங்க மாற்றம் செய்ய எங்கள் தேசம் ஆசிரியர் பீடம் தீர்மானித்துள்ளது. இதனடிப்படையில் ஜனவரி முதல் பிரதியிலிருந்து ஏலவே பயன்படுத்தப்பட்ட இலச்சினையுடனான வடிவமைப்பில் எமது பத்திரிகை வெளிவரும் என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

ஆசிரியர் பீடம் – எங்கள் தேசம்



தெல்தோட்டை மெதகெகில ரவ்ளதுல் அத்பால் பாலர் பாடசாலையின் 7 ஆவது பரிசளிப்பு விழா மெதகெகில ஸ்ரேஞ்சஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் அதன் பணிப்பாளர் அல்ஹாஜ் எச்.எம்.எம். இல்யாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் அரங்கேற்றப்பட்டதோடு, மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

தெல்தோட்டை ஹரீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அரசியல் எதிரிகள் நண்பர்களாகும் தேர்தல் களம்



எம்.எச்.எம். ஹஸன்

ஆட்சி முறை மாற்றத்தை நோக்கி இணையும் பிரிவினர் நாளுக்கு நாள் ஆச்சரியப்படத்தக்க வகையில் அதிகரித்து வருகின்றனர். அதிகாரச் சேற்றில் புரையோடிப் போயுள்ள அரசியல் நிறுவனங்களை வரும் ஜனாதி பதித் தேர்தலில் மாற்றியமைக்கும் முயற்சிகள் தீவிரமாக முன்னெடுக் கப்படுவதைக் காண முடியும்.

மூன்றாவது தடவையாகவும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக வருவதற்கான, காத்திரமான எந்தக் காரணமும் புதிதாக முன்வைக்கப்பட வில்லை. புதிய கருத்துக்கள், திட்டங்கள் எதுவும் கிடையாது. தனிப்பட்ட முறையில் பொது வேட்பாளருக்கும் அவரது அணியில் உள்ளோருக்கும் எதிராக ஊடகத்தைப் பயன்படுத்தி சேறு பூசும் நடவடிக்கைகள் மட்டுமே



தொடர்கின்றன. ஒன்பது வருடங்கள் ஆட்சி செய்து இன்னும் இரண்டு வருடங்கள் எஞ்சியிருக்கும் நிலையில் அவசரத் தேர்தல் எதற்கு என்ற விடயமும் விளக்கப்படவில்லை. புதிதாக எத்திட்டமும் மாற்றமும் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும் அற்றதாகவே அரசு காணப்படுகிறது. இதன் கருத்து அரசின் முன்னேற்றப் பாதை ஸ்தம்பிதம் அடைந் துள்ளது என்பதாகும். அவர்களின் புத்தாக்கத்திறன் முடிந்து விட்டது என்பதாகும். மூன்றாம் முறையும் தானே ஜனாதிபதியாக வர வேண்டும் என்பதைத் தவிர வேறெந்தக் காரணமும் முன்வைக்கப்பட்டதாகத் தெரியவில்லை. யுத்தத்தை வென்றெடுத்து நாட்டை மீட்டமைக்கு நன்றிக் கடனாக மீண்டும் வாக்களிக்கும்படி மட்டும்தான் கோரப் பட்டுள்ளது. மக்களின் பக்கத்தில் அதற்கான நன்றிக் கடனை ஏலவே 2010 இல் செலுத்தி விட்டதாகத்தான் கூறப்பட்டுள்ளது.

இதுவரை நடைபெற்ற எந்தவொரு தேர்தலை விடவும் இது மாறுபட்ட ஒன்றாகவே காணப்படுகிறது. யார் யாருடன் கூட்டுச் சேர்கிறார்கள் என்பதை எதிர்வுகூற முடியாதளவுக்கு வானிலை மாற்றத்தை விட வேகமாக அரசியல் களம் மாற்றமடைகின்றது. ஜனாதிபதி ஆட்சிமுறை தேவையா, இல்லையா என்று இலங்கை மக்கள் இரண்டாகப் பிரிந்து வாக்களிக்கப் போகிறார்கள். இதுவரை அரசியல் பரப்பில் நண்பர்களாக இருந்தவர்கள் எதிரிகளாகவும் எதிரிகளாக இருந்தவர்கள் நண்பர்களாகவும் இணைந்து அணியை பலப்படுத்தும் பணிகள் வேகமடைந்துள்ளன.

பொதுபல சேனாவின் அட்டகாசங்கள் அதிகரித்துப் போயிருந்த நிலையில் இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு எங்கிருந்தோ ஓர் ஆறுதல் வந்துள்ளமை தெரிகிறது. இரண்டு வருடங்களாக இலங்கை முஸ்லிம்கள் அனுபவித்த மானசீகக் கொடுமைகள் போன்று முன்னெப்போதும் நிகழ்ந்ததில்லை. ஆயிரம் வருடங்களாக பல்வேறு நிலைகளை எதிர்கொண்டு பழகிய ஒரு சமூகம் அரச ஆதரவு பெற்ற பௌத்த சிங்கள தீவிரவாதிகளின் அச்சத்திலும் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வாழ வேண்டியேற்பட்டது. இங்கும் ஒரு பர்மா உருவாகுமோ என்று பயந்த நிலையில் பள்ளிவாசல்களில் குனூத் ஓதி, ரமழானிய இரவுகளில் பிரார்த்தனை கள் புரிந்து, ஹஜ் உம்ராக்களில் விசேட பிரார்த்தனைகள் என்று ஆன்மிக ரீதியான முயற்சிகள் மட்டுமன்றி, பௌதிக ரீதியான பல முயற்சிகளும் நடைபெற்றுள்ளன. ஜம்இய்யத்துல் உலமாவும் வேறு பல சிவில் அமைப்பு களும் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு செயலாளர் ஆகியோரை சந்தித்தன. ஹர்த்தால்கள் கடையடைபுகள் தொடர்ந்தன. பல சிங்கள அமைச்சர் களைச் சந்தித்தன. வெளிநாட்டு ஊடகங்களில் கூட பல செய்திகள் வந்தன. மனித உரிமைகள் ஆணைக் குழு செய்திகள் கசிந்தன. ஆனால் நிலைமையில் மாற்றம் வரவில்லை. எங்கிருந்து வரும் மாற்றம், யார் இதனைச் செய்வார்? என்று செய்வதறி யாது அங்கலாய்த்துக் கொண்டிருந்த நிலையில்தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் முகாமிலிருந்து ஒரு மனிதர் சமாதானப் புறாவுடன் களமிறங்கினார். எல்லோரது உள்ளங் களையும் மாற்றும் அல்லாஹ்வின் சக்தி மிகைத்துவிட்டது. தேர்தல் நடைபெற முன்பே வெற்றி, தோல்வி தெரிய முன்பே முஸ்லிம் மக்களின் மனதில் ஓர் ஆறுதல், ஓர் அமைதி தெரியத் தொடங்கியுள்ளது.

இந்த நிலைமையில் யாரும் எதிர்பார்க்காத மாற்றங்கள் நடைபெற்றன. பொது பல சேனாவும் றிஷாட் பதியுதீனும் ஒரே அணியில் நிற்கும் நிலையை யார்தான் எதிர்பார்த் தார்கள்? முஸ்லிம்களின் உரிமைகளுக் கென்று குரல் கொடுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் அரசோடு இருக்கும் போதே அக்கட்சியினை புறக்கணித்து மக்கள் எதிர்க்கட்சிக்கு வாக்களிக்க துணிந்திருக்கும் நிலைமையை யாரும் எதிர்வுகூறக் கூடியதா? ஹெல உறுமய வும் கபீர் ஹாசிமும் கைகோர்த்து நிற்கும் காட்சியை நாம் கற்பனை செய்தோமா? ஹெல உறுமயவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் மனோ கணேசனும் ஓர் அணியில் நின்று வாக்களிக்கப் போவதை யாரும் எதிர்பார்த்தார்களா? போகிற போக்கில் மேலும் பல அதிர்ச்சி தரும் மாற்றங்கள் நடந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

அரசின் அமைச்சர்கள் பலரும் வெறும் பார்வையாளர்களாகவே இருப்பது தெரிகிறது. மிகச் சிறிய தொகை அமைச்சர்களே ஜனாதிபதியுடன் இணைந்து குரல் கொடுக்கின்றனர். முஸ்லிம் காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் எதிரணியில் சேராமலே அக்கட்சிகளின் வாக்குகள் மட்டும் எதிரணிக்குப் போகும் நிலை உறுதியாகி விட்டதாகப் பேசப்படுகின்றது.

பொதுபல சேனா, ராவணா பலய, சிஹல ராவய என்றும் வேறு பல பெயர் களிலும் முஸ்லிம்களின் உடைகள் பற்றி, ஹலால் உணவு பற்றி, பள்ளிவாசல்கள் பற்றி, தொழில் மற்றும் விவசாயம் பற்றி மட்டுமன்றி குர்ஆன் பற்றியெல்லாம் இழிவாகப் பேசியபோது இந்நாட்டு முஸ்லிம்கள் எந்தளவுக்கு மன வேதனைப் பட்டார்கள் என்று முஸ்லிம்களுக்கும் படைத்த நாயகனுக் கும்தான் தெரியும். கஃபதுல்லாஹ்வுடன் பன்றியின் படத்தை இணைத்தார்கள். தொழும் இடத்தில் பன்றித் தலையைப் போட்டார்கள், முஸ்லிம் கிராமங்களுக் குத் தீ வைத்தார்கள், பள்ளிவாசல்களை, கடைகளை உடைத்தார்கள். அப்போதெல்லாம் எதுவும் நடக்காததைப் போல மௌனம் காத்த அரசாங்கத்தை எப்படி மாற்றுவது என்பது யாருக்கும் தெரியவில்லை. சிங்கள பௌத்தர்களின் ஏகோபித்த ஆதரவில் அரசாங்கம் இருப்பதால் ஒரு தேர்தல் மூலம் நிலைமையை மாற்றலாம் என்று தோன்றவில்லை. ஆனால் இன்று இது முஸ்லிம்களின் பிரச்சினையாக இல்லை; இந்நாட்டின் ஜனநாயக விரும்பிகளின் பிரச்சினை யாக மாறிவிட்டது. தீவிர சிங்கள இனவாத அமைப்பு என்று கருதப்பட்ட ஹெல உறுமயவின் அத்துருலியே ரத்ன தேரர், சம்பிக்க ரணவக்க இன்று ஜனாதிபதியைத் தோற்கடிக்கும் போராட்டத்தில் முனைப்புடன் செயற்படுகின்றனர்.

2005 இல் ஜனாதிபதியை வெற்றி பெறச் செய்ய ஜே.வி.பி. யும் 15 வருடங்கள் சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, நல்லாட்சிக்காக குரல் கொடுத்த மாதுலுவாவே சோபித தேரர், சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரின் மகள் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க என்று யாரும் எதிர்பார்க்க முடியாத சிங்கள பௌத்த அமைப்புகள், தனி மனிதர்கள் அணி திரண்டிருப்பது ஒரு நம்ப முடியாத கூட்டணி போல் தோன்றுகிறது. இன்று அது யதார்த்தமாகி விட்டதைக் கண்கூடா கக் காண்கின்றோம்.

முழுமையாக இன்னும் இரண்டு ஆண்டுகள் எவ்விதத் தடங்கலுமின்றி நிறைவேற்று அதிகாரத்தை அனுபவிக்கச் சந்தர்ப்பம் இருக்கும்போது தொடர்ந்து 8 வருடங்கள் பதவி வகிக்கும் நோக்கில் களமிறங்கிய ஜனாதிபதி கனவிலும் எதிர்பார்க்காத வகையில் கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதை போல அவரின் முகாமிலிருந்து மைத்திரிபால சிறிசேன உதிர்த்தெழுந்துள்ளார். இப்போது யார் வெற்றி பெறப் போகிறார் என்ற கருத்துக் கணிப்புகள் தாராளமாக நடைபெறுகின்றன. வட மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களும் கிழக்கு மாகாண த்தில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்க ளும் சிறுபான்மையினரைப் பெரும் பான்மையாகக் கொண்ட மாவட்டங்கள் என்பதனால் அங்கு அளிக்கப்படும் வாக்குகளில் 80% இற்கு மேல் மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவாக விழும் என்று கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் துறையில் ஏற்பட்டு வரும் கட்சி மாற்றங்களுடன் பார்க்கும்போது கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை ஆகிய மாவட்டங்களில் ஐம்பது வீதத்துக்கு மேற்பட்ட வாக்குகள் அன்னப் பறவைக்கு விழும் சாத்தியமும் காணப்படுகின்றது. சிறுபான்மையினர் அதிகமாக வாழும் கொழும்பு மாவட்டம், களுத்துறை மாவட்டம் மைத்திரிபாலவின் சொந்த மாவட்டமான பொலன்னறுவை, துமிந்த திஸாநாயக்கவைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அனுராதபுர மாவட்டம் அணிதிரளும் பாணியைப் பார்க்கும்போது அந்த மாவட்டங்களின் நிலைமையும் பெது வேட்பாளருக்கு சாதகமாகவே இருக்கும் என்றும் எதிர்வு கூறப்படுகின்றது. இதுவரை நடைபெற்றுள்ள சகல கருத்துக் கணிப்புகளின்படியும் தென் மாகாண த்தின் மூன்று மாவட்டங்களும் இரத்தினபுரி மற்றும் மொனராகலை மாவட்டமும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு பெரும்பான்மை ஆதரவு கிடைக்கக் கூடியதாக இருப்பதாகவும் கேகாலை, கம்பஹா, மாத்தளை மாவட்டங்கள் மட்டுமட்டாக இருப்பதாகவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. ஜனாதிபதி ஆதரவு அதிகமாக உள்ள மாவட்டங்களில் கூட அவருக்கான ஆதரவு 60% இற்கும் குறைவாகவே இருப்பதாகவும் ஆனால் மைத்திரிக்கு ஆதரவுள்ள வடக்கு - கிழக்கு மாகாணங்களின் ஆதரவு 80% அளவுக்குச் செல்லும் என்றும் கூறப்பட்டுள்ளது.

கள நிலைமை இவ்வாறு இருக்கும்போது ஐ.தே.க. யின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. ஜனாதிபதியுடன் இணைந்து கொண்டமை பற்றியும் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. 24 வருடங்கள் எதிர்க்கட்சியில் இருந்துவிட்டு தங்களுக்கு சார்பான ஓர் ஆட்சி மாற்றம் கண்ணுக்கெட்டும் தொலைவில் இருக்கும்போது இன்னும் பல வருடங்கள் எதிர்க்கட்சியில் இருப்பதைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாரா அல்லது இனியாவது அமைச்சர் அந்தஸ்தை அனுபவிக்கப் போகிறாரா என்பதை ஜனவரி 8 ஆம் திகதிக்குப் பின்புதான் முடிவு செய்யப் போகிறார். எதிர்க்கட்சிக்கு மாறிய சுதந்திரக் கட்சி செயலாளருக்கு ஜனாதிபதி வேட்பாளர் அந்தஸ்து யூ.என்.பி. இல் இருந்து அரசுக்கு மாறிய செயலாளருக்கு வெறும் அமைச்சர் பதவிதான் என்று அவரே அலுத்துக் கொள்ளும் நிலையும் இருக்கவே செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிகளாரின் சுன்னாவும் சட்டவாக்கமும்



மூலம்: கலாநிதி யூசுப் அல்கர்ளாவி
மொழியாக்கம்: அஷ்ஷெய்க் எம்.எப். ஸைனுல் ஹுஸைன் (நளீமி)

(தொடர் 54)

கலாநிதி யூஸுப் அல்கர்ளாவி அவர்கள் எழுதிய "அஸ்ஸுன்னா மஸ்தரன் லில் மஃரிபா வல் ஹழாரா" (அறிவுக்கும் நாகரிகத்திற்குமான அடிப்படை என்ற வகையில் சுன்னா) என்ற நூலின் மொழிபெயர்ப்புத் தொடர்.

**அகீதாவின் கிளை அம்சங்களை ஸஹீஹான ஹதீஸ் மூலம் உறுதி செய்ய முடியும்**

இங்கு அகீதா என்ற சொல்லின் மூலம் நாடப்படுவது அதுனுடன் தொடர்பான மண்ணறையில் மலக்குமாரின் விசாரணை, அங்கு வழங்கப்படும் வேதனை, இன்பம், மறுமை நாளில் அல்லாஹ்வை கண்களால் பார்த்தல், கியாமத் நாளில் பெரும் பாவிகளுக்கான ஷபாஅத், அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டவர்கள் பாவமீட்சி தேடாத பாவங்களுக்காக தண்டனை பெற்ற பின் நரகிலிருந்து வெளியேறுதல், சிராத் மற்றும் செயல்களை நிறுத்தல் போன்ற அல்குர்ஆன் பேசாத நம்பகமான சுன்னாவில் வந்துள்ள அல்லது அல்குர்ஆன் தெளிவாக சொல்லாத விடயங்கள் என நாம் அர்த்தம் கொண்டால் பின்வரும் முடிவுகளுக்கு வர முடியும்:

நம்பகமான வழிமுறை மூலம் எம்மை வந்தடைந்த, தெளிவான கருத்தைக் காட்டக் கூடிய ஹதீஸின் மூலம் இத்தகு விவகாரங்கள் உறுதி செய்யப்பட்டிருந்தால் நிபந்தனை ஒன்றுடன் அவற்றை ஏற்றுக் கொள்ள முடியும் என அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆவைச் சேர்ந்த அறிஞர்கள் ஏகமானதாக ஏற்றுக்கொண்டுள்ளனர். பகுத்தறிவின் வட்டத்திற்குள் அவை அமைந்திருக்க வேண்டும் என்பதே அந்நிபந்தனையாகும். அதாவது பகுத்தறிவின் பார்வையில் அசாத்தியமானவையாக அவை இருக்கக் கூடாது.

இமாமுல் ஹரமைன் அபுல் மஆலி அல்ஜுவைனி அவருடைய 'லுமஉல் அதில்லா பீ கவாயிதி அகாயிதி அஹ்லுஸ் ஸுன்னா வல்ஜமாஆ' என்ற நூலில் பகுத்தறிவு அனுமதித்த ஷரீஆவினால் அங்கீகரிக்கப்பட்ட அனைத்தையும் ஏற்றுக் கொள்வது கடமையாகும் என்று கூறுகின்றார்.

"மண்ணறை வேதனை, முன்கர் நகீரின் விசாரணை, மண்ணறையில் மாண்டவருக்கு ஆத்மா மீள வழங்கப்படல், சிராத், மீஸான், ஹவ்ல், பாவிகளுக்கான ஷபாஅத் போன்றன ஷரீஆவினால் உறுதிப்படுத்தப்பட்டனவாகும். அவை அனைத்தும் சத்தியமானவையாகும்"

இமாம் கஸ்ஸாலி இதனை 'அல் இக்திஸாத் பில் இஃதிகாத்' என்ற நூலிலும் 'இஹ்யாவில் கவாயிதுல் அகாயித்' என்ற பகுதியிலும் உறுதி செய்துள்ளார்.

அகீதா துறையில் ஆக்கங்களை எழுதிய அஷ்அரிய்யா மற்றும் மாத்ரீதிய்யா சிந்தனைப் பிரிவைச் சேர்ந்த அறிஞர்கள் இவ்வழி முறையை பின்பற்றியுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது 'ஸஹீஹான ஹதீஸ் மூலம் உறுதி செய்யப்பட்ட மண்ணறை மற்றும் மறுமை நாளின் நிலைமைகளில் சிலவற்றை மறுதலிக்கும் முஃதஸிலாக்களுக்கு அவர்கள் பதிலளித்துள்ளனர். முஃதஸிலாக்களை அவர்கள் கடுமையாக சாடியுள்ளதை அவர்களது புத்தகங்களை வாசிப்போர் மிக தெளிவாக விளங்கிக் கொள்வர்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் சமகாலத்தில் சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அஷ்அரிய்யா மற்றும் மாத்ரீதிய்யா சிந்தனைப் பிரிவுகள் ஸஹீஹான ஹதீஸ் மூலம் அகீதா விடயங்களை உறுதி செய்ய முடியும் என்ற விடயத்தில் உடன்பாடான கருத்தைக் கொண்டுள்ளன. அல்அஸ்ஹர், அஸ்ஸைதூனா, தேவ்பந் போன்ற மார்க்க கலாசாலைகளும் அதன் கிளைகளும் இக்கருத்தையே பிரதிபலித்து நிற்கின்றன. சவூதி அரேபியா அறிஞர்களும் அவர்களைப் பின்பற்றுவோரும் அவர்களால் உருவாக்கப்பட்டோரும் பிரதிநிதித்துவப்படுத்தும் ஹன்பலிய சிந்தனையும் இக்கருத்தையே கொண்டுள்ளது என்பதும் இங்கு ஈண்டு குறிப்பிடத்தக்கது.

**ஏன் சர்ச்சை ஏற்பட்டது?**

ஏன் சர்ச்சை தோன்றி கடின நிலையை அடைந்தது? எதற்காக கூச்சல்கள் மேலிட்டன?

சர்ச்சைக்குள் பின்வரும் இரண்டு காரணிகளில் ஒன்று உள்வாங்கப்படும் போது மாத்திரமே அதற்கான உண்மையான அர்த்தத்தையும் காரணத்தையும் எம்மால் அறிந்து கொள்ள முடியும்.

ஒன்று இங்கு அகீதா என்பதன் மூலம் அதனை மறுப்போரை நிராகரிப்பாளர்களாக மாற்றும் அகீதா நாடப்பட்டிருக்க வேண்டும். எனவே இந்த வகையில் யார் ஸஹீஹான ஹதீஸ் மூலம் உறுதிப்படுத்தப்பட்ட அகீதாவை மறுதலிக்கின்றாரோ அவர் பெரும் நிராகரிப்பை புரிந்தவர் என தீர்ப்பு வழங்கப்படுவது கடமையாகும். அந்நிராகரிப்பு அவரை மார்க்கத்திலிருந்து வெளியேற்றி விடும்: இன்னும் முஸ்லிம்களின் அணியிலிருந்து அவர் நீக்கப்படுவார் என உணர்ச்சிக்கு அடிமையான சில வாலிபர்கள் கருதுகின்றனர். மூத்தோரில் சிலரும் இக்கருத்தை ஆதரிக்கின்றனர்.

இக்கருத்து பிழையானது என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகம் இல்லை. அஷ்அரிய்யா, மாத்ரீதிய்யா, ஹன்பலிய்யா, முதகல்லிம்கள், முன்னோரின் கூற்றுக்களின் வழி செல்வோர், சட்ட அறிஞர்கள், சூபிக்கள் என அஹ்லுஸ் ஸுன்னாவைச் சேர்ந்த அனைத்துப் பிரிவினரும் கவாரிஜ், முஃதஸிலா போன்ற நூதனக்காரர்களை நிராகரிப்பாளர்கள் என்று கூறவில்லை. அவர்களை மார்க்கத்திலிருந்து வெளியேற்றவுமில்லை. மாற்றமாக அவர்களை பிரபல்யமான சில ஹதீஸ்களை, இல்லை இல்லை சில போது முதவாத்திர் தரத்தை அடைந்தவை என சிலரால் கூறப்படும் ஹதீஸ்களை அவர்கள் மறுத்த போதிலும் நூதனப் (பித்அத்) பிரிவினர் என்ற தீர்ப்பை வழங்கினார்களே தவிர, அதனைத் தாண்டி மேலதிகமாக அவர்கள் எதனையும் செய்யவில்லை.

---

# நாட்டை அழிவின்

(05 ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் கமிஷன் என்பன சுயாதீனமாக செயற்பட கொண்டு வரப்பட்ட 17 ஆவது சட்டத் திருத்தத்தை வலிதற்றதாக்கி, 18 ஆவது திருத்தம் ஒன்றை கொண்டு வந்ததோடு, தனது சர்வாதிகார பதவிக் காலத்தை நீடித்துக் கொள்ளும் நோக்கில், இரண்டு தடவைகளுக்கு மேலும் ஜனாதிபதித் தேர்தலில் பதவியில் இருப்பவர் போட்டி இடுவதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்து கொண்டார்.

இந்தக் காலப் பிரிவில் இரண்டு உயர் நீதிமன்ற நீதியரசர்கள் பதிவி இழந்துள்ளனர். பிரதான இராணுவத் தளபதி சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். பல்வேறு கட்சிகள் சிதைக்கப்பட்டுள்ளன. தேவைக்கேற்ப தேர்தல்கள் காலத்துக்குக் காலம் அரச இயந்திரம் பாவிக்கப்பட்டு நடத்தப்பட்டன. பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் என்ற பெயரில் வெளிநாட்டுக் கடன்கள் பெறப்பட்டு நாட்டின் கடன் சுமை அதிகரித்துள்ளது. இவ்வாறு அரசியலில் மாத்திரமன்றி, நாட்டின் பொருளாதாரத்திலும் கூட நிறைவேற்று அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது.

துரதிஷ்டவசமாக தேசத்திற்கு சகல வகையிலும் சாபக்கேடாக இருக்கின்ற இறுதிக் கட்ட பாய்ச்சலுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாரிய பங்களிப்பினைச் செய்து பலிக்கடாவாகியமை முஸ்லிம் அரசியல் வரலாற்றில் இடம்பெற்ற பாரதூரமான தவறாகும்.

பாராளுமன்றத்தின் அதிகாரங்கள், மாகாண சபைகளின் அதிகாரங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் மாத்திரமன்றி அமைச்சுக்களின் அதிகாரங்களும் பறிக்கப்பட்டு நாடு குடும்ப ஆட்சியை நோக்கி, பாரியளவிலான ஊழல் மோசடி, அதிகார துஷ்பிரயோகம், நிர்வாக சீர்கேடுகள் என இந்த நாடு அதல பாதாளத்தை நோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

இந்த நாட்டின் சாபக்கேடாக மாறியுள்ள அரசியலமைப்பின் பலிக்கடாவாக மக்கள், அரசியல் கட்சிகள், சிறுபான்மையினர் என்று அனைவரும் அகப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த நாட்டிற்கு புதியதோர் அரசியலமைப்பு அவசியமாகிறது. தேசத்தின் தலைவராக மட்டுப் படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் ஒரு ஜனாதிபதியும் பலமான பாராளுமன்றில் அரசினதும் அமைச்சரவையினதும் தலைவராக பிரதமரும் இருக்கின்ற ஓர் அரசியலமைப்பு தேவைப்படுகிறது. சிறுபான்மை சமூகங்களினதும் குழுக்களினதும் பிரதிநிதித்துவங்களை உறுதி செய்கின்ற மீள் எல்லைகளுடன் கூடிய தொகுதி வாரி மற்றும் விகிதாசார தேர்தல் முறையொன்றும் அதிகார பரவலாக்கலை உறுதிப்படுத்துகின்ற பொறிமுறை ஒன்றும் நீதி, பொதுச் சேவைகள், தேர்தல், பொலிஸ், ஊடகம் போன்ற துறைகளின் சுயாதீனத்தை உறுதிப்படுத்துகின்ற நல்லாட்சி விழுமியங்களை, சமய கலாசார தனித்துவங்களை உத்தரவாதம் செய்கிற அரசியலமைப்பே இந்த நாட்டிற்கு அவசியமாகிறது.

இவ்வாறான ஒரு நெருக்கடியான அரசியலமைப்பு மற்றும் வலுவேறாக்கல் சர்ச்சைகள் நாட்டில் இடம்பெறுகின்ற ஒரு கால கட்டத்தில்தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது.

மாற்றங்களை அடுத்தவர்கள் ஏற்படுத்தும் வரை காத்திருப்பவர்கள் சந்தர்ப்பவாதிகள்; மாற்றத்தின் பங்காளர்களாய் இருப்பவகள் சாதனையாளர்கள். எந்தக் குதிரை வெல்கின்றது என்பதை விட எந்தக் கொள்கை வெல்கின்றது என்பதுவே முக்கியம்.

முஸ்லிம்களுக்கு விடுக்கப்பட்டுள்ள சவால்கள் பாரியரசியல் இராஜதந்திர பின்புலன்களை கொண்டுள்ள தேசிய பிரச்சினையாகும். அவை இந்நாட்டின் அமைதி, சமாதானம், ஒருமைப்பாடு, பொருளாதார சுபிட்சம் என சகல அம்சங்களுடனும் தொடர்புபட்டவை. எனவே மிகவும் சாணக்கியமான, சமயோசிதமான தேசிய அரசியல் நகர்வுகளை தேசத்திலுள்ள ஏனைய முற்போக்கு மிதவாத சக்திகளுடன் இணைந்தே நாம் தென்னிலங்கையில் மேற்கொள்ள வேண்டும்.

இந்நாட்டின் அமைதிக்கும் சமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் முஸ்லிம்கள் செய்த வரலாற்றுப் பங்களிப்புகள் மகத்தானவை; கொடுத்துள்ள விலையும் மதிக்க முடியாதவை. சர்வதேச பிராந்திய சக்திகளின் தேவைக்காக உழைக்கும் கூலிப்படைகளை, அரசியல் இராஜதந்திர சதுரங்கத்தில் முஸ்லிம்களை பகடைக் காய்களாக பாவிக்க விரும்புகின்ற சக்திகளை முறியடிப்பதில் நாம் ஒரு போதும் பின் நிற்கக் கூடாது.

இந்த நாட்டில் சட்டம், ஒழுங்கை மதித்து நடக்கின்ற முஸ்லிம்கள் காட்டு தர்பார் நடத்த விரும்புகின்ற எந்த சக்திக்கும் அஞ்சி வாழப் போவதில்லை. ஜனநாயக மரபுகளை மதிக்கும் முஸ்லிம் சமூகம் எந்தவொரு நெருக்கடியான கால கட்டத்திலும் வன்முறையை நாடியதுமில்லை; இனியும் அதற்கான தேவையில்லை.

தெளிவான தேசிய சமூக பார்வையும் கூட்டுப் பொறுப்பும் மூலோபாய திட்டமிடல்களும் இல்லாமல் பயணிக்கும் ஒரு சமூகம் அடுத்தடுத்த சமூகங்களை நொந்து கொள்வதில் அர்த்தமில்லை. தேசமும் சமூகமும் விரும்பும் புரட்சிகரமான மாற்றங்களின் பார்வையாளர்களாக அன்றி பங்காளர்களாக நாமும் இருக்க வேண்டும்.

---

(04 ஆம் பக்கத் தொடர்)

# பள்ளிவாசல்களை வக்பு...

இந்த கோட்டா குறைந்ததன் பிறகு இதனை இலங்கையிலுள்ள ஹஜ் முகவர்களுக்கு பிரித்துக் கொடுப்பதில் பாரிய பிரச்சினை ஏற்பட்டது.

ஹஜ்ஜுக்காக பதிவு செய்த முகவர்களின் எண்ணிக்கை அதிகமாகவும் கோட்டாக்களின் எண்ணிக்கை குறைவாகவும் காணப்பட்டமையே இந்தப் பிரச்சினை எழுவதற்கு காரணமாக அமைந்தன.

**எங்கள் தேசம்:** ஜனாதிபதி அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் ஹஜ் விவகாரத்தில் புதிய நடைமுறை பின்பற்றப்படும் என அறிவித்திருந்தார். அந்த நடைமுறை எவ்வாறாக அமையும்?

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** எதிர்காலங்களில் அவ்வாறான புதிய நடைமுறை வருமாக இருந்தால் அது மிக வரவேற்கத்தக்க விடயம். ஜனாதிபதியின் வழிகாட்டலில் ஒரு தலைமையின் கீழ் இதைக் கையாளுகின்றபோது பிரச்சினைகள் இல்லாமல் செய்து கொண்டு போகலாம். கடந்த இரண்டு வருடங்களில் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு அதுவும் ஒரு காரணமாகவும் அமைந்தது.

**எங்கள் தேசம்:** இலங்கை ஒரு பல்லின மக்கள் வாழ்கின்ற நாடு என்பதால் இன நல்லிணக்கம், சகவாழ்வு போன்றவற்றை ஏற்படுத்த முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் எவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்கிறது?

**அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ஸமீல் (நளீமி):** நாங்கள் ஏனைய சமய திணைக்களங்களின் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்கிறோம். அத்தோடு, கிறிஸ்தவ சமய திணைக்களத்தினால் நடத்தப்பட்ட போட்டியொன்றுக்கு அவர்கள் எமது திணைக்களத்திடம் உதவியாளர்களைக் கேட்டிருந்தார்கள். அதற்கு நாங்கள் 10 அலுவலர்களைக் கொடுத்து உதவி செய்தோம். இதனூடாகவும் ஏனைய சமய திணைக்களங்களோடு உறவுகளை வளர்த்து வருகின்றோம். அதேபோன்று, எதிர்வரும் மாதமளவில் எமது மௌலவிமாருக்கு சிங்கள மொழியைக் கற்றுக் கொடுப்பதற்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளோம். இத்திட்டத்திற்கு முதலில் கிழக்கு மாகாணத்தை தெரிவு செய்துள்ளோம். மற்றைய சமூகங்களோடு உறவுகளை வளர்த்துக் கொள்ள எதிர்காலத்தில் அது வாய்ப்பாக அமையும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




-மலைஞானி



# மலையக வாக்காளர் சமூகம்:

# ஐயாமாரின் கட்டளைக்கு கீழ்படிவது இன்னும் எவ்வளவு காலத்துக்கு?

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் என்ன நிலைப்பாட்டை மேற்கொள்வது என்பதில் மு.கா.வும் இ.தொ.கா.வும் மைத்திரிபால பொது வேட்பாளராக எதிர்த்தரப்புக்கு வந்த நாளிலிருந்து ஒரு இழுபறி நிலையைக் கடைபிடித்து வந்தன. ஏற்கனவே இ.தொ.கா. தன் நிபந்தனையற்ற ஆதரவை ஜனாதிபதிக்கு தெரிவித்திருந்தது. கடந்த ஏழாம் திகதி ஜனாதிபதியைச் சந்தித்த அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தன் கட்சியின் முழு ஆதரவை மீளுறுதி செய்து இழுபறிக்கு முடிவு கட்டி விட்டார்.


முஸ்லிம் காங்கிரஸின் நிலை, இரு தலைக் கொள்ளி எறும்புக்கு சமமானது. ஐக்கிய முற்போக்கு கூட்டணியுடன் 'ஒண்ணா மண்ணா' இருந்துவிட்டவர்கள். 'பைல்' சுமையும் கனதியாக இருப்பதாக கனதியாகவே வெளியில் கதைக்கப்படுகிறது. ஆனால் முஸ்லிம் சமூகம் ஒரு தீர்மானத்தில் உறுதியாக நின்று கொண்டிருக்க முஸ்லிம் காங்கிரஸ், செஞ்சோற்றுக் கடனுக்காக வேறொரு நிலைப்பாட்டில் நிற்கிறது. முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்களுடன் நிற்பதா, முஸ்லிம் இல்லாத காங்கிரஸாக நீடிப்பதா? என்பதுதான் அக்கட்சித் தலைமையின் இன்றைய பிரதான பிரச்சினை.

முன்னர் இ.தொ.கா. தேசிய அரசியலில் தீர்மானிக்கும் கட்சியாகத் திகழ்ந்தது. தேசிய கட்சிகள் இ.தொ.கா. வை நம்பி அரசியல் செய்தன. இ.தொ.கா. எந்தக் கட்சியில், கூட்டணியில் இருக்கிறதோ அக்கட்சியே வெற்றி பெறும் என்ற நிலை இருந்தது. சௌமிய மூர்த்தி தொண்டமானின் மறைவின் பின்னர் அக்கட்சி படிப்படியாக பல வீனமடைந்தது. செல்ல சாமி, கண்ணன், பி.பி.தேவராஜ், இராதா கிருஷ்ணன், சதாசிவம், ராஜரட்ணம், புத்திரசிகாமணி, துரைராஜா, யோகராஜன் மற்றும் பல பிரமுகர்கள் அக்கட்சியை விட்டு இன்று என்ன காரணத்துக்காக ஸ்ரீ.சு.க. இல் இருந்து பிரிந்து வருகிறார்களோ அதே எதேச்சதிகாரத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தே இவர்கள் இ.தொ.கா. வை விட்டு வெளியேறிச் சென்றார்கள். ஆறுமுகனால் கட்சியை அரவணைத்துச் சொல்லத் தெரியாததே இதற்குக் காரணம்.

எந்தவொரு தேசிய மட்டக் கட்சியில் இருந்தும் இவ்வளவு பெரிய தலைகள் இத்தனை எண்ணிக்கையில் பிரிந்து சென்றதில்லை என்று சொல்லப்பட்டாலும் பின்னர் இந்த இ.தொ.கா. சாதனையை ரணிலின் மோசமான முகாமைத்துவம் காரணமாக முக்கியமான ஐ.தே.க. உறுப்பினர்கள் பெருமளவில் அக்கட்சியை விட்டு வெளியேறிச் சென்றதன் மூலம் முறியடிக்கப் பட்டது என்பதையும் இங்கு சுட்டிக் காட்டப்பட வேண்டும்.

இ.தொ.கா. வை விட்டு பலர் வெளியேறிச் சென்றதால், தேசிய ரீதியில் தன் முக்கியத்துவத்தை இக்கட்சி இழந்து வடக்கே பிறந்து வளர்ந்தவர்களும் இ.தொ.கா.வை வசை பாடுவதன் மூலம் 30 ஆயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் செல்லக் கூடியதாக இருந்ததை கடந்த பொதுத் தேர்தலில் பார்த்தோம். இந்த வித்தை எல்லாம் நுவரெலிய மாவட்டத்தில்தான் சாத்தியப்படும். திகாம்பரம் ஒரு முதலாளி. அவருக்கு தானும் பாராளுமன்றம் செல்ல வேண்டும் என்று ஆசை. பணத்தை தண்ணீராகவும் தண்ணியாகவும் செலவு செய்தார். தொண்டமான் வெறுப்பை மூலதனமாக்கிக் கொண்டார். கடந்த பாராளுமன்றத் தேர்தலில் அவரால் பாராளுமன்றத்தை ஐ.தே.க. வழியாக சென்றடையக் கூடியதாக இருந்தது.

இந்த திகாம்பரம் தன் வர்த்தக மூளையைப் பாவித்து ஆளும் தரப்புக்குத் தாவி, இறுதிக் கட்டத்தில் அரசு வழங்கும் எந்தப் பெறுமதியுமற்ற பிரதியமைச்சர் (அது என்ன அமைச்சர் என்பதில் யாருக்கும் அக்கறை இல்லை) பதவியைப் பெற்றுக் கொண்டார். இறுதியில் திகாம்பரத்தின் கனவு, நுவரெலிய மாவட்ட வாக்காளர்களின் முட்டாள்தனத்தால் நிறைவேறியது. சில்லறைப் பங்குகளைத் தவிர இவர் மக்களுக்கு ஆற்றிய சேவை எதுவும் இல்லை.



முஸ்லிம் சமூகத்தை எடுத்துக் கொண்டால் இத்தேர்தலில் ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவாக வாக்களிக்கப்போகும் முஸ்லிம் வாக்காளர்களின் தொகை மிகக் குறைவானதாகவே இருக்கப் போகிறது. இது அனைவரும் அறிந்த உண்மை. இதனால் தான் விருப்பம் இல்லாவிட்டாலும் மு.கா. எதிர்த்தரப்புக்கு வரவேண்டிய சூழலில் இருக்கிறது. படிப்பறிவற்ற ஒரு முஸ்லிம் மூதாட்டியும் கூட தன் வாக்கை எதிர்த்தரப்புக்கு அளிப்பதன் மூலம் தன் எதிர்ப்பை வெளிப்படுத்த முனைவாள் என்பது நிச்சயம். அவளுக்கு அந்த அளவுக்கு சமூக ரீதியான புரிதல் இருக்கிறது.

➡16

# ஆட்சி மாற்றத்தில் சிவில் சமூகத்தின் பங்கு யாது?

தமிழில்: சிற்றழகு, நன்றி: ராவய

நீங்கள் இந்த நாட்டில் அடிமையா அல்லது பிரஜையா? என்று உங்களை நோக்கிக் கேட்டால், அதிர்ந்து போவீர்கள். நான் ஒரு பிரஜை, அடிமை அல்ல என்றும் வாதிடுவீர்கள். ஆனால், உங்களிடம் பிரஜைக்குரிய பண்புகள், அடையாளங்கள் இல்லாதபோது உங்களை அடிமை என்று கூறாமல் எப்படி பிரஜை என்று அழைக்க முடியும்?

அடிமை என்பவர், நடப்பு நிலவரங்களுக்குக் கீழ்படிந்து எதிர்க்கேள்விகளைக் கேட்காமல் ஏற்றுக்கொள்வர். தற்போதைய கால சூழலில் அவருடைய கடமைகளைப் பற்றி அறிய மாட்டார் அல்லது பொருட்படுத்த மாட்டார். அவ்வாறான மனிதர்கள், எதேச்சதிகார ஆட்சியாளனின் எண்ணங்களை நினைத்தவாறெல்லாம் நிறைவேற்றிக் கொள்ள மிகவும் வசதியான மூலப்பொருளாக மாறிடுவர்.

இதற்கு மாற்றமாக, பிரஜை என்பவர் ஜனநாயகத்தை இனங்கண்ட, ஜனநாயக சமூகமொன்றில் தனது உரிமைகளையும் பொறுப்புக்களையும் அறிந்து அதற்காக செயற்படும் ஒருவராவார். அவ்வாறான மனிதர்கள் பெரும்பான்மையாக வாழும் நாடொன்றில், எதேச்சதிகார ஆட்சியாளனுக்குரிய இடம்பாடு மிகக் குறைவாகும்.

ராஜபக்ஷ ஆட்சியில் நாளாந்தம் கரைந்து போகும் ஜனநாயக சமூக சூழலில், முன்னேற்றமடைந்த பிரஜைகள் என்ற வகையில் உடனடியாக தலையீடு செய்ய வேண்டிய சமூகப் பாத்திரமொன்று நமக்கு முன்னால் இருக்கின்றது என்ற உறுதியான நம்பிக்கை காரணமாக இந்நாட்டின் கலைஞர்கள், புத்திமான்கள், சமூக செயற்பாட்டாளர்கள் குழுவொன்றின் முன்னெடுப்பினால் இதற்கான ஆரம்ப அடிகள் இற்றைக்கு பல காலங்களுக்கு முன்னர் எடுக்கப்பட்டது. அது பலவாறான கலந்துரையாடல்கள், கருத்தாடல்கள் ஊடாக மென்மேலும் வளர்க்கப்பட்டது.




குறிப்பாக, இந்நாட்டில் தோன்றியுள்ள அரசியல் கலாசாரத்தில், அரசியல்வாதி பற்றிய எந்தவொரு நம்பிக்கையும் வைத்துக் கொள்ள முடியாத சூழலொன்று வளர்ந்து வந்ததை நாம் அறிவோம். அரசியல்வாதிகள் மக்களுக்கு கொடுக்கும் வாக்குறுதிகள் ஆட்சிக்கு வந்தவுடன் மறந்துவிடும் நீண்ட வரலாறொன்று நமக்குள்ளது. அவ்வாறு நடைபெறுவதற்கு காரண காரணிகள் பல இருந்தாலும், இதற்கு முக்கியமான காரணியாக இருப்பது, அரசியல்வாதியை அதிகாரத்தில் வைக்கும் மக்கள், அதன் பின் ஓய்வெடுப்பதாகும். வாக்களிப்புடன் தனது சமூக அரசியல் பொறுப்பை நிறைவேற்றி விட்டோம் என்ற எண்ணம் மக்கள் மனங்களில் பதிந்துள்ளது. மக்கள் அவ்வாறு ஓய்வெடுப்பதை அரசியல்வாதி தனக்கு சாதகமாக்கிக் கொள்கின்றான். ஆகவே, தேர்தல் தினத்தில் மட்டுமல்ல, குறிப்பாக தேர்தலுக்குப் பின்னரும் வேலை செய்யும் மக்கள் இன்று நாட்டுக்குத் தேவைப்படுகின்றனர். இந்த பின்னணியில்தான், பிரஜைகளின் (சமூக) இயக்கங்கள் தேவைப்படுகின்றன.

ராவய பத்திரிகையின் முன்னெடுப்பில் அந்த வேலைத் திட்டத்திற்குள் நுழைந்து முன்வைத்த அழைப்பினை ஏற்று இந்நாட்டின் கலைஞர்கள், அறிஞர்கள், சமூக செயற்பாட்டாளர்கள் 120 பேர் அதன் அறிக்கையில் கையொப்பமிட்டனர். இக்குழுவினர் தனியோர் அரசியல் கொள்கையைச் சார்ந்தவர்கள் அல்லர். எனினும், இந்நாட்டின் நிகழ் காலம் குறித்து திருப்தி காண முடியாதென்பதையும் இந்நாட்டை இன்றிருப்பதை விட நாகரிகமான சமூகமாக மிக அவசரமாக மாற்ற வேண்டுமென்பதையும் அவர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொள்கின்றனர். நடைமுறையிலுள்ள நிறைவேற்று ஜனாதிபதி முறைக்கு மாற்றமாக ஜனநாயக ரீதியான புதிய அரசாங்க முறையை உருவாகிக் கொள்ளும் இடத்திற்கு நகர வேண்டும் என அந்த அறிக்கையில் நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

மேலும் இவ் அறிக்கையில், அனைத்து இனத்தவர்களுக்கும் எல்லா சமயத்தவர்களுக்கும் சமமான உரிமைகளும் சமாந்தரமான சந்தர்ப்பங்களையும் வழங்கும், தகவல்களை அறியும் உரிமை உட்பட ஒரு பிரஜையின் அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும், அதிகாரவாத ஆட்சிக்கு இடங்கொடுக்காத, அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் சந்தர்ப்பங்களில் கடுமையான தண்டனைகள் பெற்றுக் கொடுக்கின்ற, ஓரிடத்தில் தேங்கிக் கிடக்கின்ற, அரசியல் அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கும் பிற தளங்களுக்குமிடையில் முறையாக பகிரப்படுகின்ற, சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கின்ற மக்களின் இறைமையை சரியான முறையில் மக்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் முறையொன்றாக இருக்க வேண்டும் என்றும் அவ் அறிக்கையில் நாம் கூறியிருந்தோம்.

இந்த மாற்றங்களை மேற்கொள்வதற்கு நடப்பு ஆட்சியை மாற்ற வேண்டியுள்ளது. மேற்குறிப்பிட்ட எந்தவொரு செயலையும் ராஜபக்ஷ ஆட்சியில் எதிர்பார்க்க முடியாத நிலையொன்றை இன்று நாம் அனுபவிக்கின்றோம். ஆகவே இந்த ஆட்சி மாற்றம், மேற்குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ளும் முதலாவது எட்டாக எடுத்து வைக்க வேண்டியுள்ளது.

புதிய ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின், வெறுமனே அறிக்கை விடுவதைத் தாண்டி வீதிக்கு இறங்கி அழைப்பு விடுக்கும் தேவை உருவானது. அதனை மேலும் முன்னெடுக்கும் நிகழ்வாக சென்ற 02 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பு ஹைட்பாக் மைதானத்தில் பாரிய மக்கள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். ஆனால் அதற்காக கட்சி, அமைப்புக்கள் மூலம் மக்கள் வற்புறுத்தப்பட்டு வாகனங்களில் கொண்டு வந்து குவிக்கப்படவில்லை.

➡16

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்த அரசாங்கத்தில் வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் கேள்விக்குறியாக உள்ளது

## ஹுனைஸ் பாருக் எம்.பி.



**ம**ன்னார் மாவட்டத்தில் யுத்தம் முடிந்து 5 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் முஸ்லிம்களுக்கு அவர்களது சொந்த இடத்தில் குடியமர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது எனது வெளியேற்றத்துக்கு மற்றுமொரு காரணமாகும். வட புலத்தில் 25000 குடும்பங்கள் மீள்குடியேற்றத்துக்காக தங்களை பதிவு செய்த போதிலும் இன்னும் மீள் குடியேற்றம் பூரணப்படுத்தப்படவில்லை. இந்த அரசாங்கத்தோடு சுமார் 3 அரசாங்க உறுப்பினர்கள் தொத்திக் கொண்டிருந்த போதிலும் முஸ்லிம்களின் குடியேற்றம் கேள்விக்குறியாகவே உள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாருக் தெரிவித்தார். எங்கள் தேசத்திற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.

**எங்கள் தேசம்: நீங்கள் அ.இ.ம.கா. ஐ விட்டு வெளியேறி பொது வேட்பாளரை ஆதரிப்பதன் நோக்கம் என்ன?**

**ஹுனைஸ் பாருக் எம்.பி:** கடந்த காலங்களில் ஆளும் கட்சியால் முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பல பிரச்சினைகள் காரணமாக நான் பாராளுமன்றத்திலும் பாராளுமன்றத்திற்கு வெளியேயும் அதே போன்று ஆளும் கட்சியில் ஜனாதிபதியோடும் முக்கியமான அமைச்சர்களோடும் கலந்துரையாடியுள்ளேன். முஸ்லிம்களுக்கு நடந்த அநியாயங்களுக்கு முறையான தீர்வுகாண எவ்விதமான நடைமுறையும் அமுல்படுத்தப்படவில்லை. அது பள்ளிவாசலுக்கு ஏற்பட்ட தாக்குதலாக இருக்கலாம், முஸ்லிம்களின் உயிர்கள் பறிக்கப்பட்ட விடயமாக இருக்கலாம், முஸ்லிம்களின் வியாபாரம் தொடர்பான விடயமாக இருக்கலாம். இவ்வாறான விடயங்களை நியாயப்படுத்துகின்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டதே தவிர, முஸ்லிம்களுக்கான தீர்வுகள் எதுவும் வழங்கப்படாது தட்டிக்கழிக்கப்பட்டது. எனவே இதற்கு ஒரு சந்தர்ப்பத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். அதற்கான ஒரு வாய்ப்பாக இதனை கருதுகின்றேன்.

இலங்கையில் வாழ்கின்ற சிறுபான்மை இனத்தவர்களுள் அதிகமானவர்கள் இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கடந்த காலங்களில் ஆளும் கட்சியில் இருந்தவன் என்ற வகையில் மீண்டும் ஆளும் கட்சி ஆட்சிக்கு வந்தால் சிறுபான்மை மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பது சந்தேகமாகவே உள்ளது.

ஏற்கனவே ஜனாதிபதி 10 வருடங்கள் இருந்தார். இந்த தேர்தலிலும் வெற்றி பெற்றால் மீண்டும் 8 வருடங்கள் இருப்பார். எனவே மொத்தமாக 18 வருடங்கள். இவ்வாறான ஓர் ஆட்சி இடம்பெற்றால் நாட்டில் ஜனநாயக தன்மை இல்லாமல் போய்விடும். இதுபோன்ற காரணங்களாலே தான் பொது வேட்பாளரை ஆதரித்துள்ளேன்.

**எங்கள் தேசம்: முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் நிகழ்ந்த காலங்களில் ஆளும் கட்சியில் அங்கம் வகித்த நீங்கள் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதன் பின்புதானே கட்சி மாறியுள்ளீர்கள்?**

**ஹுனைஸ் பாருக் எம்.பி:** கடந்த காலத்தில் 2/3 பெரும்பான்மையில் அரசாங்கம் இருந்தது. நிறைவேற்று அதிகாரம் மிக்க ஜனாதிபதி இருந்தார். இந்த நேரத்தில் நாம் அரசைவிட்டு மாறினால் நிச்சயமாக அறிக்கை விடுபவர்களாக மாத்திரம்தான் இருந்திருக்க வேண்டும். ஆக்கபூர்வமான எந்தப் பலனும் இருந்திருக்காது.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது ஒரு நல்ல சந்தர்ப்பம். மக்களுக்கும் பிரச்சினைகளை தெளிவுபடுத்தலாம். அத்தோடு ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த நாங்களும் ஒரு பங்காளி என்ற வகையில் சிறுபான்மை மக்களுக்கு ஒரு காப்பாக இருக்கலாம். அதேபோன்று எதிர்க்கட்சியில் இருக்கின்ற ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கலாம், பொது வேட்பாளர் மைத்திரியாக இருக்கலாம் யாராக இருந்தாலும் நான் அவர்களிடம் இவ்விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளேன். முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படாமல் ஒரு நல்லாட்சியை நோக்கி பயணிக்க வேண்டும் என்பதை நோக்கமாகவே கொண்டுள்ளேன்.

**எங்கள் தேசம்: மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் பிரச்சினைகள் எந்தளவு நிறைவேற்றப்பட்டுள்ளது?**

**ஹுனைஸ் பாருக் எம்.பி:** மன்னார் மாவட்டத்தில் யுத்தம் முடிந்து 5 வருடங்களுக்கு மேலாகியும் இன்னும் முஸ்லிம்களுக்கு அவர்களது சொந்த இடத்தில் குடியமர முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது என்பது எனது வெளியேற்றத்துக்கு மற்றுமொரு காரணமாகும். வட புலத்தில் 25000 குடும்பங்கள் மீள்குடியேற்றத்துக்காக தங்களை பதிவு செய்த போதிலும் இன்னும் மீள்குடியேற்றம் பூரணப்படுத்தப்படவில்லை.

இந்த அரசாங்கத்தோடு சுமார் 3 அரசாங்க உறுப்பினர்கள் தொத்திக் கொண்டிருந்த போதிலும் முஸ்லிம்களின் குடியேற்றம் கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே இதற்குப் பிறகு ஆளும் அரசாங்கம் ஆட்சி அமைக்கின்றபோது மீள்குடியேற்றம் மறைக்கப்படுகின்ற ஒரு விடயமாக மாறிவிடும்.

தற்போது முஸ்லிம்கள் புத்தளம் மாவட்டத்திலும் ஏனைய சில மாவட்டங்களிலும் நிரந்தரமாக குடியிருப்பதற்கும் வாக்காளர் பதிவு இடாப்பிலும் தம்மைப் பதிந்திருக்கின்றனர். ஏனெனில் இந்த மீள்குடியேற்றம் கேள்விக்குறியாக இருப்பதனால் இவ்வாறு செய்துள்ளனர்.

இந்த அரசாங்கம் தொடர்ந்து இருக்கின்றபோது [illegible] 80% முஸ்லிம்கள் வட பகுதியை விட்டு வெளியில் வாழக் கூடிய ஒரு துர்ப்பாக்கிய நிலையே ஏற்படும். எனவே ஒரு புதிய ஆட்சி, நல்லாட்சி வருகின்றபோது இவ்விடயத்தில் அக்கறை செலுத்துவார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

**எங்கள் தேசம்: மன்னார் மாவட்ட முஸ்லிம்களின் நிலை ஜனாதிபதித் தேர்தலில் யாருடைய பக்கம் இருக்கும் என எதிர்பார்க்கிறீர்கள்?**

**ஹுனைஸ் பாருக் எம்.பி:** மன்னார் மாவட்ட முஸ்லிம்களாக இருக்கலாம் அல்லது இலங்கை வாழ் முஸ்லிம்களாக இருக்கலாம். அனைவரினதும் தெரிவு நன்மையை நோக்கியதாகத்தான் இருக்க வேண்டும். ஜிஹாத் என்பது ஆயுதம் ஏந்தி போராடுவது மாத்திரம் அல்ல. குறைந்த பட்சம் ஈமானைக் கொண்டு உள்ளத்தால் வெறுக்க வேண்டும். அதுதான் ஆகக் குறைந்த ஈமானின் படித்தரமாகும். அப்படி இல்லாவிட்டால் வாயால் வெறுக்க வேண்டும். உள்ளத்தால் வெறுத்தமை கடந்த காலத்தில் அரசாங்கத்திற்கு நாங்கள் செய்த விடயமாகும். ஆனால் தற்போது செயலால் வெறுக்க வேண்டிய காலம். அதுதான் எமது மக்கள் அனைவரும் இந்த நாட்டில் கடந்த காலத்தில் நடத்தப்பட்ட ஆட்சிக்கு எதிராக தமது புள்ளடிகளை இடுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

**எங்கள் தேசம்: உங்களது வீட்டில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னணி என்ன?**

**ஹுனைஸ் பாருக் எம்.பி:** கடந்த தினங்களாக எனது வீட்டிற்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு [illegible] இரண்டு தினங்களாக நான் வெளி மாவட்டங்களில் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபட்ட பின்னர் வீட்டிற்கு வந்திருந்தேன். மோட்டார் சைக்கிள்களில் வந்த இளைஞர் குழுவினர் எனது வாகன சாரதியையும் அவரோடு இருந்த சகோதரர்களையும் தாக்கியுள்ளார்கள். செல்லும்போது ஒரு மோட்டார் சைக்கிளையும் விட்டு விட்டு சென்றுள்ளார்கள்.

அதில் சிலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இருந்த போதிலும் பொலிஸாரின் நடவடிக்கைகளை பார்க்கின்றபோது ஒருபக்க சார்பாக நடக்கின்றது போல தெரிகின்றது. எனவே பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இவ்வாறு அநியாயம் இடம்பெற்றுள்ள நிலையில், இலங்கை வாழ் சாதாரண மக்களின் நிலை கேள்விக்குறியாகவே உள்ளது. எனவே, இதற்கு நான் முறைப்பாடு செய்துள்ளேன். இதற்குப் பின்னால் பாரிய சக்தியொன்று இருக்கின்றது. நிச்சயமாக என்னை கொலை செய்வதற்காகவே வந்திருக்கின்றார்கள். சாட்சிகளை பார்க்கின்றபோது ஆயுதம் வைத்திருந்ததாகவும் கூறப்படுகின்றது. எனவே எதிர்காலத்தில் இவ்வாறு அச்சுறுத்தல், அநியாயங்கள் நடக்காமல் ஒரு நல்ல ஆட்சியை நோக்கி நகர வேண்டும். இதனை அரசியல் பழிவாங்கலாகத்தான் நான் கருதுகின்றேன்.

**நேர்காணல்:**
**வினாசர் ராஜா (இஸ்லாஹி)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி மலரட்டும் ...நாடு பிரிகோட்டில்...

உஸ்தாத் ரஷீத் ஹஜ்ஜுல் அக்பர்

> தன்னைவிட மற்றுமொருவர் தனது திறமைகளால் முன்சென்று விடுவார் என்ற அச்சம் ஒரு தலைவரை ஆட்கொண்டு விட்டால் ஆட்சிக் குழுமத்தினுள்ளேயே நல்லாட்சி அடக்கம் செய்யப்பட்டு விடுகின்றது. அங்கு கலந்தாலோசனைக்கோ, நிபுணத்துவத்தை மதிப்பதற்கோ, இடமே இருக்காது.

நாட்டுக்கு நல்லாட்சி தேவை என்பதை அனைவரும் பேசுகின்ற தருணமிது. ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் நல்லாட்சி நம்மிடமே என்று கூறுகின்ற வேளையில் நல்லாட்சி பற்றிய எண்ணக் கருவின் பால் மக்களின் கவனத்தைத் திருப்பும் ஒரு முயற்சியே இதுவாகும்.

**நல்லாட்சியின் அடையாளங்கள்**

நல்லாட்சி என்பது 'நல்லாட்சி' என்று முழங்குவதல்ல. மாறாக, ஆரவாரமின்றி நாட்டை அமைதி வழியில் இட்டுச் செல்கின்ற உன்னதமான விழுமியங்களின் ஆட்சியே நல்லாட்சியாகும். இந்த விழுமியங்கள் பல்வேறு பரிமாணங்களில் வெளிப்படுவதன் மூலம் நல்லாட்சியை அடையாளப்படுத்துகின்றன.

<u>விழுமியம் 1: ஆட்சிக் குழுமத்தோடு தொடர்பானது</u>

ஆட்சிக் குழுமத்தில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் அடங்குவர்.

இவர்களைத் தெரிவு செய்வதற்காக மக்கள் வாக்களிக்கும் ஜனநாயக முறைமை மட்டும் நல்லாட்சியின் குறி காட்டியல்ல. மாறாக, மக்கள் தெரிவுக்காக முன்மொழியப்படுகின்ற (Nominated) வேட்பாளர்கள் ஓர் ஒழுக்கக் கோவையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படல் வேண்டும். அதன் பின்னரே வாக்குக் கேற்பதற்காக அவர்கள் மக்கள் முன் செல்வதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும். இது நல்லாட்சிக்கான துவக்கப் புள்ளியாகும்.

அடுத்து, மக்களின் வாக்குகள் மூலம் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளை வழிநடத்துகின்ற தலைவர் ஏனையவர்களோடு கலந்தாலோசனை செய்பவராகவும் நிபுணத்துவங்களை வரவேற்பவராகவும் பொறுப்புக்களை உரியவர்களிடம் பகிர்ந்தளித்து செயற்படுபவராகவும் திகழ வேண்டும். தன்னை விட மற்றொருவர் மேலே வந்துவிடக் கூடாது என்ற எண்ணம் இந்த விழுமியங்களுக்கு தடையாக அமைந்து விடாது அவர் கருத்தாக செயற்பட வேண்டும்.

தன்னைவிட மற்றுமொருவர் தனது திறமைகளால் முன்சென்று விடுவார் என்ற அச்சம் ஒரு தலைவரை ஆட்கொண்டு விட்டால் ஆட்சிக் குழுமத்தினுள்ளேயே நல்லாட்சி அடக்கம் செய்யப்பட்டு விடுகின்றது. அங்கு கலந்தாலோசனைக்கோ, நிபுணத்துவத்தை மதிப்பதற்கோ, இடமே இருக்காது.

ஆட்சிக் குழுமத்தோடு தொடர்பான இந்த விழுமியங்களில் ஆட்சிக்கு வரும் ஒவ்வோர் அரசும் விசேட கவனம் செலுத்த வேண்டும்.

<u>விழுமியம் 2: அதிகாரத்தோடு தொடர்பானது</u>

அதிகாரம் என்பது ஆட்சியாளர்கள் அனுபவிக்கும் ஒரு சொத்து அல்ல. அது பதில் கூறக் கடமைப்பட்ட மகத்தான ஒரு பொறுப்பு. அதனைப் பயன்படுத்தி பாரிய சாதனைகளை ஈட்டலாம் அல்லது துஷ்பிரயோகம் செய்வதனூடாக நாட்டையும் மக்களையும் சோதனைகளிலும் ஆழ்த்தலாம் என்பதை அதிகாரிகள் உணர்ந்திருக்க வேண்டும்.

நல்லாட்சி நடைபெற வேண்டுமாயின் அதிகாரம் சட்டத்தின் பிடிக்குள் வைக்கப்பட வேண்டும். சட்டத்தை மீறும் வகையில் அல்லது மேலேறித் தாண்டும் வகையில் அதிகாரம் செயற்படும் சூழலைத் தடை செய்ய வேண்டும். நாட்டின் அமைப்புச் சட்டத்தில் இதற்கான ஏற்பாடுகளும் வரைபுகளும் தெளிவாக வரையப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் 'வலுவேராக்கம்' என்ற கோட்பாடு கண்டிப்பாக அமுல் செய்யப்பட வேண்டும். அதிலும் குறிப்பாக நீதித்துறை சுதந்திரமாக செயற்படுவதற்கான ஏற்பாட்டை அமைப்புச் சட்டத்தின் மூலம் உத்தரவாதப்படுத்த வேண்டும்.

சுருக்கமாகச் சொன்னால், சட்டத்தின் ஆட்சி நாட்டில் நடைபெற வேண்டும். அதிகாரத்தின் ஆட்சியல்ல. சட்டம் அதிகாரிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமே தவிர, அதிகாரிகள் சட்டத்தைக் கட்டுப்படுத்துகின்ற நிலை தோற்றம் பெறக் கூடாது. அப்போது மட்டுமே ஒரு நாட்டில் நீதி நிலைநாட்டப்படுகிறது. நீதி நிலைநாட்டப்பட்டால் அந்த ஆட்சியை நீடிப்பதற்கு அல்லாஹ்வும் உதவி செய்வான். அது முஸ்லிம் அல்லாதவர்களது ஆட்சியாக இருப்பினும் சரியே என்பது இஸ்லாத்தின் நிலைப்பாடாகும்.

சட்டத்தின் ஆட்சிக்கு மற்றுமொரு பரிமாணமும் இருக்கிறது. சில குற்றவாளிகளைத் தண்டித்து மற்றும் சில குற்றவாளிகளைக் கண்டும் காணாதிருப்பது சட்டத்தின் ஆட்சியல்ல. தனக்கு சார்பானவர்களை மறைத்து எதிரானவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதும் சட்டத்தின் ஆட்சியல்ல. மாறாக, (அநீதியிழைக்கப்பட்ட) பலவீனர்களை பாதுகாத்து பலப்படுத்துவதும் (அநீதியிழைத்த) பலவான்களைத் தண்டித்து பலவீனப்படுத்துவதும்தான் சட்டத்தின் ஆட்சி என்பதை நாடு புரிந்து கொள்ளும் வகையில் சட்டம் அமுல் செய்யப்பட்டால் மட்டுமே அங்கு நல்லாட்சி நிலவுகின்றது என அர்த்தம்.

நடைபெறப் போகின்ற ஜனாதிபதித் தேர்தலில் அதிகம் பேசப்படுகின்ற பேசு பொருள் 'அதிகாரம்' பற்றியதாகவே இருக்கிறது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அதிகாரம் எங்கே வைக்கப்பட வேண்டும், சட்டம் எங்கே வைக்கப்பட வேண்டும் என்பதை சரியாக வரையறை செய்யாவிட்டால் நல்லாட்சி குதிரைக் கொம்பாகவே இருக்கும்.

அதிகாரம் தொடர்பான விழுமியங்கள் ஆட்சியாளர்களது கவனத்தையும் விசுவாசத்தையும் பெறாத விடத்து சட்டத்தின் ஆட்சி மலரப் போவதில்லை.

<u>விழுமியம் 3: பாதுகாப்புடன் தொடர்பானது</u>

ஒரு நாட்டில் நல்லாட்சி நடைபெறுகின்றது எனின் அங்கே நான்கு அம்சங்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். இவற்றுள் ஒன்று, நீக்கப்பட வேண்டியது. ஏனையவை, நிலைநிறுத்தப்பட வேண்டியவை.

*அ) நீக்கப்பட வேண்டியதை முதலில் பார்ப்போம்...*

நாட்டை அச்சுறுத்தும் பயங்கரவாதம் எந்த வடிவில் தோன்றினாலும் அதன் தீங்கிலிருந்து நாட்டைப் பாதுகாப்பது நல்லாட்சிக்கு இன்றியமையாதது. எமது நாட்டை 3 தசாப்தங்களாக அச்சுறுத்திய பயங்கரவாதம் இல்லாதொழிக்கப்பட்டது. அந்த வகையில் நல்லாட்சியை நோக்கிய பயணத்தின் ஒரு மைல்கல் என்றே அதனைக் கூற வேண்டும். எனினும் இனங்களுக்கெதிரான பயங்கரவாதம் இல்லாமலாக்கப்பட்டு மதங்களுக்கெதிரான பயங்கரவாதம் தோற்றம் பெற்றது.

ஆ) சிறுபான்மை சமூகங்களுக்கான பாதுகாப்பு நல்லாட்சியின் மற்றுமோர் அடையாளமாகும். காரணம், சிறுபான்மை சமூகங்கள் ஆளப்படுகின்ற சமூகங்களாகவும் பெரும்பான்மை சமூகங்கள் ஆளும் சமூகங்களாகவும் இருக்கின்றன. அநீதி பொதுவாக ஆளப்படும் சமூகங்களுக்கே இழைக்கப்படுகின்றது. ஒரு நாட்டில் நல்லாட்சி நிலவுகிறது எனின் அதனை அங்குள்ள சிறுபான்மை சமூகங்களின் வாழ்வில் காணலாம். சிறுபான்மை சமூகங்களோடு இந்நோக்கத்தில் ஒப்பந்தங்கள் செய்யுமளவு 1400 வருடங்களுக்கு முன்பே இஸ்லாமிய ஆட்சியாளர்கள் முன்னேறியிருந்தார்கள் என்பது வரலாறு.

இ) மதங்களுக்கான பாதுகாப்பு நல்லாட்சியின் மற்றுமோர் அடையாளமாகும். எந்தவொரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் மத ரீதியான அச்சுறுத்தல்கள் நிகழா வண்ணம் இந்தப் பாதுகாப்பு நல்லாட்சியில் உத்தரவாதப்படுத்தப் பட்டிருக்கும். இஸ்லாமிய ஆட்சியில் இந்தப் பொறுப்பை பாதுகாப்புப் படை ஏற்றிருக்கும் என அல்குர்ஆன் கூறுகின்றது. "மனிதர்களில் (அநீதியிழைக்கின்ற) சிலரை (பாதுகாக்கும்) சிலரைக் கொண்டு அல்லாஹ் தடுக்காவிட்டால் யூதர்களதும் கிறிஸ்தவர்களதும் துறவிகளினதும் ஆலயங்கள் மற்றும் அல்லாஹ்வை நினைவுகூறும் மஸ்ஜித்கள் என்பன தகர்க்கப்பட்டு விடும்..."

இஸ்லாம் கூறும் நல்லாட்சியில் அனைத்து மதங்களுக்கும் பாதுகாப்புண்டு என்பதையே இந்த வசனம் குறிப்பிடுகிறது.

ஈ) மனித உரிமைகளுக்கான பாதுகாப்பு நல்லாட்சியின் மற்றுமோர் அடையாளமாகும். மத, குல, நிற, மொழி வேறுபாடுகளுக்கப்பால் மனிதனாகப் பிறந்த ஒவ்வொரு ஜீவனுக்கும் வாழும் உரிமை முதல் சகல உரிமைகளும் வழங்கப்படுவதற்கான உத்தரவாதத்தையே இது குறிக்கின்றது. உரிமைகளை இழக்கும் மனிதன் தனது சுதந்திரத்திற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதை உணருகின்றான். சட்ட ரீதியாக அனுமதிக்கப்பட்ட உரிமைகளை அனுபவித்து சுதந்திரமாக பேசவோ, எழுதவோ, நடமாடவோ, கருமமாற்றவோ, குறைந்தபட்சம் வாழவோ முடியாத ஓர் உணர்வு அவனை ஆட்கொள்கின்ற போது தனது மனித அந்தஸ்தை இழப்பது போன்று அவன் அவஸ்தைக்குள்ளாகின்றான். சுதந்திரமின்றி அடைத்து வைக்கப்படுகின்றவை மிருகங்களே. எனினும் அவற்றுக்குள்ள பாதுகாப்புக் கூட தனக்கில்லை என்று ஒரு மனிதன் உணருகின்ற போது அந்த சூழலில் நல்லாட்சி நிலவுவதாக எப்படிக் கூற முடியும்?

<u>விழுமியம் 4: வளங்கள் தொடர்பானது</u>

நல்லாட்சியின் குறி காட்டிகளில் மற்றுமொன்று நாட்டின் வளங்களை பாதுகாத்து, விருத்தி செய்து, பயன்படுத்தி, மேன்மைப்படுத்தலாகும். மனித, பௌதிக வளங்கள் என பொதுவாக இந்த வளங்கள் அடையாளப் படுத்தப்படுகின்றன.

அ) மனித வளங்கள்: மனித வளங்களை விருத்தி செய்வதில் பெரும் பங்கு கல்விக்கும் வெவ்வேறு அளவிலான பங்குகள் வியாபாரம், தொழில் துறைகள் மற்றும் கலை, கலாசாரம், விளையாட்டு, பொழுதுபோக்கு போன்ற துறைகளுக்கும் இருக்கின்றன. இந்தத் துறைகள் ஒவ்வொன்றுடனும் நவீன தொழில்நுட்பங்கள் இணைக்கப்படுகின்ற போது மனித வளங்களை விருத்தி செய்வது இலகுவாகின்றது.

அதேநேரம் மனிதவளம், குறிப்பாக இளைஞர் வளம், விரயமாக்கப்படுவதற்கு இடம் தராத ஒரு பொறிமுறை நாடு தழுவிய அமைப்பில் உருவாக்கப்படுதல் நல்லாட்சி புரிவோரின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும். இந்த நோக்கத்தினை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தியையே நாட்டின் பிரதான அபிவிருத்தி எனலாம்.

ஆ) ஏனைய வளங்கள்: மனிதவளம் தவிர்ந்த ஏனைய வளங்களை நான்கு தலைப்புகளில் நோக்கலாம்.

*1. இயற்கை வளங்கள்:* நீர், நிலம், காடு என்பவற்றுடன் இயற்கையின் அழகையும் பசுமையும் பராமரித்து விருத்தி செய்தல் இதில் அடக்கப்படுகின்றது. இதன் மூலம் சூழல் பாதுகாப்பு உத்தரவாதப் படுத்தப்படுகின்றது. சுத்தமான நீர், காற்று, சுகாதாரம், சுற்றுச் சூழல் என்பவற்றை மனிதர்கள் உட்பட ஏனைய உயிரினங்கள் பெறுகின்றன. ஆரோக்கியமான வாழ்வு இதனால் உறுதி செய்யப்படுகின்றது. நில, நீர் வளங்கள் மேன்மைப்படுத்தப்படுவதனால் விவசாயமும் விவசாய உற்பத்திகளும் அதிகரிக்கின்றன. அதனால் வாழ்க்கைச் செலவும் குறைகின்றது. மக்கள் உழைப்பின் உரிய பலனை அனுபவிக்க முடிகிறது. இதுவெல்லாம் நல்லாட்சியின் பிரதிபலன்களே.

➡17

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்களை விட பெண்களுக்கு சம்பளம் குறைவு:



## ஐ.எல்.ஓ. ஆய்வு

உலகின் பல பாகங்களில் ஆண்களை விட பெண்களுக்கு குறைவான சம்பளமே வழங்கப்படும் நிலை காணப்படுவதாக சர்வதேச தொழிலாளர் அமைப்பான ஐ. எல். ஓ. வின் புதிய ஆய்வறிக்கை ஒன்று கூறுகிறது.

அதிகம் படித்திருந்தும், அனுபவம் இருந்தும், உற்பத்தித் திறன் இருந்தும் ஆண்களை விட பெண்களுக்கு குறைந்த சம்பளம் கொடுக்கப்படுவதாக இந்த அறிக்கை கூறுகிறது.

வேலைவாய்ப்பு சம்பந்தமான தகுதிகளில் ஆண்களை விட அதிக புள்ளிகள் பெறும் பெண்களுக்கு கூடுதலான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என ஐ. எல். ஓ. கூறுகிறது.

ஆண், பெண் ஊதிய இடைவெளியில் நாட்டுக்கு நாடு நிறைய வித்தியாசம் இருக்கிறது என்றும் பல்வேறு காரணிகள் இந்த இடைவெளியை உண்டாக்குகின்றன என்றும் ஜெனீவாவில் ஐ. எல். ஓ. சார்பாக பேச வல்ல அதிகாரி ஒருவர் கூறினார்.

பெண்கள் தாய்மைக்காக நேரம் ஒதுக்க வேண்டியுள்ளமை இந்த சம்பள இடைவெளிக்கு ஒரு முக்கிய காரணமாக உள்ளது என்றும், மேலாண்மை பொறுப்புகளில் பெண்கள் கூடுதலாக நியமிக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரை விடுவிக்க பாகிஸ்தான் உதவ வேண்டும்



## ஹபீஸ் சயீத்

காஷ்மீரிகள் இந்தியாவிடம் இருந்து விடுதலை பெறுவதற்கு உதவ பாகிஸ்தான் முன்வர வேண்டும் என்று ஜமாத் உத் தவா அமைப்பின் தலைவர் ஹபீஸ் சயீத் தெரிவித்துள்ளார்.

லாகூரில் உள்ள மினஸ் - இ - பாகிஸ்தான் நினைவு மைதானத்தில் உத் தவா சார்பில் மாநாடு நடத்தப்பட்டது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் வாழும் அனைவரும் அனைத்து வித வேறுபாடுகளையும் மறந்து விட்டு ஒன்றுபட்டு நிற்க வேண்டிய தருணம். ஜம்மு காஷ்மீரில் வாழும் மக்கள் பாகிஸ்தானின் சொந்தங்கள். அவர்களை எங்களிடம் இருந்து பிரித்துவிட முடியாது. ஜம்மு காஷ்மீரை நாங்கள் விடுதலை செய்வோம்.

காஷ்மீர் மக்கள் உதவி கோரி வருகின்றனர். அவர்களது அழைப்பை ஏற்பது நமது கடமை. குஜராத்தில் அகமதாபாத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுத் தருவோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வழக்குத் தீர்ப்பு அதிருப்தி அளிக்கிறது

## ஐக்கிய நாடுகள் சபை

அமெரிக்காவில் இரு கறுப்பினத்தவர்களின் மரணம் தொடர்பாக வழங்கப்பட்ட தீர்ப்புகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை அதிருப்தியடைந்துள்ளது.

கறுப்பினத்தவர்களின் மரணத்துடன் தொடர்புடைய வெள்ளையின பொலிஸார் மீது அமெரிக்க ஜூரிகள் குற்றச்சாட்டு பதிவு செய்யாமை சட்டத்தின் வலு குறித்த கவலைகளை தோற்றுவிப்பதாக ஐ. நா. வின் சிறுபான்மையின பிரச்சினை தொடர்பான விசேட அதிகாரி ரிட்டர் இஸ்ஸாக் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் மிசோரி மற்றும் நியோர்க்கில் இரண்டு கறுப்பின இளைஞர்களின் மரணத்துடன் தொடர்புடைய பொலிஸார் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படாமையினால் அந்நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

ஆபிரிக்க அமெரிக்கர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் இனப் பாகுபாட்டினாலேயே பொலிஸார் பாரபட்சமான முறையில் நீதியை கையாள்வதாக ஐ.நா. வின் உயரதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

# உக்ரேன் மோதலுக்கு விரைவில் தீர்வு எட்டும்

## ரஷ்ய ஜனாதிபதி புடின்



உக்ரேனில் தொடரும் மோதல்களுக்கு விரைவில் தீர்வொன்று எட்டப்படும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமீர் புடின் தெரிவித்துள்ளார்.

கடந்த செப்டெம்பர் மாதத்தில் போர் நிறுத்த உடன்படிக்கை எட்டப்பட்ட போதிலும் நாட்டின் கிழக்கு பகுதியில் உக்ரேன் இராணுவத்தினருக்கும் ரஷ்ய ஆதரவு படையினருக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்று வந்தன.

இந்நிலையில் ரஷ்யாவுக்கு விஜயம் மேற்கொண்ட பிரான்ஸ் ஜனாதிபதி பிரன்சுவா ஹொலண்டே உக்ரேன் விவகாரம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளார்.

இதையடுத்தே நிரந்தரமான யுத்த நிறுத்தத்தை அறிவிக்கவுள்ளதாக ரஷ்ய தலைவர் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸில் புயல் தாக்குதல்



மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்துடனான காற்றுடன் ஹகுபித் புயல் பிலிப்பைன்ஸைத் தாக்கியுள்ளது. இப்புயலின் மையம் பிலிப்பைன்ஸில் வட மேற்காக நகர்ந்து வந்துள்ளது. தாழ்வான பகுதிகளில் இருந்து ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.


அதேநேரம், இப்புயல் தொட்ட முதல் இடமான நாட்டின் கிழக்குப் பகுதியில் வெளியேறியிருந்த மக்கள் சிலர், தற்போது சொந்த இடங்களுக்கு திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.

புயல் தாக்கியதில் பல இடங்களில் மரங்களும் மின் கம்பங்களும் சாய்ந்துள்ளன.

சென்ற ஆண்டு பிலிப்பைன்ஸை ஹையான் என்ற புயல் தாக்கியதில் ஏழாயிரத்துக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருந்தனர்.

இந்த ஆண்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் வலுவாக இருந்ததினால் ஆட்சேதங்கள் அதிகமில்லை என்று நம்பப்படுகிறது.

# இந்தியாவின் செயற்கைக் கோள் வெற்றிகரமாக ஏவப்பட்டது



இந்தியாவின் தகவல் தொடர்பு செயற்கைக் கோளான GSAT-16 வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

பிரான்ஸின் பிரெஞ்ச் கயானாவில் உள்ள கவுரு ஏவுதளத்திலிருந்து அதிகாலை 2 மணி 10 நிமிடங்களுக்கு ஏரியான் Ariane 5 VA221 என்ற ஏவுகணை மூலம் இது விண்ணில் ஏவப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த செயற்கை கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி விஞ்ஞானிகளுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ விபத்து

## மாலைதீவில் குடிநீருக்கு தட்டுப்பாடு



மாலைதீவு தலைநகர் மாலேவில் உள்ள தண்ணீர் சுத்திகரிப்பு நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டு குடிநீர் உற்பத்தி பாதிக்கப்பட்டதால் அந்நகரில் கடுமையான குடிநீர் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

சுமார் 10 ஆயிரம் குடும்பத்தினர் வசிக்கும் மாலே நகரில் ஏராளமான பொது மக்கள் குடிநீருக்காக அவதிப்பட்டு வருகின்றனர். குடிநீர் விநியோகிக்கும் கடைகளும் சூறையாடப்பட்டன. இந்த அவசர நிலையை சமாளிக்க அந்நாட்டு அமைச்சர் இந்தியா, இலங்கை உள்ளிட்ட அண்டை நாடுகளிடம் உதவி கோரியுள்ளார். இதையடுத்து இந்தியா மற்றும் இலங்கை நாடுகள் தண்ணீர் போத்தல்களை மாலைதீவுக்கு அனுப்பி வைத்துள்ளன. குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் சீரடைய மேலும் சில நாட்கள் ஆகும் என்பதால் மக்கள் அச்சத்தில் உள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஸகி பவ்ஸ் (நளீமி)

# நெதன்யாகுவின் புதிய தீர்மானம் இஸ்ரேல் யூத இனத்திற்கான தேசம்?

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இஸ்ரேலிய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆச்சரியமான ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டது. அதாவது, இஸ்ரேல் யூத இனத்தவர்களுக்கு மட்டுமே உரிய தேசமாகும். அதன் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் இஸ்ரேலில் வசிக்கும் யூதர்களுக்கு மட்டுமே உரித்துடையவை. இஸ்ரேலில் வசிக்கும் ஏனைய கிறிஸ்தவ மற்றும் முஸ்லிம் சிறுபான்மை அரபுகள் தங்களுக்கு வழங்கப்பட்ட தனிமனித சுதந்திரத்தை அனுபவித்துக் கொண்டு வாழலாம் என்பதுவே நெதன்யாகுவின் கெபினட் அமைச்சரவை எடுத்த தீர்மானமாகும். இத்தீர்மானம் சர்வதேச ரீதியில் இஸ்ரேலிய அரசுக்கு எதிரான விமர்சன அலைகளை தூண்டிவிட்டது. மத்திய கிழக்கின் ஒரே ஜனநாயகம் என்ற டெல்அவீவின் சுலோகத்தை உலகின் முன்னணி ஜனநாயக விரும்பிகள் கேள்விக்கு உட்படுத்தினர். அரபுலகிலும் பலஸ்தீன் மக்களின் வாழ்வுரிமை தொடர்பாக கரிசனை காட்டும் நிறுவனங்கள் பாரியளவில் நெதன்யாகுவின் தீர்மானத்தை கண்டித்தன.

இஸ்ரேலிய அமைச்சரவை உடன்பட்ட, இஸ்ரேல் யூத இனத்திற்கு மட்டுமே உரிய தேசம் என்ற தீர்மானமானது எத்தகைய விளைவுகளை கொண்டு வரும் என்பது தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் அரசியல் விமர்சகர்களுக்கு மத்தியில் நிலவுகின்றன. குறிப்பாக, இஸ்ரேலுக்குள் வாழும் பலஸ்தீன் மக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரங்கள் நேரடியாக பாதிக்கப்படலாம் என மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறுகின்றனர். இன்னும், ஏற்கனவே பலஸ்தீன - இஸ்ரேலியப் பேச்சுவார்த்தைகளில் விதிக்கப்பட்ட, தமது சொந்த நிலங்களிலிருந்து விரட்டப்பட்ட பலஸ்தீன் பூர்வீக மக்கள் மீண்டும் குடியேறுவதற்கு அனுமதியளிக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையை இஸ்ரேலிய கெபினட்டின் தீர்மானம் குப்பைத் தொட்டியில் தூக்கியெறிந்துள்ளது. இதனால், இஸ்ரேலிய-பலஸ்தீனப் பேச்சுவார்த்தை பாதிக்கப்படலாம் என வேறு சில அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர். மேலும், இஸ்ரேலிய பாராளுமன்றதில் அங்கம் வகிக்கும் அரபுக் கட்சிகளினது உறுப்பினர் பதவிகள் இரத்துச் செய்யப்படலாம் என இஸ்ரேலிய செய்திச் சேவை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. மாத்திரமன்றி, இஸ்ரேலிய அரசு இதுவரை அரபு மொழியை இரண்டாம் தர தேசிய மொழியாக பிரகடனம் செய்திருந்தது. ஆனால், புதிய யூத இனத்திற்கான தேசம் என்ற தீர்மானமானது அரபு மொழியை தேசிய மொழிகள் பட்டியலிருந்து நீக்கி விடும் எனவும் அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

### ஏன் திடீர் தீர்மானம்?

இஸ்ரேலிய ஸியோனிஸ அரசின் வரலாற்று உளவியலை நுணுக்கமாக நோக்கும்போது இஸ்ரேல் யூத இனத்திற்கான தேசம் என்ற புதிய பிரகடனம் கேலிக்கூத்தானது எனலாம். ஏனெனில், புதிதாக அதனைப் பிரகடனம் செய்ய வேண்டிய தேவையே இல்லை. கடந்த அரை நூற்றாண்டு கால ஸியோனிஸ அரசின் நடத்தைகள் தெளிவாகவே யூத இனத்துவ தீவிரவாதத்தை அடிப்படையாகக் கொண்டே கட்டியெழுப்பப்பட்டு வந்துள்ளன. 1897 இல் தியேட்டர் ஹர்ஸல், உலகளாவிய யூத இனத்திற்கான தேசம் என்ற தொனிப்பொருளிலேயே ஸியோனிஸ அரசை உருவாக்குதவதற்கான திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். அது மாத்திரமன்றி, அரபுகளே வெளியேறுங்கள் அல்லது வெளியேற்றி விடுவோம் என்ற ஸியோனிஸ அரசின் முதலாவது பிரதமர் பென்கூறியனின் வார்த்தைகளும் அதற்கு சிறந்த ஆதாரம். அண்மையக் காலங்களில் கூட இஸ்ரேலில் வசிக்கும் சிறுபான்மை முஸ்லிம்கள் மீதான அத்துமீறல்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. கடந்த வருடம் பலஸ்தீன் அடிப்படையைக் கொண்டவர் என்று உறுதிப்படுத்தப்பட்ட யாரும் அச்சுறுத்தலாக உள்ளார் எனக் கருதும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இஸ்ரேலிய இராணுவத்திற்கு முழு தகுதியும் உள்ளது என்கின்ற சட்ட மூலமும் ஸியோனிஸ அரசின் யூத இனவாவத்தை சுட்டிக் காட்டுகிறது.


இப்படியிருக்கும்போது ஏன் இஸ்ரேலிய அரசு புதிதாக யூத இனத்திற்கான தேசம் என பிரகடனம் செய்ய வேண்டும்? என்ற கேள்வி எழுவது இயல்பானது. ஸியோனிஸ தேசத்தின் குடியியல் பரம்பலில் (Demography) குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. அதாவது, பலஸ்தீன் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வரும் அதே நேரம், இஸ்ரேலிய யூத இனத்தவர்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டு செல்கின்றது. நீண்ட எதிர்காலத்தில் இஸ்ரேலிய தேசத்திற்குள் பலஸ்தீன் மக்களின் எண்ணிக்கை யூத இனத்தவர்களின் எண்ணிக்கையோடு போட்டி போடும் நிலை உருவாகலாம் என இஸ்ரேலின் குடியியல் நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

*1990-2005* இற்கும் இடைப்பட்ட காலப் பிரிவில் வருடாந்தம் *14000* இஸ்ரேலின் யூத இன பிரஜைகள் நாட்டை விட்டும் வேறு நாடுகளுக்கு குடிபெயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. *1990-2012* இடைப்பட்ட காலப் பிரிவில் *495000* இஸ்ரேலியர்கள் நாட்டைத் துறந்து சென்றுள்ளதாக இஸ்ரேலியப் பத்திரிகையொன்றும் குறிப்பிடுகிறது. *2003* ஆம் ஆண்டு இஸ்ரேலின் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மேற்கொண்ட ஆய்வொன்று கனடாவிலும், ஐக்கிய அமெரிக்காவிலும் *12.5* வீதமான, இஸ்ரேலில் பிரஜைகளாக பதியப்பட்டவர்கள் நிரந்தரமாக தங்கியிருப்பதாக குறிப்பிடுகிறது. கனடாவில் மொன்டிரியல் நகரில் வாழும் யூதர்களில் *85* வீதமானவர்கள் இஸ்ரேலில் இருந்து வெளியேறியவர்கள் எனவும் அவ்வாய்வு மேலும் குறிப்பிடுகிறது. இந்நிலையின் காரணமாக இஸ்ரேலில் பலஸ்தீன் மக்களின் தொகையில் அதிகரிப்பு ஏற்பட்டு வருகின்றது. அதன் காரணமாக *2007* ஆவது ஆண்டு எஹூட் ஒல்மாட்டின் அரசில் இராஜதந்திர விவகாரங்களுக்கான அமைச்சராக இருந்த தற்போதைய வெளிநாட்டமைச்சர் லிபர்மேன் பிரான்ஸ், இத்தாலி, ஜேர்மனி மற்றும் சுவீடன் நாடுகளுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டார். அதில் குடியகல்வு மற்றும் குடிவரவு திணைக்கள அதிகாரிகளை சந்தித்து அங்கிருக்கும் யூத இன இஸ்ரேலியப் பிரஜைகளை பலவந்தமாக நாட்டிற்கு திருப்பி அனுப்புமாறு கோரியிருந்தார். அது மாத்திரமன்றி, அமெரிக்காவில் இயங்கும் யூத லொபயான ஏபேக் அமைப்பு இஸ்ரேலிய யூத இன பிரஜைகள் அமெரிக்காவுக்கு குடிபெயர்வதன் எதிர்கால விளைவுகள் பற்றிய அறிக்கையொன்றை இஸ்ரேலிய அரசுக்கு கையளித்திருந்ததையும் நினைவுகூறத்தக்கது.

இந்தப் பின்புலத்தில், இஸ்ரேல் எதிர்கொள்ளும் உள்ளக குடியியல் பரம்பல் ஏற்றத் தாழ்வுகள் பற்றிய அச்சநிலையும் நெதன்யாகுவின் அமைச்சரவையை அரசின் புதிய தீர்மானத்தை நோக்கி நகர்த்தியிருக்கலாம்.

நெதன்யாகுவின் அரசு தோல்வியை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ஏனென்றால், நாட்டில் பொதுமக்களிடம் பொருளாதார மந்தநிலை மற்றும் விலையேற்றம் பற்றிய கருத்தாடல்கள் மையம் பெறத் துவங்கியுள்ளது. இதனை சமாளித்து எதிர் வரும் *2015* மே மாதம் இடம்பெறும் தேர்தலில் தனது நான்காவது பிரதமர் பதவிக் காலத்தை தக்க வைத்துக் கொள்ள வேண்டுமாக இருந்தால், வழமை போன்று பாதுகாப்பு காரணங்களை (Security concerns) பேசுபொருளாக மாற்றம் பெறச் செய்ய வேண்டும். இதற்கான உத்தியாகவும் இஸ்ரேல் யூத தேசம் என்ற சட்டத்தை இயற்றுவதற்கு அமைச்சரவை உடன்பட்டிருக்கலாம். பென்ஜமின் நெதன்யாகுவின் அரசவையில் பெரும்பாலான யூத இனவாத அமைச்சர்களே உள்ளடக்கப்பட்டுள்ளதனால், அவர் இத்தீர்மானத்திற்கு வந்திருக்கலாம்.

இஸ்ரேலிய பாராளுமன்றத்தின் இயல்பினை தெளிவாகப் புரிந்து கொள்வது இங்கு முக்கியத்துவம் பெறுகிறது. அதாவது இஸ்ரேல் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்தே கூட்டணி அரசாங்கமே இஸ்ரேலை வழிநடத்தி வந்துள்ளது. தற்போதைய அமைச்சரவையும் கூட பிரதமர் நெதன்யாகு, வெளிநாட்டமைச்சர் லிபர்மன் மற்றும் நீதி அமைச்சர் டுபேஸ் லிபனி போன்ற, இஸ்ரேலிய கெபினட்டின் தீவிர யூத இனவாத மும்மூர்த்திகளும் மூன்று வித்தியாசமான உள்நாட்டுக் கொள்கைகளைக் கொண்ட கட்சிகளின் பிரதிநிதிகளே. சிறியளவான கொள்கை வேறுபாடுகளும் அரசவையினை உடைத்து நொறுக்கும் தன்மை கொண்டவை. எனவேதான், *1996* முதல் இன்று வரை எந்த பாராளுமன்றமும் தனது நான்கு வருட பதவிக் காலத்தை பூர்த்தியாக நிறைவு செய்யவில்லை. இந்தப் பின்புலத்தில், நெதன்யாகு மீண்டும் பிரதமர் மாளிகைக்கு உரிமை கொண்டாட வேண்டுமாக இருந்தால், தனது கட்சிக்கார இனவாதிகளை, சில இனவாத சட்டங்களை இயற்றுவதன் மூலம் திருப்திப்படுத்த வேண்டிய நிர்ப்பந்த நிலை காணப்படுகிறது. இதுவும் இஸ்ரேல் யூதர்களுக்கு மட்டுமே உரிய தேசம் என்ற சட்ட மூலத்தை இயற்ற தீர்மானத்தின் பின்புலமாக இருக்கலாம்.



**கடந்த வருடம் பலஸ்தீன் அடிப்படையைக் கொண்டவர் என்று உறுதிப்படுத்தப்பட்ட யாரும் அச்சுறுத்தலாக உள்ளார் எனக் கருதும் பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு இஸ்ரேலிய இராணுவத்திற்கு முழு தகுதியும் உள்ளது என்கின்ற சட்ட மூலமும் ஸியோனிஸ அரசின் யூத இனவாவத்தை சுட்டிக் காட்டுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Firefox
# பயர்பொக்ஸ் பாதுகாப்பு

(சென்றவார தொடர்ச்சி...)

**நோ ஸ்கரிப்ட் (No Script)**

இணையத்தில் எந்த வகையில் நம்மை அழிக்கும் புரோகிராம்கள் வரும் என்று சொல்ல முடியாத வகையில் பல வகை புரோகிராம்கள் உள்ளன. இவற்றில் ஸ்கிரிப்ட் என்பதுவும் ஒன்று. இதிலிருந்து பாதுகாக்கும் வழிகளை இந்த ஆட் ஆன் தொகுப்பு தருகிறது. இந்த புரோகிராமினை https:// addons.mozilla. org/enUS/firefox/ addon /722 என்ற முகவரியிலிருந்து டவுண்லோட் செய்து கொள்ளலாம்.

2006 ஆம் ஆண்டின் சிறந்த புரோகிராமாக இது விருது பெற்றது. பிரவுசருக்கான சரியான பாதுகாப்பினைத் தருகிறது. இந்த புரோகிராம் ஜாவா, ஜாவா ஸ்கிரிப்ட் போன்றவற்றை நாம் அனுமதிக்கும் நேரத்தில், அனுமதிக்கும் தளங்களில் இருந்து வந்தால் மட்டுமே இயங்க வைக்கும். இந்த புரோகிராமினைப் பயன்படுத்துவது குறித்த மேலதிக தகவல்களுக்கு http:// noscript. net/faq என்ற முகவரியில் உள்ள தளத்தினை அணுகவும்.

**WOT - வெப் ஒப் ட்ரஸ்ட் (WOT Web of Trust)**

இணையப் பயன்பாட்டின் போது, நம்முடைய கம்பியூட்டருக்குள் நம் அனுமதியின்றி சிலர் ஊடுருவி, பெர்சனல் தகவல்களைத் திருடும் புரோகிராம்களை இன்ஸ்டோல் செய்திட முயற்சிப்பார்கள். இதுபோன்ற முயற்சிகள் மேற்கொள்ளப்படுகையில் இந்த புரோகிராம் நமக்கு எச்சரிக்கை கொடுக்கும். https:// addons.mozilla.org/enUS/firefox/ addon/ 3456 என்ற முகவரியில் உள்ள தளத்திலிருந்து இதனை பெற்றுக் கொள்ளலாம்.

ஆபத்து நிறைந்த இணைய தளங்களுக்கு நீங்கள் செல்கையில் இது பலத்த எச்சரிக்கையினைத் தரும். ஓர் இணையதளம் ஸ்பாம் மற்றும் மால்வேர்களை அனுப்ப முயற்சிக்கையில் இந்த புரோகிராம் அந்த செயலை மோப்பம் பிடித்து அறிந்து உடனே எச்சரிக்கை கொடுத்து, நம்மை அந்த தளத்தின் இணைப்பைத் துண்டித்துக் கொள்ளச் சொல்லும். இந்த புரோகிராமில் பல இலட்சம் தளங்களின் தன்மை குறித்த தகவல் பதியப்பட்டுள்ளது. இந்த புரோகிராமை பயன்படுத்துவது குறித்த கூடுதல் தகவல்களுக்கும் சப்போர்ட்டுக்கும் http://www.mywot.com/ support என்ற முகவரியில் உள்ள தளத்தினை அணுகவும்.

**ஸ்டெல்தர் (Stealther)**

நாம் இணையத்தில் உலா வருகையில், தகவல்களைத் தேடுகையில், ஈமெயில்களைப் பெறும்போதும் அனுப்பும்போதும் நம் இணையப் பயணம் குறித்த பல தடயங்கள் உருவாக்கப்படுகின்றன. பிரவுசர் ஹிஸ்ட்ரி, குக்கீஸ், டிஸ்க் கேஷ், பைல் ஹிஸ்ட்ரி, படிவங்களில் தரப்படும் தகவல்கள் என இவை பல வகைப்படுகின்றன. இதுபோன்ற எந்த தடயமும் இல்லாமல் இந்த புரோகிராம் பார்த்துக் கொள்கிறது. இதனை https:// addons. mozilla.org/enUS/firefox/ addon/ 1306 என்ற முகவரியில் பெறலாம். இந்த புரோகிராம் நாம் பிரவுசரை இயக்கியவுடன் தானும் இயங்கி தடயங்களை ஏற்படுத்தும் புரோகிராம் பகுதிகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறது.

**ரோபோபோம் டூல்பார் (Roboform Toolbar)**

நாம் பயன்படுத்தும் பாஸ்வேர்ட்களைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள இந்த புரோகிராம் உதவுகிறது. https:// addons.mozilla.org/enUS/ firefox/ addon/750 என்ற தளம் இந்த புரோகிராமைத் தருகிறது.

பாஸ்வேர்ட்களை நினைவில் வைத்து நாம் அவற்றை முறையாகவும் தவறின்றிப் பயன்படுத்தவும் உதவுகிறது.

**கீ - ஸ்கேம்ப்ளர் பேர்சனல் (Key Scrambler Personal)**

நாம் பயன்படுத்தும் பாஸ்வேர்ட்கள் மற்றும் பிற முக்கிய தகவல்களை, நாம் அறியாமலேயே நம் கம்பியூட்டரிலிருந்து அறியும் புரோகிராம்களில் ஒரு வகை கீலோக்கர் உண்டு. இவை நாம் அழுத்தும் கீகளைப் பதிவு செய்து பின் இதனைப் பதித்தவருக்குத் தரும். இன்டர்நெட் மையங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள பொது கம்பியூட்டர்களில் சிலர் இவற்றைப் பதிந்து வைத்துப் பயன்படுத்துவார்கள். ஏன், நம் கம்பியூட்டர்களில் பிறரை அனுமதித்தால், நம் அனுமதியில்லாமலேயே அவர்கள் இந்த வேவு பார்க்கும் வேலையை மேற்கொள்ளலாம். இத்தகைய கீலோக்கர்கள் புரோகிராம்களிலிருந்து நம்மைப் பாதுகாக்கிறது. இந்த Key Scrambler Personal புரோகிராம், பிரவுசர் பாதுகாப்பு என்பது நாம் கட்டாயம் மேற்கொள்ள வேண்டிய ஒரு தடுப்பு வழியாகும். அப்போதுதான் நாம் நிம்மதியாக இணையத்தைப் பயன்படுத்த முடியும்.

ஹஸன் இக்பால் - யாழ்ப்பாணம்

---




***1820*** வரை காந்தம் என்பது இயற்கையாகக் கிடைப்பது என்றே நம்பப்பட்டு வந்தது. மிகவும் பலம் குன்றிய காந்தமான இது, திசை காட்டியாகவும் ஓர் அதிசயமாகவும் மட்டுமே பார்க்கப்பட்டு வந்தது. ஆனால், இன்றைய பல மோட்டார்களிலும் மின்சாரம் தயாரிப்பதற்கும் மின்காந்தம் பெரியளவில் பயன்படுகின்றது. இவ்வளவு ஏன்? அன்றாடம் நாம் வீடுகளில் பயன்படுத்தும் அசையக் கூடிய அனைத்து இயந்திரங்களிலும் இயக்கக் காரணியாக விளங்குவது இந்த மின் காந்தம்தான்.



# ஓயர்ஸ்டெட்டால் எதேர்ச்சையாக கண்டுபிடிக்கப்பட்ட மின்காந்தம்

*1777* இல் தென் டென்மார்க்கில் பிறந்தார் ஒயெர்ஸ்டெட். பல்கலைக்கழகத்தில் அறிவியல் பயின்றாலும் அவருக்கு தத்துவத்தில்தான் ஈடுபாடு அதிகம் இருந்தது. அனைத்து இயற்கை விசைகளிலும் ஓர் ஒற்றுமை இருப்பதாக நம்பிய ஜான் ரைட்டரின் வழி நடப்பவராக இருந்தார். ஒயெர்ஸ்டெட் அனைத்து இயற்கை விசைகளையும் ஆராய்ந்தால் அவை இறுதியில் உர்க்ராஃப்ட் எனும் முதன்மை விசையைச் சென்றடைவதாக இருக்கும் என்று நம்பினார். *1813* இல் அறிவியல் கற்றுத்தரும் ஆசானாக நியமிக்கப்பட்டபோது, அவரது நம்பிக்கையை நிரூபிக்க அனைத்து வேதியியல் விளைவுகளையும் கொண்டு உர்க்ராஃப்டைக் கண்டுபிடிப்பதன் மூலம் அனைத்துக்கும் ஒரே காரணம் என்ற முடிவை எடுப்பதற்காக ஆராய ஆரம்பித்தார்.

*1820* இன் இளவேனிற் காலத்தில், ஹான்ஸ் ஒயெர்ஸ்டெட் ஒரு சமயம் வகுப்பில் தனது உரையை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது: வகுப்பறையில் மாணவர்களுக்கு முன் தனது மாபெரும் கண்டுபிடிப்பை அவர் நிகழ்த்தினார். அது கல்லூரி மாணவர்களுக்கான எளிதான சோதனையாகும். எவ்வாறு மின்சாரம் ஒரு பிளாட்டினம் கம்பியைச் சூடாக்குகின்றது? என்பதே அந்தச் சோதனை. ஓயர்ஸ்டெட் மின்சாரத்திலோ, காந்தவியலிலோ தனது கவனத்தைக் காட்டியவரல்லர். இருந்தாலும் ஒரு திசைகாட்டியைத் (காந்த ஊசி) தனது மேசையில் இந்தச் சோதனை நிகழும்போது வைத்திருந்தார்.

மின்கலத்தில் கம்பியை வைத்துத் தொட்டதுமே காந்த ஊசி [illegible] னம் கம்பியை நோக்கிச் செங்குத்தாகத் திரும்பி நின்றது. மின்கலத்திலிருந்து கம்பியை அகற்றியதும் காந்தம் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டது. ஒவ்வொரு முறை அவர் மின்கலத்தைப் பிளாட்டினம் கம்பி கொண்டு தொட்டதும் காந்த ஊசி திரும்புவதும், பின் பழைய நிலைக்குச் செல்வதுமாக ஆட்டம் காட்டியது. இது அனைத்தும் வகுப்பு மாணவர்களின் முன்னிலையில் நடந்தேறியது. மாணவர்களின் கவனம் முழுதும் அதில் சென்றதால் ஓயர்ஸ்டெட் தனது உரையின் போக்கை மாற்றி வகுப்பைத் தொடரலானார்.

அதன் பின்னும் ஓயர்ஸ்டெட் அடுத்த மூன்று மாதங்களில் கோடை வரும் வரை இந்த அதிசயம் குறித்து ஆராய்ச்சி செய்யவில்லை. அதன் பின்னர்தான், மின்சாரம் காந்தத்தின் மீது என்ன விசையைப் பிரயோகிக்கின்றது என்று கண்டறிய முற்பட்டார். இதைக் கொண்டு உர்க்ராஃப்டைக் கண்டறிய முடியுமா என்ற சிந்தனைதான் அவருக்கிருந்தது.

அவரும் கம்பியை காந்த ஊசியின் மேலே, கீழே, இரு புறங்களிலும் என்று வைத்துப் பார்த்தார். பின்னர் மின்சாரத்தின் ஓட்டத்தை மாற்றிக் கொடுத்துப் பார்த்தார். ஒரு கம்பிக்குப் பதிலாக இரண்டு கம்பிகளைக் கொண்டு ஆய்வைச் செய்து பார்த்தார். ஒவ்வொரு முறை கம்பியை அசைக்கும் போதும் அது காந்த ஊசியின் மேல் ஏற்படுத்தும் அசைவை மிகக் கவனமாக கண்காணித்தார். ஓயர்ஸ்டெட் இறுதியாக மின்சார ஓட்டமும் காந்தமும் கவர்ச்சி மற்றும் விலகல் ஆகிய விசைகளை ஒரே நேரத்தில் கொண்டிருப்பதை உணர்ந்தார். சில மாதங்கள் ஆய்வுக்குப் பின்னர், மின்சார ஓட்டம் தன்னைச் சுற்றி ஒரு காந்தப் புலத்தை உருவாக்குவதைக் கண்டறிந்தார். அது நியூட்டன் குறிப்பிட்டது போல் அல்லாமல் புதிய ஒரு விசையாக இருப்பதையும் கண்டார். இந்த விசை நேர் கோடுகளில் செல்லாமல், தன்னைச் சுற்றி வட்டமான பாதையில் சென்றது. குறிப்பாக, மின்சாரம் ஏந்திய கம்பிகள் காந்தத்தின் அனைத்துப் பண்புகளையும் கொண்டிருந்தன. இதன் மூலம் மின்காந்தவியல் என்பது கண்டறியப்பட்டு விட்டது.

ஓயர்ஸ்டெட்டைக் கௌரவிக்க டென்மார்க் அரசு ஒருபுறம் அவரது படத்தையும் மறுபுறம் காந்த ஊசியையும் கொண்டு நோட்டை வெளியிட்டு சிறப்பித்தது.

## உங்களுக்குத் தெரியுமா?

தென் அமெரிக்காவின் அமேசன் நதியில் காணப்படும் ஈல் (Eel) மீனின் உடலில் சுமார் 600 வாட் மின்சாரம் இயற்கையாக உற்பத்தியாகிறது. மனிதனையும் பிற உயிரினங்களையும் பாதிக்கும் இந்த மின்சாரம் இன்னொரு ஈல் மீனை ஒன்றும் செய்யாது.

தென் அமெரிக்காவின் கடலோரத்தில் காணப்படும் அனெப் லெப்ஸ் என்ற மீனுக்கு 4 கண்கள் இருக்கும். 2 கண்களால் நீர் மட்டத்திற்கு மேலேயும் இரண்டு கண்களால் நீர் மட்டத்திற்குக் கீழேயும் பார்க்குமாம்.

அமெரிக்கக் கடல்களில் காணப்படும் பிரானா என்ற மீன் 15 செ.மீ. நீளமே இருக்கும். ஆனால், மிகப் பெரிய கடல் வாழ் உயிரினங்களை தன் கூரிய பற்களால் குத்திக் கொன்றுவிடுமாம்.

பூமியில் வாழும் உயிரினங்களிலேயே மிகவும் பெரியது கடலில் வாழும் நீலத் திமிங்கிலம். இது, 20 யானைகளின் எடை கொண்டது. இதன் குட்டி 3000 கிலோ எடை இருக்குமாம்.

உலகிலேயே சாலி (சேல்) மீன்கள்தான் அதிவேகமாகச் செல்பவை ஆகும்.

உலகில் நீண்ட காலம் வாழும் உயிரினம் ஆமை ஆகும். இதற்குப் பற்களே கிடையாது. கடல் ஆமைகள் 100 முட்டைகள் வரை இடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்கள் தேசம்

தயாரிப்பு: சமீலா யூசுப் அலி

# இனிய தோழியே இல்லத்தின் அரசியே உனக்கொரு மடல்

- சமீலா யூசுப் அலி -

நாள் முழுதும் நீ என்ன செய்து கிழித்துவிட்டாய் எனப் பலர் உன்னைக் கேட்கிறார்கள். எனக்கது புரியும். ஏனெனில் நானுமோர் அன்னை. நீ செய்வதையெல்லாம் நானும் சில காலம் செய்திருக்கிறேன்.

சம்பளமில்லாத வேலை உன்னது. அதை விடவும் சொல்லப் போனால், யாரும் நன்றி கூறாத வேலை. அதிகாலை கண்விழிக்கும் நேரத்திலே ஆரம்பிக்கும் அந்த இடையுறாத பணிகள் நீ உறங்கச் செல்லும்போது கூட முடிவடைவதில்லை. உனக்கு சனி, ஞாயிறு கூட விடுமுறைகள் இல்லை. அதற்கான வெகுமதிகள் சந்தோஷம் தருவனதான். எனினும் அவை மிகச் சொற்பம்.

மிக அரிதாகவே உனக்கு சூடான ஒரு கப் தேநீரோ, கோப்பியோ அருந்தக் கிடைக்கிறது. ஒரே மூச்சில் உன் னால் காரியங்களை சாதிக்க முடியாது. உன் அவதானம் ஒவ்வொரு கணமும் பிரிந்து வெவ்வேறு வேலைகளுக்குச் செல்வதும் எனக்குத் தெளிவாகப் புரியும்.

உனக்கென்று நேரம் எங்கே கிடைக்கப் போகிறது.

ஒவ்வொரு நாளும் நீ சந்திக்கும் சவால்கள் ஏராளம். அரிதாகவே உனக்கு சுற்றிவர உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கிறது. குழந்தையின் அழிச்சாட்டியம், குளியலறை சிறு விபத்துகள், கெஞ்சலும் கொஞ்சலும் பலிக்கா சாப்பிட வைக்கும் யுத்தம்,



சுவரில் கிறுக்கிய க்ரேயோன் கலர்கள், வீடெங்கும் விதைத்துக் கிடக்கும் சோற்றுப் பருக்கைகள், சகோதரர்களுக்குள் ஏற்படும் உலக மகா யுத்தங்கள்... முடிவுறாத பட்டியல் இன்னும் நீளும்.

முடிவிலி வட்டமாய் சமையல், சாப் பாட்டை ஊட்டும் படலம், வீட்டைப் பெருக்கி பாத்திரம் கழுவி துணி துவைத்துக் காயப்போட்டு மீண்டும் அதையெடுத்து மடித்து... அப்பப்பா அதே வேலை நாளுக்கு மூன்று தரம் மீளச் செய்ய வேண்டும்.

உனக்கும் கனவுகள் உண்டு. ஒரு மணித்தியாலம் தனியாகக் கிடைத்தால் பகல் போசனத்தை நிம்மதியாக உண்ணலாம். நீண்ட நாள் நினைக்கும் நாவலை வாசிக்கலாம். பிற்பகல் வேளையில் குட்டியாக ஒரு தூக்கம் போடலாம். வேலை மிகுந்து உடல் சோரும் பொழுதுகளில், நீ இது தேவையா எனக்கு என்று பெருமூச்சு விடுவாய் அல்லது பணி புரியும் உன் சக தோழிகளுக்கு கிடைக்கும் உணவு இடைவேளை பற்றிப் பொறாமைப்படுவாய். இவையெல்லாம் எனக்குப் புரியாதென்றா நினைக்கிறாய்?

வேலை முடிந்து உன் துணைவன் வீடு வரும் வேளை நீ முழுவதுமாய் களைத் திருப்பாய். கால்கள் ஓய்விற்காய்க் கெஞ்சும். அப்போதுதான் கணவனும் அக்கடா என்று கால் நீட்டிப்படுப்பான். ஒரு தேநீருக்காய் உத்தரவிடுவான். அப்போது உனக்கு அழுகை பொத்துக் கொண்டு வரும்.

இனியவளே, உன்னை அநேகமானவர்கள் புரிந்து கொள்ளவில்லை. நீ வீட்டில் சும்மா இருக்கிறாய் என்று நாக்கூசாமல் சொல்லுகிறார்கள். இத்தனை வேலை செய்தும் உனக்கு பணச் சுதந்திரம் கூட இல்லாமல் போய் விடுகிறது. உன்னிடமும் காசு புழங்கினால் எப்படியிருக்கும்? என்னென்ன வாங்கலாம் என்று உனக்கும் ஆசைகள் உண்டல்லவா?

பலருக்குப் புரிவதில்லை, நீயும் பணி புரியும் பெண் என்று. ஒரே ஒரு வித்தியாசம்: என்னைப் போல் நீ சம்பளம் எடுப்பதில்லை.

நீ எப்படி, இப்படி எல்லாவற் றையும் சமாளித்து சிரித்த முகத்துடன் வலம் வருகிறாய் என்று அடிக்கடி ஆச்சரியப்படுகிறேன். உன் எல்லையில்லாத பொறுமையும் தியாகமும் என்னை பொறாமைப்பட வைக்கின்றன. எந்தப் பிரதிபலனும் எதிர்பாராது நீ மற்றவர்களுக்காக உழைக்கிறாய். உனக்குப் பதவி உயர்வு இல்லை; புகழ் இல்லை; சம்பளமும் இல்லை. ஆனால் உன் குழந்தைகள், கணவருக் காய் எப்போதும் நீ அளவிலா அன்போடு, முனைப்போடு முன்னிற்கிறாய் என் பிரமிப்பு பல மடங்காகிறது.

உன்னிடம் சொல்வதெல்லாம்: நீ பெறுமதியானவள் என்பதை ஒரு போதும் மறந்துவிடாதே.

உன்னை நூறு வீதம் நான் புரிந்து கொள்கிறேன். ஏனெனில் நானும் ஒரு பெண்.

அன்புடன்,
பணி புரியும் பெண்.






# குழந்தைகள் எடை குறைவாக, அதிகமாக பிறப்பது ஏன்?

சிசேரியனா, சுகப் பிரசவமா? ஆணா, பெண்ணா? இந்தக் கேள்விகளைத் தொடர்ந்து, குழந்தையோட வெயிட் என்ன? என்ற கேள்வியையும் தாய்மார் எதிர்கொள்வர். முதல் இரண்டு கேள்விகளைப் போலவே மூன்றாவதும் அத்தனை முக்கியமானது! சராசரிக்கும் குறைவான எடை... சராசரியை விட அதிகமான எடை... இவை இரண்டுமே பிரச்சினைக்குரியவைதான். குறைவான எடையுடன் குழந்தைகள் பிறக்கும்போது கவலை கொள்கிற பலரும் சராசரியை விட அதிக எடையுடன் பிறக்கும்போது அவ்வளவாகக் கண்டு கொள்வதில்லை. குண்டுக் குழந்தைதான் ஆரோக்கியமானது எனக் காலங் காலமாக மக்கள் மனதில் ஊறிப்போன தவறான கருத்தே காரணம்!

கர்ப்ப காலத்தில் தாயின் உடல் நிலையில் பிரச்சினைகள் எதுவும் இருந்தால் அது பிறக்கும் குழந்தையின் எடையில் பிரதிபலிக்கும். குழந்தைகள் குறைந்த எடையுடன் பிறக்காமல் இருக்க குழந்தைப் பேற்றுக்கு முன் மகப்பேறு மருத்துவரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வது அவசியம். தைராய்டு, இரத்த அழுத்தம், இதய நோய், நீரிழிவு போன்ற பிரச்சினைகள் இருப்பின், முறையான சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டும். ஏதாவது ஊட்டச்சத்து குறைபாடு இருப்பின் அதை நிவர்த்தி செய்து கொள்வதும் அவசியம். தாயின் இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைந்தளவு இருந்தாலும் நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தாலும் குழந்தை, குறைந்த எடையுடன் பிறக்கும்.

கர்ப்ப காலத்தில் தாய்க்கு உணவில் இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம், கல்சியம், விட்டமின் B12, தேவையான கொழுப்பு அமிலம் போன்றவை அவசியம். கர்ப்பிணிக்கு சத்துக் குறைவு இருப்பின், இரத்த நாளங்களில் சத்துத் திரவங்களை செலுத்தியும் சரி செய்யலாம். தாயின் எடை, இரத்த அழுத்த நிலை ஆகியவற்றை சரி பார்ப்பதுடன், அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் கருவில் இருக்கும் குழந்தையின் வளர்ச்சியில் ஏதேனும் பிரச்சினை இருந்தால் அறிந்து சரி செய்து கொள்ள முடியும்.

கர்ப்ப காலத்தில் இருக்கும் பெண்ணின் பி.எம்.ஐ. எனப்படும் உடல் சுற்றளவு மற்றும் பருமனை கணக்கில் கொண்டு அதற்கு ஏற்றளவில் உணவு கொடுப்பது அவசியம். பச்சைக் காய்கறிகள், சிவப்பு நிற பழங்கள் மற்றும் காய்கறிகளில் ரெட் கரோட்டின் உள்ளது. இது கர்ப்பிணிகளுக்கு மிகவும் அவசியம். கரட், தக்காளி, குடை மிளகாய், அப்பிள் போன்றவை நல்லது. புரதம் அதிகமுள்ள பால், மீன், முட்டை போன்ற உணவுகளும் எடுத்துக் கொள்ளலாம். பதப்படுத்தப்பட்ட உணவுகள், கேன்களில் அடைக்கப்பட்ட பானங்கள் போன்றவற்றை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்.

பிரசவத்தில் உயர் இரத்த அழுத்தம் ஏற்படாமல் இருக்க உப்பை குறைத்துக் கொள்ள வேண்டும். பருமன் அதிகமுள்ள பெண்கள் பிரசவத்தில் ஏராளமான பிரச்னைகளை சந்திக்கிறார்கள். இவர்களுக்கு எடை அதிகமுள்ள குழந்தைகள் பிறக்கும் வாய்ப்புகள் அதிகம். இவர்களால் கர்ப்ப காலத்தில் எந்த வேலையும் செய்ய இயலாமல் போவதும் அதிக எடை கொண்ட குழந்தை பிறக்க காரணமாக அமைகிறது. அதிக எடை கொண்ட குழந்தை பிறப்பதை மேக்ரோசொமியா என்று மருத்துவத்தில் கூறப்படுகின்றது. எடை அதிகமான குழந்தைகளைப் பெற்றெடுக்க சிசேரியன் தேவைப்படலாம். பிரசவத்தின் போது அதிக இரத்தப்போக்கு ஏற்படலாம். அதிக எடையுள்ள குழந்தை பிறந்தால், பிரசவத்துக்குப் பிறகு தாய்க்கு நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் உண்டாகலாம். கர்ப்பத்துக்கு முன்பே நீரிழிவையும் எடையையும் கட்டுக்குள் வைத்திருந்தால் இந்தப் பிரச்சினை வராமல் தப்பிக்க முடியும்.

### எது சரியான எடை?

பிறக்கும் குழந்தையின் சராசரி எடை 2.5 கிலோ முதல் 2.8 கிலோ வரை இருக்க வேண்டும். 2.5 கிலோவுக்கு குறைவாக இருந்தால் குறை எடையுடைய குழந்தைகள்; 4 கிலோவுக்கு மேல் இருந்தால் அதிக எடையுள்ள குழந்தைகள் தாய்வழி பருமனால்தான் பெரும்பாலும் பிறக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைத்திரி VS மஹிந்த…

(05 ஆம் பக்கத் தொடர்)





ஒற்றுமையாக ஒன்றிணையுங்கள். ஒன்று பட்டுக் கலந்துரையாடுங்கள் போன்ற கதைகளையே அவர் கூறி வருகிறார். பொது எதிரணி லியுஜெட் அரசனைப் போன்று செயற்பட்டால் ராஜபக்ஷ அணி அதற்கு மேலால் வெற்றி பெறும். ஒரு புறத்தில் ரணில் இவ்வாறு அநாவசியமற்ற கருத்துக்களை சொல்லி வருகின்ற அதேவேளை அக்கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஹம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் சிறிய கூட்டங்களை நடாத்தி அங்கு பண அன்பளிப்புக்களைச் செய்து வருகின்றார். அவர் பொது எதிரணியின் பிரதான மேடைகளுக்கு சமூகமளிப்பதைக் காணக் கிடைப்பதில்லை. இத்தகைய பல விடங்களைப் பற்றி மைத்திரிப்பால சிந்திக்க வேண்டியுள்ளார்.

இவருக்கு தனது அணியின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அவ்வளவு அதிகமான காலங்கள் இல்லை. மைத்திரிபால பிரதான பல பாத்திரங்களுக்கு மத்தியில் சிக்கித் தவித்து வருகிறார். ஒரு புறத்தில் சந்திரிகா மறுபுறத்தில் ரணில் இன்னொரு புறத்தில் சரத் பொன்சேகா. போதாக் குறைக்கு இவருக்கு சிறுபான்மையினரின் வாக்குகள் இன்றி வெற்றி பெற முடியாத நிலைமையும் உள்ளது. இத்தகையதோர் இடத்திலுள்ள இவருக்கு சந்திரிகா, ரணில், சரத் பொன்சேகா போன்றவர்களை சந்தோஷப்படுத்தி விடுவதில் மாத்திரம் திருப்தி காண முடியாதுள்ளது. அவருக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸையும் திருப்திப் படுத்த வேண்டியுள்ளது.

மைத்திரிபால தன்னுடைய தேர்தல் திட்டத்தில் எவ்விடத்திலேனும் தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் எந்தவொரு தீர்க்கமான கருத்தையும் தெரிவிக்கவில்லை. நாட்டில் நிலவி வரும் ஜனநாயகப் போராட்டப் பிரச்சினையில் சிறுபான்மை இனத்தவர்களது விவகாரங்களில் செயற்படுத்தப்பட்டு வருகின்ற அழுத்தப் பிரயோகங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இதன் முக்கிய பகுதியாக இருப்பது, இராணுவத்தினரை ஈடுபடுத்தி வடக்கில் முன்னெடுத்து வருகின்ற இராணுவ ஆக்கிரமிப்பாகும். ஹெல உறுமய உள்ளடங்கலான எதிரணிக்குள் எதிர்வரும் காலங்களில் அத்தகைய ஆட்சிக்கு எதிரான எவ்வித விமர்சனங்களையும் கண்டுகொள்ள முடியாது போகும். இந் நிலையில் தேர்தலின் பின்னர் உருவாக்கப்படுகின்ற தேசிய அரசில் பாதுகாப்பு அமைச்சின் பொறுப்புக்களை முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு வழங்குவதற்கான உடன்பாடுகளும் எட்டப்பட்டுள்ளதாக ஒரு சில ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இராணுவ மயமாக்கம் தொடர்பில் பொன்சேகா என்பவர் கோதபாய ராஜபக்ஷவினையொத்த பின்புலத்தைக் கொண்ட நபர் ஒருவர் என்பது பிரபலமான விடயமாகும். நாட்டில் நிலவிவரும் சிங்கள பௌத்த இனவாத மேலாதிக்கத்தின் விடயதானத்தை மீள்நிர்மாணம் செய்து கொண்டுள்ள மைத்திரிபால லிபரல்வாத மத்திய தர முதலாளிகளது அபிலாஷைகளை நிறைவேற்றுவாரா என்பதும் ஒரு பிரச்சினையாக உள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவினுடைய மேலாதிக்க சக்தியின் கூடுதல் பங்குதாரர்கள் கிராமிய பௌத்தச் சிங்களவர்களாவர். சிறுபான்மையினர் மீதான சிங்களப் பெரும்பான்மையினரின் மேலாதிக்கம் தொடர்பிலான அடையாளச் சின்னமே மஹிந்த ராஜபக்ஷ ஆவார். இவருடைய அரசியல் சுயரூபத்தை செதுக்கியவர்களே இவர்களாவர். ராஜபக்ஷவினுடைய பாரம்பரிய முதலாளித்துவ எதிர்ப்பாளியான ரணில் விக்கிரமசிங்கவிடம் காணப்படாதிருந்ததாகக் கருதப்படுவதும் இத்தகைய கிராமிய பௌத்தச் சிங்கள சுயரூபமாகும். மைத்திரிபாலவினுடைய தேர்தல் திட்ட அமைப்பிற்குள் தற்பொழுது மீள் உற்பத்தியாகிக் கொண்டிருப்பதும் ராஜபக்ஷ மேலாதிக்கச் சக்திக்குள் நிலவும் சிங்களவாத விடயதானமாகும். ராஜபக்ஷவினைப் போன்று மைத்திரிபாலவும் தற்பொழுது சிங்கள பௌத்த கிராமியத் தலைவனது கதாபாத்திரத்திற்கு உயிர் கொடுத்துக் கொண்டுள்ளார். பிக்குகளது முன்னிலையில் கும்பிட்டு விழுவது, பிரித் நூல்களைக் கையில் கட்டுவது போன்ற கிரியைகள் தொட்டு எந்தவொரு நிலையிலும் இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்காத வாக்குறுதிகள் வரையில் இவருடைய செயற்பாடுகள் முன்னகர்ந்து கொண்டுள்ளன.

கடந்த தினம் ஹெல உறுமயவுடன் மேற்கொண்ட உடன்படிக்கையில் இராணுவத்தினரைக் காட்டிக் கொடுக்காத பந்தியொன்றும் உள்ளடங்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அத்தோடு தேசிய பிக்குமார் சம்மேளனத்துடன் கடந்த வராம் மைத்திரிபால ஒரு உடன்பாட்டுக்கு வந்திருந்தார். அவர்கள் மைத்திரிபாலவிடம் முன்வைத்த வாக்குறுதிகளில் ஒன்றாக தலதா மாளிகையைச் சூழவுள்ள பகுதிகளில் மதுபானக் கடைகளை மூடவேண்டும் என்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே பொதுவேட்பாளர் மைத்திரிபால மஹிந்தவை எதிர்த்துப் போட்டியிடுவதில் பலரது ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் அனைத்துத் தரப்பினருடனும் உடன்படிக்கைகளைக் கைச்சாத்திட்டுக் கொண்டுள்ளார். இதில் மஹிந்தவும் மைத்திரியும் ஒருமித்த இயல்புகளைக் கொண்டுள்ளனர் என்றே கூற வேண்டும்.

கிராமிய சிங்கள பௌத்த அடிப்படையைக் கொண்ட மஹிந்த நாட்டில் பௌத்தத்தைக் காக்கும் நோக்கில் பௌத்தம் சிறுபான்மையினருக்கு எதிராக முன்னெடுத்த வேலைத் திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்தார். அதன் கொடூர விளைவுகளை பாதிக்கப்பட்ட எம் மக்கள் இன்றும் அனுபவித்துக் கொண்டுள்ளனர். மஹிந்தவின் பாணியில் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்ற மைத்திரியும் அத்தகையதோர் ஆட்சியாளருக்குரிய பண்புகளையே அணிகலனாகக் கொண்டுள்ளார். தற்பொழுது தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்துள்ளது. மேற்குறிப்பிட்ட கொள்கைத் திட்டங்களைக் கொண்டுள்ள இரு வேட்பாளர்களினதும் போராட்டத்திற்கு மத்தியில் யார் வெல்வார் என்று பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## தேர்தல் வன்முறை…

முன் பக்கத் தொடர்

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு, தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், சர்வதேச ட்ரான்ஸ் பெரன்சி நிறுவனம் உள்ளிட்ட தேர்தல் வன்முறைகளை கண்காணிக்கும் பல்வேறு அமைப்புகள் இணைந்து இலங்கை மன்றக் கல்லூரியில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலே இவ்வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

எமது நாட்டில் அரசியல் அமைப்பில் 18 ஆவது சீர்திருத்தம் கொண்டு வரப்பட்ட பின்னர் நடைபெற்ற தேர்தல்களில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன. 2002 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் காரணமாக 58 பேர் உயிரிழந்துள்ளதாக அவ் ஊடக சந்திப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்முறைச் சம்பவங்களோடு அரச பொது வளங்களும் பெரும்பாலும் உபயோகிக்கப்படுகின்றன. வரலாற்றில் இத் தேர்தலானது அதிகரித்த வன்முறைகளையுடைய தேர்தலாக மாறிவிடும் என மக்கள் மத்தியில் அச்சம் நிலவுவதாகவும் அவ்வமைப்புக்கள் மேலும் தெரிவித்துள்ளன.

## மலையக வாக்காளர்…

(09 ஆம் பக்கத் தொடர்)





ஆனால் கடந்த பத்து வருடங்களாக வாயளவில் மட்டும் மலையக மக்களுக்கு சேவையாற்றி வரும் ஆளும் கூட்டணி அரசுக்கு இ.தொ.கா. நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவதாக அறிவித்திருக்கிறது. அரசியல் அரங்கில் எதிர்பாரா கட்சி மாற் றங்கள் ஏற்பட்ட பின்னரும் கூட தன் முடிவை இ.தொ.கா. மாற்றிக் கொள்ளா மல் இருப்பது மலையக வாக்காளர் மத்தி யில் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இத்தேர்தலில் மஹிந்தவுக்கு ஆதரவாக செயற்படுவது, முடிவில் அவர் வெற்றி பெறுவாரானால் தொடர்ந்து பதவி சுகத்தை அனுபவிப்பது என்பது இ.தொ.கா.வின் காய் நகர்த்தலாக இருக்கலாம். மஹிந்த தோல்வியைத் தழுவினால், பாராளுமன்றம் கலைக்கப்படும் வரை காத்திருப்பார்கள். பாராளுமன்றத் தேர்தலின் பின்னர் யார் ஆட்சி அமைக்கப் போகிறார் என்பது தெரிந்த விடயம் என்பதால் ஐ.தே.க. கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்து தேர்தலில் இ.தொ.கா. போட்டியிடும். வெற்றி யீட்டிய பின்னர் புதிய அரசில் தொடர்ந்து பதவி சுகம் அனுபவிக்கலாமே என்பதே இ.தொ.கா. தலைமையின் திட்டமாக இருக்க வேண்டும். முன்னரும் அப்படித் தான் இருந்திருக்கிறது.

யார் நாட்டை ஆண்டாலும் அமைச்சுப் பதவிகள் தமக்குரியவையாக இருக்க வேண்டும் என்பதே இ.தொ.கா.வின் தாரக மந்திரம். அது எப்படியானாலும் 1977 முதல் இன்று வரை இந்த மந்திரம் தோட்டத் தொழிலாளர் புண்ணியத்தில் நன்றாக வேலை செய்து கொண்டுதான் இருக்கிறது.

தோட்டத் தொழிலாளர்கள் 'ஐயா சொன்னார்' என்பதற்காக 'ஐயா' கைகாட்டும் நபருக்கு வாக்களிப்பதை முதலில் கை விட வேண்டும். 'ஐயாமார்' நமது நன்மைக்கு அல்லாமல் 'ஐயாமாரின்' நன்மைகளுக்காகவே வாக்களிக்கும்படி சொல்கிறார்கள் என்பது என்றைக்கு மலையக பெருந் தோட்ட வாக்காளர்கள் புரிந்து கொள்கிறார்களோ அன்றைக்குத்தான் விமோசனம் கிட்டும்.

தோட்ட மக்களுக்கு இன்றைக்கும் இந்த சில்லறை அரசியல் தந்திரங்கள் புரிய மாட்டேன்கிறது என்பதே ஐயர்மாருக்கு வாய்ப்பாக இருந்து வருகிறது. ஆனாலும் எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் பெரு மளவிலான மலையகத் தமிழ் வாக்காளர்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதற்கான வாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது. ஏனெனில், கடந்த பத்து வருடங்களாக இந்த அரசு மலையக மக்களுக்கு சொல்லி மெச்சக் கூடிய வகையில் எந்த நன்மையும் செய்யவில்லை. சம்பள பேச்சுவார்த்தை களின் போது பேரம் பேசுவது, எதிர்ப்புக் குரல் விடுத்து அழுத்தம் கொடுப்பது என்ப தெல்லாம் இன்றைக்கு மலையேறிப் போன விஷயங்கள். கடந்த முறை எவரும் அறி யாத நிலையில் காதும் காதும் வைத்த மாதிரி சம்பள பேச்சுவார்த்தையை முடித்துக் கொண் டார்கள். அதாவது முதலாளிமார் சம்மேளனத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வுக்கு வருவதற்கு அப்பால், இவ்விரு தரப்பினருக்கும் இடையில் இருக்கக் கூடிய ஒரு மூன்றாம் தரப்புக்குக் கட்டுப்பட்டே பேச்சுவார்த்தை நடத்தி முடிக்கப்படுவது மாதிரி ஒரு தோற்றம் தெரிகிறது.

வீடமைப்புத் திட்டம், காணியுரிமை எல்லாம் பேச்சளவில்தான். இ.தொ.கா. வினால் என்னத்தை சாதிக்க முடியும் என்பதற்கு நல்ல உதாரணமே மீரியபெத்த வீடமைப்புத் திட்டம். காணி அடையாளம் காட்டப்பட்டதும் வீடமைக்கும் வேலை ஆரம்பமாகி விடும் என ஆறுமுகன் தொண்டமான் நம்பிக்கையோடு தெரிவித்திருந்தார். மக்களும் அப்படித்தான் நம்பினார்கள். ஆனால் வீடு அமைக்கப்படுவதற்கான எந்த சமிக்ஞைகளும் காணோம். தேர்தல் களேபரத்தில் அது நடக்கப் போவதில்லை. நீங்கள் எனக்கு வாக்களித்தால் வீடுகள் கட்டித் தரப்படும் என்று வேண்டுமானால் 'பிளேட்'டை மாற்றிப் போடலாம்.

ஊவா மாகாணத் தேர்தலின்போது மூவாயிரம் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அரசு இ.தொ.கா. தரப்பில் 'கானல் நீர்' காட்டப்பட்டது. ஆனால் மலையகத் தமிழர்கள் அரசு-இ.தொ.கா. தரப்புக்கு பெரிய ஆதரவைத் தராமல் விட்டதால் மலையக ஆசிரியர் நியமனம் பெரும்பாலும் கைவிடப்பட்ட கேஸாகவே இருக்க வேண்டும். அநேகமாக பாராளுமன்றத் தேர்தலின்போது 'ஆசிரியர் நியமனம்' பூச்சாண்டியை இவர்கள் கையில் எடுக்கலாம்.

இப்படித்தான் மானங்கெட்ட விதமாக மலையக அரசியல் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. முற்றிலுமாக ஒரு சரணாகதி அரசியல் மலையகத்தில் காணப்படுகிறது. இ.தொ.கா. தன் பேரம் பேசும் சக்தியை முற்றிலுமாக இழந்து நிற்கிறது. பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்கின்ற நிலை.

இது மாற்றப்பட வேண்டும். மாற்றலாம்தான். 'ஐயாமாரின்' பேச்சைக் கேட்காமல் சுயமாக சிந்தித்து மலையக மக்கள் வாக்களித்தால் மாற்றத்தைக் கொண்டு வரலாம். வாக்காளர்கள் தீர்மானிக்கும் சக்தியாக இருக்கும்போது, கட்சிகள் சொல்வதை இவர்கள் ஏன் கடவுள் கூற்றாக ஏற்க வேண்டும்?

## ஆட்சி மாற்றத்தில்…

(09 ஆம் பக்கத் தொடர்)

அன்று அக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கும் கற்றறிந்த மக்களாவர். சர்வாதிகாரம், குடும்பாதிக்கம், ஊழல், பங்காளிப் பொருளாதார முறை, இராணுவ மயமாக்கல், சமூக சீர்குலைவுகள் இல்லாத சமூகமொன்று ஆகியவற்றை இலக்காகக் கொண்டு நடத்தப்பட்ட அக்கூட்டத்தில் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், தொழில் சங்கத் தலைவர்கள், வியாபாரிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பல்துறையினர் தம் கருத்துக்களை முன்வைத்தனர். இதற்கும் மேலதிகமாக, அன்றைய மேடை பல்வேறு பிரசித்தி பெற்ற மக்களினால் அழகு பெற்றது. அவர்கள் அனைவரும் இந்த பிரஜைகள் இயக்கத்திற்கு பெரும் துணையாகவும் எழிலாகவும் இருந்தனர் என்றால் மிகையாகாது.

இன்றைய காலம், கலைஞர்களும் அறிஞர்களும் கல்விமான்களும் புத்திஜீவிகளும் மக்களுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டிய காலமாகும். இப்போது நீங்கள் பேச வேண்டும். அதனை மனைவி மக்களோடும் நண்பர்களுடன் அரட்டை அடிக்கும்போதும் செய்யும் விமர்சனங்களுடன் சுருக்கிக் கொள்ளக் கூடாது. விமர்சனங்கள் மக்கள் சபைக்கு, பொது மேடைக்கு வர வேண்டும். பிரஜைகளின் பலம் என்பதும் அது வேண்டி நிற்பதும் இந்த முன் வருகையைத்தான்.

அலரி மாளிகையில் கொடுக்கப்படும் தன்சல் போன்று விருந்து படைக்க எம்மால் முடியாது. அவ்வாறான தன்சல்களை கொள்கை அளவில் நிராகரித்தாலும் பல்வேறு நிலைமைகளின் அழுத்தங்களினால் அவற்றைப் புறக்கணிக்க முடியாமல் மனதால் நொந்து அழுகின்ற கலைஞர்கள், புத்திமான்கள் பலர் இந்நாட்டில் இருப்பதை நாம் அறிவோம். பிரஜைகளின் பலத்தின் மூலம் பொது மேடைகளில் அவர்களுக்குத் தமது தன்னபிமானத்தின் உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும். கலைஞர்களும் புத்திமான்களும் உரித்தாக்கிக் கொள்ள வேண்டிய சுயாதீனத்திற்கான உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

கலைஞருக்கும் புத்திமான்களுக்கும் தன்மானமுள்ள பிரஜைகளுக்கும் இதைவிட பெரிய சொத்தொன்று இருக்க முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிறைவேற்று

முன் பக்கத் தொடர்

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வழங்கப்படுகின்றது. நான் சுகபோக ஏசி அறையில் இருந்து கொண்டு வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கவில்லை. மக்களோடு மக்களாக இருந்து கொண்டு உங்களது பிரச்சினைகளை கேட்டறிந்து சிறந்த வரவு-செலவுத் திட்மொன்றை இம்முறை தயாரித்துள்ளேன். அதில் இப்போது நீங்கள் நன்மையடைகின்றீர்கள்.

இந்த உலகில் உள்ள வெளிநாட்டு துரோகிகள் ஈராக், சிரியா, எகிப்து மற்றும் லிபியா போன்ற நாடுகளில் குழப்பத்தை ஏற்படுத்தி ஆட்சியை கவிழ்த்தார்கள். அதேபோன்று இலங்கையிலும் ஏற்படுத்த வெளிநாட்டவர்கள் டொலர்களை கொடுத்து சதி செய்கின்றார்கள். இந்த சதிகளுக்கு மக்களாகிய நீங்கள் விலைபோக வேண்டாம்.

எனது கை ஒருபோதும் கறைபடிந்த கையல்ல. அப்படி நடந்திருந்தால் அக்கையை வெட்டி வீசி விடுவேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு தெரிவித்தார்.

## தேசிய அரசில்...

முன் பக்கத் தொடர்

பயணத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே ஜே.வி.பி. இன் முதன்மை நோக்கமாகும். எனவே, ஜனவரி 8 ஆம் திகதி இந்தப் பயணத்துக்கு முடிவு கட்டும் முகமாக மக்கள் வாக்குரிமையை பயன்படுத்த வேண்டும்.

அதேவேளை, சர்வகட்சி அரசில் அங்கம் வகிக்கப் போவதில்லை என்று நாம் தெளிவாகக் கூறியுள்ளோம். எனினும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்குத் தேவையான தலையீடுகளை வழங்குவோம்; யோசனைகளை முன்வைப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

## தாய் நாட்டை...

முன் பக்கத் தொடர்

அவர் மேலும் பிளெக் புக் சம்பந்தமாக தெரிவித்ததாவது; தேர்தல் சட்டத்தை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்களைச் சேகரிக்க 'ப்ளெப் புக்' (கறுப்பு புத்தகம்) ஒன்றை நாம் அறிமுகம் செய்கின்றோம். தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் இந்தப் புத்தகத்தில் சேர்க்கப்படும்.

தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பாக தகவல் கிடைத்தால், 0770700371 என்ற துரித அழைப்பு இலக்கத்தினூடாகவோ, blackbooklanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொடர்பு கொண்டு எமக்கு தெரியப்படுத்துங்கள். உங்களால் தெரியப்படுத்தும் தகவலுக்கமைய இப்புத்தகத்தில் பதிவு செய்து அவற்றை வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு அனுப்பி வைப்போம் என்று தெரிவித்தார்.

## 'சிறைச்சாலை நினைவுகள்' புதிய தொடர்

'சிறைச்சாலை' இந்த வார்த்தை சிலரது நெஞ்சங்களை குறு குறுக்கச் செய்யும். இன்னும் சிலரது உள்ளத்தில் வெறுப்பை உண்டு பண்ணும். சிலருக்கு குற்றம் புரிந்த பலரது முகங்களையும் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தச் செய்யும். இன்னும் சிலருக்கோ தியாகிகள் பலரது வரலாறு நினைவில் வந்து நிற்கும்.

ஆனால் சிறைச்சாலை என்பதன் தாற்பரியத்தை உணர்ந்து கொண்டால் அதன் மீது ஒரு மதிப்பு ஏற்படும். குற்றம் புரிவது மனித இயல்பு. உணர்ந்து திருந்துவது உள்ளத்தின் பெருமை.

இந்த பெருமைக்கு வழி வகுக்கும் கலாசாலை எனவும் சிறைச்சாலையை நாம் அழைக்கலாம். அத்தகைய ஒரு கலாசாலையே, இன்று முதல் நாம் பேச முனையும் போகம்பரை சிறைச்சாலை.

இச்சிறைச்சாலை அரசிடம் ஒப்படைக்கப்பட முன்னர், அங்கிருக்கும் பொருட்களைக் கணக்கிடுவதற்காக சிறைச்சாலைக்குச் செல்லும் சந்தர்ப்பம் கிட்டிய ஒருவர்தான் எஸ்.எம். ராபி. வெலம்பொட பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் அரச நிறுவனமொன்றில் முகாமைத்துவ உதவியாளராகப் பணி புரிகிறார். எழுத்தாற்றலும் ஊடகத்துறையிலும் அனுபவம் கொண்ட இவர் 'சிறைச்சாலை நினைவுகள்' எனும் தலைப்பில் தொடராக தனது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவுள்ளார். அவரது அனுபவங்களை அடுத்த இதழில் எதிர்பாருங்கள்.

ஆசிரியர்

எங்கள் தேசம்

## மு.கா. வின்...

முன் பக்கத் தொடர்

எட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டது.

இதனடிப்படையில் மு.கா. வின் தலைமையகமான தாருஸ் ஸலாமில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. இதன்போது ஜனாதிபதித் தேர்தலில் எந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது என்பதில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒருமித்த தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டிய தன் அவசியத்தை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த உலமாக்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீடம் மற்றும் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமிடமும் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பதில் நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் உரிய முடிவை மேற்கொள்வதற்கு ஏதுவாக கலந்தாலோசனை நடத்துவதற்காக வழமை போன்று கிழக்கு மாகாணத்தின் பல பிரதேசங்களையும் சேர்ந்த உலமாக்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கொழும்புக்கு அழைத்து தலைமையகத்தில் நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இக்கூட்டத்தில் தலைமைத்துவத்திற்கு முற்றிலும் கட்டுப்பட்டு ஏகமனதான தீர்மானத்தை மேற்கொள்ளுமாறு உலமாக்கள் வலியுறுத்தினர்.

சமூகத்தின் எதிர்பார்ப்பு, கட்சி நலன், நாட்டு நலன் என்பவற்றை கருத்தில் கொண்டே எந்த வேட்பாளரை ஆதரிப்பது என்பது பற்றி முடிவு செய்யப்பட வேண்டும் என்று இக்கூட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டது.

தலைமைத்துவமும் கட்சியும் மேற்கொள்ளும் தீர்மானத்துக்கு முழுமையாக கட்டுப்பட்டு நடப்பதாக பாராளுமன்ற உறுப்பினர்களும் மாகாண சபை உறுப்பினர்களும் தலைவர் ரவூப் ஹக்கீமிடம் உலமாக்கள் முன்னிலையில் பைஅத் (சத்தியப்பிரமாணம்) செய்துள்ளனர்.

மு.கா. வின் உயர்பீட உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்வில் தவிசாளர் அமைச்சர் பஷீர் சேகுதாவூத், பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக், மாகாண சபை உறுப்பினர்களான சட்டத்தரணி லாஹிர், ஏ.எல். உவைஸ் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

இருப்பினும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வாறு சிலர் கலந்து கொள்ளாததை அடுத்து இறுதி முடிவுகளின் போது கட்சிக்குள் பிளவு வரும் என்றே நம்பப்படுகிறது. கிழக்கில் நடைபெறும் பொது எதிரணியின் பிரசாரக் கூட்டங்களுக்கு மக்கள் பெரும் ஆர்வம் காட்டுவதை பார்க்கின்ற போது மு.கா.வின் தீர்மானம் எதன் பக்கம் இருந்தாலும் மக்கள் தாம் யாருக்கு வாக்களிப்பதென தீர்மானித்து விட்டார்கள் என்பதையே புலப்படுத்துகிறது.

## நல்லாட்சி...

(11 ஆம் பக்கத் தொடர்)

*2. உட்கட்டமைப்பு வசதிகள்:* இயற்கை அழகுபடுத்தலோடு இணைந்து செல்லும் ஒரு அபிவிருத்தியாகவும் மனிதர்களது உழைப்புகளை இலகுபடுத்தி தேவைகளை நிறைவு செய்து தரும் அபிவிருத்தியாகவும் உட்கட்டமைப்பு வசதிகள் காணப்படுகின்றன.

சுருக்கமாகச் சொன்னால் மனித வாழ்க்கையை இலகுபடுத்தும் நோக்கிலேயே உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்படுகின்றன. நாட்டின் எந்தவோர் இடத்திலும் அசௌகரியத்தை உணராத வகையில் இந்த வசதிகள் மேம்படுத்தப்படல் வேண்டும்.

*3. நிர்வாகப் பொறிமுறை:* நிர்வாகப் பொறிமுறையும் ஒரு வளமாகவே கொள்ளப்பட வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகள் போன்று நாட்டின் இயக்கத்தை சீராக்கி இலகுபடுத்தும் ஒரு பணியையே நிர்வாகப் பொறிமுறை ஆற்றுகின்றது. நிர்வாகப் பொறிமுறை நவீன தொழில்நுட்பங்களோடு விருத்தி செய்யப்படுவதோடு நிர்வாகிகளிடம் கடமையுணர்வு, சேவை மனப்பான்மை, எமது நாட்டின் புகழை மேலோங்கச் செய்வதற்காக உழைக்கின்றோம் என்பன போன்ற மனப்பாங்குகள் விருத்தி செய்யப்படல் வேண்டும். பொதுச் சொத்துக்களது துஷ்பிரயோகம், மக்களை அலைக்கழிய வைத்தல், மக்களை அறிவூட்டாதிருத்தல், கடமைகளை நிறைவேற்றாது காலம் தாழ்த்துதல், இலஞ்சம், நிர்வாக ஊழல் மோசடிகளுக்கு அடிமையாகுதல் போன்ற சீர்கேடுகளை நிர்வாகத் துறையிலிருந்து முற்றாகக் களைய வேண்டும்.

*4. நிதி:* நாட்டின் வருமானம் மற்றும் செலவினங்கள், அந்நிய நாட்டுச் செலாவணி, முதலீடுகள், கடன்கள், அபிவிருத்தி உடன்படிக்கைகள் போன்ற அனைத்திலும் தூய்மை, வெளிப்படைத் தன்மை, வகை கூறுதல் என்பவற்றை உறுதி செய்ய வேண்டும். வளங்கள் அனைத்திலும் அதிகம் விரயமாகின்ற ஊழல் மோசடிகளுக்குட்படுகின்ற, துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற ஒரு வளமாக நிதி வளமே காணப்படுகின்றது.

ஐரோப்பாவின் நோயாளியாக இருந்த துருக்கியை பத்து வருடங்களில் ஐரோப்பாவின் அதிசயமாக மாற்றியமைத்து சகல துறைகளிலும் முன்னேறிய ஒரு கடனில்லாத தேசமாக எவ்வாறு மாற்றினீர்கள்? என அந்நாட்டு பிரதமர் தையிப் அர்துகானிடம் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு ஒற்றை வார்த்தையில் அவர் கூறிய பதில், ''நான் களவெடுக்கவில்லை'' என்பது மட்டுமே.

நிதி வளத்தை சரியாக நிர்வகித்தால் எந்தத் தேசத்தையும் அதிசயமிக்கதாக மாற்றியமைக்கலாம் என்பதற்கு எடுத்துக்காட்டே அந்தப் பதில்.

இவ்வாறு நாட்டின் வளங்களைப் பாதுகாத்து, விருத்தி செய்யும் வகையில் ஓர் ஆட்சி தேவை என்பதை மக்கள் முன்னெப்போதுமில்லாத அளவு உணர்ந்து பேசியும் வருகின்ற ஒரு தருணத்தில் நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பேச்சை செயலாக மாற்றுவது எப்படி என்ற வினாவுக்கே அரசியல் தலைவர்கள் விடை கூற வேண்டும்.

### விழுமியம் 5: வாழ்க்கை முறை தொடர்பானது

நல்லாட்சியின் விசேட குறி காட்டிகளில் ஒன்று மக்களின் பிரதான வாழ்க்கை முறையாகும். ஏற்கனவே நாம் கண்ட நல்லாட்சியின் குறியீடுகள் அல்லது அடையாளங்கள் ஒரு நாட்டில் இருந்த போதிலும் கூட இந்த இறுதிக் குறியீடு பிழையான திசையைக் காட்டினால் நல்லாட்சி அங்கு முழுமை பெற்றதாகக் கூற முடியாது.

மக்களது வாழ்க்கை முறை பல்வேறு சீர்கேடுகள் சூழ்ந்ததாக இன்று மாறியிருக்கின்றது. அமைதியின்மை, பயம், சந்தேகம், பதட்டம், மன அழுத்தம், வாழ்க்கையில் பிடிப்பின்மை, அவநம்பிக்கை, அதிருப்தி, தோல்வி மனப்பான்மை, தாழ்வுச் சிக்கல், அன்பு, அந்நியோன்யம், குடும்பப் பிணைப்பு என்பவற்றில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சி, மது, சூது, போதைவஸ்துப் பாவனைகள், ஒழுக்க வீழ்ச்சி, கொலை, கொள்ளைகள், ஆட்கடத்தல், கப்பம் கோருதல், மதவெறி, இனவெறி, வன்முறைக் கலாசாரம், போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் என இந்த சீர்கேடுகள் நாளாந்தம் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

நல்லாட்சி என்பது மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் பொழுதுபோக்குகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது மட்டுமல்ல. மாறாக, அவர்கள் நன்மைகள் நிறைந்த, தீமைகள் குறைந்த ஒரு வாழ்க்கை வாழ்வதற்கு வழி செய்வதே நல்லாட்சியாகும்.

மக்களை நல்வாழ்வு வாழச் செய்வது அரசின் வேலையல்ல. அது மத போதகர்களின் வேலை என்ற கருத்தே இது விடயத்தில் பரவலாகக் காணப்படுகின்றது. உண்மையில் இதனை இரு சாராரும் இணைந்து திட்டமிட்டுச் செய்ய வேண்டும். ஒருவருக்கொருவர் இது விடயத்தில் துணையாக இருக்க வேண்டும். மது, சூது என்பவற்றுக்கு அரசு அங்கீகாரம் வழங்கினால் மத போதகர் செய்யும் உபதேசங்களால் என்ன பலன் விளையப் போகிறது?

இனவாதத்தையும் மத வெறியையும் அரசாங்கம் கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்தால் மத போதகர்கள் வேதமோதி என்ன பயன் ஏற்படப் போகின்றது?

எனவே, சீரான வாழ்க்கை முறையொன்றின்பால் மக்களை இட்டுச் செல்வதற்கு நல்லாட்சி தேவைப்படுகிறது. அதனை இன்று அனைவரும் உணர்ந்திருக்கின்றனர்.

மக்களின் இயல்பு எப்போதும் நல்லவற்றிற்கு சார்பாகவே இருக்கும். அதனைப் பலவந்தமாக அல்லது ஆசை காட்டி அல்லது பயமுறுத்தித்தான் கெட்டவையின் பக்கம் அழைத்துச் செல்ல முடியும். அவ்வாறு செய்தாலும் அது நிலைத்திருப்பதில்லை. கெட்டவனும் கூட விரும்பும் போது நல்லதையே விரும்புன்கிறான். அதனால் 'மக்களின் விருப்பம்' என்பது ஓர் அளப்பரிய சக்தி. அந்த சக்திக்கு முன்னால் தவறிழைப்பது இலேசல்ல. அந்த சக்தி ஒரு நாள் அதனைத் தட்டிக் கேட்கவே செய்யும்.

சிறுபான்மை சமூகங்களின் தலைவர்கள் தமது சமூகத்தின் உரிமைகள் குறித்துப் பேசும் தருணமல்ல இது. உரிமைப் போராட்டங்களையும் பேரம் பேசல்களையும் மூட்டை கட்டி ஒரு புறம் வைத்து விட்டு, நாட்டிற்கு நல்லாட்சி வேண்டும் என்பதை பேச வேண்டிய தருணமே இது. அவர்கள் ஆளும் தரப்பினரோடு பேசினாலும் எதிர்த் தரப்பினரோடு பேசினாலும் நாளை மலரப் போகும் ஆட்சி பற்றியே பேச வேண்டும். பின்னர் அந்தப் பேச்சு வார்த்தையின் முடிவுகளை அல்லது சாராம்சத்தை மக்களுக்கு முன்னால் தெளிவுபடுத்த வேண்டும். மக்கள் தமது வாக்குகளால் இறுதி முடிவை எடுப்பார்கள்.

குறிப்பிட்ட காலம் தனிக் கோட்டில் பயணம் செய்த நாடு இப்போது தெளிவானதொரு பிரிகோட்டில் வந்து நிற்கிறது. அந்தப் பிரிகோட்டுச் சந்தியில் எந்தப் பக்கம் நாடு செல்ல வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அரியதொரு சந்தர்ப்பம் இப்போது மக்களுக்கு கிடைத்திருக்கின்றது. இது மக்களுக்கான நேரம். மக்கள் தீர்மானிக்கும் பாதையில் நாடு இனி செல்லப் போகிறது. அது பிரிகோட்டில் எந்தப் பக்கம் சென்றாலும் 'நல்லாட்சி' என்ற இலக்கை நோக்கி நகர வேண்டும் என்பதே எமது அவா. அத்தகைய நல்லாட்சிக்குரிய அடையாளங்களையே இந்தப் பத்தியில் பதிவு செய்துள்ளோம்.

வரப்போகின்ற ஆட்சி மனிதர்களின் ஆட்சியாகவன்றி சட்டத்தின் ஆட்சியாகவும் விழுமியங்களின் ஆட்சியாகவும் அமைவதற்கு எமது பிரார்த்தனைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறம் மாறும் பூக்கள்

"ம்மம்மா... ம்மம்மா... ஆட்டோ வந்துருச்சி... ஆட்டோ வந்துருச்சி...

"பர்ரா சுருக்கா வந்து சின்னவன எடு. ஆட்டோவும் வந்துருச்சி"

"உம்மா சுருக்கா வாறன்... கையெல்லாம் ஈரம், கொஞ்சம் வெச்சி கொள்ளுங்க..."

என்றவள்,

"உம்மா, புரோக்கர் தாத்தாவுக்கு சொன்னீங்கதானே..."

"சொல்லிட்டன். அவ ரெடியா இருக்கிறாவாம். நான் போயிட்டு வாரன், சின்னவன் கவனம்"

– – –

"மகள் ஏலெவல் சென்ஜி பாசாகி கெம்பசும் வந்துச்சி. நாங்க அனுப்பல. தெரியும்தானே இந்தக் காலம் எப்பிடிண்டு..."

"நல்லம் நல்லம். அப்ப உங்கட மகன் பேசினா சொல்லுங்க, நாங்க வந்து பாத்துட்டு போனண்டு"

என்றவாறு ஸவ்தாவும் புரோக்கர் தாத்தாவும் வெளியே வந்து ஆட்டோவில் ஏறினர்.

"கரீமா தாத்தா, எனக்குண்டா புள்ளய நல்லா புடிச்சி போச்சு. மகன்ட இன்டைக்கே கோள் பண்ணி சொல்லனும். பர்ராவும் மின்ஹாவும் வந்து ஒரு தரம் பார்த்துட்டட்டும்"

"ஸவ்தா தங்கச்சி, போன கிழம ஒரு பொண்ணு பார்க்க போனமே. அவங்க உங்கட விருப்பம் பத்தி கேட்டாங்க. என்ன பதில் சொல்ல"

"யாரு அந்த ஜமாத் பாட்டியா?"

"ம்..."

"அது எங்களுக்கு சரிப்பட்டு வராது தாத்தா. ஏதாவது சொல்லி சமாளிச்சிடுங்க"

"தங்கச்சி, சொல்றண்டு பிழையா நெனக்காதீங்க. அவங்க வசதியில குறைந்தவங்கதான். ஆனா அந்த குடும்பம் தங்கமான குடும்பம். அந்த புள்ளயும் நல்லா ஓதி படிச்சிரிக்கி. மத்தது நல்ல ஒழுக்கமான புள்ள."

"கரீமா தாத்தா, எனக்கு ஈக்கிரதே ஒரே மகன். அவன நல்ல இடத்தில கொடுக்க வாணமா? எனக்கிப்ப பார்த்த எடம் நல்லா புடிச்சிப் போச்சி, இதையே செய்வம்..."

--------

ஸவ்தாவின் குடும்பம் அந்த ஊரில் வசதியானது. அவளது கணவர் காமில் வெளி ஊரில் பெரிய புடவைக் கடைக்கு சொந்தக் காரர். அவர்களுக்கு இரண்டு மகள்களும் ஒரு மகனும். மகள் இருவரையும் பெரிய இடத்தில் திருமணம் செய்து கொடுத்திருந்தார். மூத்தவள் மின்ஹா தனது கணவருடனே இருக்க, பர்ரா தனது உம்மாவுடன் இருந்தாள். அவளது கணவன் கொழும்பில் ஓர் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கிறார். மகன் சியாத் வெளிநாட்டில் ஒரு பெரிய கார் கம்பனியில் மனேஜராக வேலை பார்க்கிறான். தனது மகனுக்கு ஒரு வருடமாக பல இடங்களில் பெண் பார்த்து, பார்த்து எதுவுமே ஸவ்தாவுக்கு விருப்பமாக இருக்கவில்லை. கடைசியாக பார்த்த இடம் மிகவும் பிடித்துப் போனது. அவளது மகனுடன் ஒன்றாக வேலை செய்யும் நண்பனின் தங்கச்சியைப் பற்றி சியாத் சொல்லி அவளைப் போய் பார்க்க சொல்ல, அவளும் பார்த்து பிடித்துப் போக, திருமணம் நிச்சயிக்கப்பட்டது. சியாதும் வெளிநாட்டிலிருந்து வந்து போய் பெண் பார்த்து அவனுக்கும் ரிஸ்லாவை பிடித்துப் போனது. இரு வீட்டாரின் சம்மதத்துடன் ரெஜிஸ்டரும் முடிய சியாத் திரும்பவும் ஒரு வருடத்தில் வருவதாக சொல்லிவிட்டு சென்றான்.

ஸவ்தா தனது மருமகளுடன் மிகவும் அன்புடன் நடந்து கொண்டாள். வித விதமாக உணவுகள், உடைகள் என்று வருங்கால மருமகளுக்கு கொடுத்தனுப்பினாள். பெருநாள் வந்ததும் மருமகளுக்கு தேவையான அனைத்தையும் தனது குடும்பத்துடன் போய் கொடுத்துவிட்டு வந்தாள். ஒரு வருடம் விரண்டோடியது. சியாத் அடுத்த மாதம் வர இருப்பதாக சொன்னான். ஸவ்தா மகனுக்கு கல்யாண ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென அவா கொண்டவளாக திருமணத் திகதியை எப்படி தெரிவு செய்வது என்று நினைத்தவள், மருமகளின் தாயிடம் பேசிப் பார்க்கலாம் என்று தொலைபேசியை எடுக்க எண்ணும் போதே, அலர ஆரம்பித்தது தொலைபேசி.

"ஹலோ யாரு"

மறுமுனையில் ரிஸ்லாவின் உம்மா கதைக்க...

"ஓ மைனி வீட்டிலதான் இருக்கிறன்... கட்டாயம் வாங்க"

"என்ன அவசரமாக இரிக்கிம்?"

மாலையானதும் ரிஸ்லாவின் உம்மாவும் அவளது தங்கையும் ஸவ்தாவின் வீட்டுக்கு வந்தனர்.

"என்ன மைனி, ஏதோ அவசரமாக பேசனும்டு சொன்னீங்க"

"மைனி, ஒங்கட மகன் ஒன்றுமே சொல்லல்லையா...?"

"இல்லையே... நேத்தும் பேசினான். ஏ மைனி, என்ன விசயம்...?"

"மகன் கல்யாணத்த வாணம் என்கிறார்"

"என்ன... கல்யாணம் வாணமாமா? எப்ப சொன்னான்...?

"இப்ப ரெண்டு மூனு நாளா ரிஸ்லா ஒரே அழுவ. ஏண்டு கேக்க கேக்க சொல்ராவுமில்ல. பிறகு ஒரு மாதிரியா சமாளிச்சி என்னாண்டு கேட்டன்; மருமகனுக்கு கல்யாணத்துல இஸ்டமில்லண்டு சொல்றாராம்."

"சரி மைனி, நான் ராவைக்கு ஸ்கைப்ல பேசிட்டு உங்களோட பேசுறன். அவசரப்பட வாணம். அவன் ஏன்ட பேச்ச தட்டமாட்டான். இந்த கல்யாணம் நடக்கும். ரிஸ்லாதான் ஏன்ட மருமகள். நீங்க யோசிக்காம இருங்க."

– – –

"உம்மா, மாமா வருது"

என்றவாறு ஓடிப் போய் வெளிநாட்டிலிருந்து வரும் சியாதை பர்ராவின் மகன் அஹ்மத் கட்டிப் பிடித்துக் கொண்டான்.

சியாத் சற்று மாறியிருந்தான். முகத்தில் லேசான தாடி வளர்ந்திருந்தது.



வெளிநாட்டிலிருந்து வந்த களைப்பு போக சற்று ஓய்வு எடுத்தவன், ளுஹறுக்கு பாங்கு சொல்ல எழுந்து பள்ளிக்கு போக ஆயத்தமானான். ஸவ்தாவுக்கு அது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. இத்தனை நாளும் சியாத் தொழுகை விடயத்தில் சற்று அலட்சியமாக இருந்தான். ஆனால் இந்த தடவை அவனில் மாற்றத்தை ஸவ்தா உணர்ந்தாள்.

அன்றிரவு இஷா தொழுதுவிட்டு வந்தவன், சாப்பிட்டுவிட்டு சீடியில் ஷாகிர் நாயிகின் பயானை போட்டு பார்த்துக் கொண்டிருக்க, ஸவ்தா வந்து அருகில் அமர்ந்தாள்.

"சியாத் ஒன்னோட கொஞ்சம் பேசனும் வாப்பா"

"என்ன உம்மா சொல்லுங்க"

"இந்த டிவிய கொஞ்சம் நிப்பாட்டுறீங்களா?"

"சரிம்மா"

"ஏ வாப்பா கல்யாணம் வாணம்டயாம்? ரிஸ்லாவை உனக்குப் பிடிக்கல்லையா...?"

"இல்லம்மா..."

"ஏன் சியாத், நீங்க போன தடவ வந்து பார்த்துத்தானே விருப்பம் சொன்னீங்க, இப்ப வாணம்கிறத்துக்கு என்ன காரணம்?"

"காரணம் தேவல்லம்மா. ஆனா எனக்கு ரிஸ்லாவை முடிக்க ஏலாது"

"அதுதான் ஏன் வாப்பா. ஒரு கொமருட வாழ்க்க இது. ஒனக்கும் இரண்டு தாத்தமார் இருக்குறாங்க. நான் ரொம்ப சந்தோஷப்பட்டன். அப்படி ஒரு குடும்பம், மருமகள் கெடச்சதுக்கு இப்ப நீங்க வாணம்டா?"

"வாணம் உம்மா. நா உறுதியா முடிவெடுத்துட்டன்"

"சரி, ஏண்டு நா தெரிஞ்சிக்கலாமா"

"உம்மா, இத மனசோட வெச்சிகொங்க. ஏண்டா, இப்ப சொன்னீங்களே கொமரு காரியம்டு... அத சுட்டித்தான் சொல்லாம இருந்தன். இனி மறச்சி பயனில்ல. சொல்றன். நான் மிச்சம் விருப்பத்தோடதான் ரிஸ்லாவோட கதைச்சன். ஒரு தடவ கேட்டா, நீங்க யாரோட கூட எரக்கம்டு. நான் சொன்னன் உம்மாவோடயும் ஒங்களோடயும்டு. யாரோட கூட எரக்கம் என்றா. ரெண்டு பேரும் ரெண்டு கண்மாதிரின்டு சொன்னன். இல்ல, என்னோடதான் கூடுதலாக எரக்கமா இருக்கனும்டு கோபிச்சா. சரின்டு கணக்கெடுக்காம விட்டுட்டன். பிறகு ஒரு தடவ சொன்னா கல்யாணம் முடிச்சா ஒங்கட உம்மாவோட இரிக்க ஏலா தனியாதான் வீடெடுத்து இரிக்கனும் என்றா. எப்படி பெத்த உம்மா ஒங்கள விட்டுக் கொடுக்குறது? அவ கல்யாணம் முடிக்க முதல்லையே இப்படிண்டா, கல்யாணம் முடிச்ச பிறகு...?"

"..."

"வாணம் உம்மா. அல்லாஹ்வுக்குப் பயந்து குடும்பத்தோட ஒத்துப் போற புள்ளயப் பாருங்க"

ஸவ்தாவுக்கு தனது கல்யாண நாட்கள் நினைவில் முட்டி மோதி வெடித்தது. நானும் இது போல திருமணமான புதிதில் தனது கணவருடன் சண்டை பிடித்ததும், தனது கணவரை அவரின் தாய் வீட்டுக்குக் கூட அனுப்பாது தடுத்ததும் அவளை குத்திவிட்டு சென்றன. இத்தனை அன்பாக வளர்த்த மகனை விட்டு பிரிவதா? அவளுக்கு கண்ணீர் வந்தது.

"உம்மா, ஏ அழுறீங்க... கவலப்படவாணம். அல்லாஹ் எல்லாத்தையும் நன்மைக்குத்தான் ஆக்கியிருப்பான்."

**-உக்குவளை நஸார்-**

தனது தவறுக்காக தான் அழுவதை ஸவ்தா காட்டிக் கொள்ளாது,

"சரி வாப்பா, நீங்க போய் படுங்க. டயடா இருக்கும் மற்றத நாளைக்கு பேசிக்கலாம்"

தனது தவறை உணர்ந்தவளாக பல மாதங்கள் தனது கணவரின் தாயுடன் பேசாமல் இருப்பதை நினைத்து டெலி போனை கையில் எடுத்தாள்.

" கரீமா தாத்தா, நாங்க மகனுக்கு பார்த்த அந்த ஜமாத் புள்ள கலியாணம் முடிச்சிருச்சா?"

மறுமுனையில் ஏதோ பதில் வர,

"அப்ப, நாளைக்கு வெள்ளனயே அங்க போயிட்டு அந்த புள்ளயையே முடிவு கட்டிடுவம்"

"யா அல்லாஹ், என்னை மன்னித்துக் கொள்..."

என்று தனது தவறை உணர்ந்து கனத்த மனதுடன் கண் கலங்கியவள்ளாக இஷா தொழ ஆயத்தமானாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சித்தான்

தெரிந்தவரோடு மட்டுமே
பேச வேண்டும் என்றிருந்தால்
பலர் அறியப்படாமலே
அழிந்திருப்பர்

கழிவுற்ற விஞ்ஞானம்
கழிவாக வெளியேறியிருக்கும்

இருந்தவை இருந்தபடியே தவிர
தேசமென்றும் நேசமென்றும்
புதிதாய் ஒன்றும் தோன்றியிருக்காது
மனிதரின் தொட்டிலும் கல்லறையும்
இதுவாகவே இருந்திருக்கும்

என்னை அறியாதவருடன்
நான் பேச மறுத்திருந்தால்
ஒரு சிற்றெறும்பின் நிழலுக்கு கீழ்
சிதைந்து போயிருப்பேன்...

அஸ்லம் அஹமட்
ஜாமிஆ நளீமிய்யா



## உன்னை நினைத்தேன் என்னை மறந்தேன்



## உயிர் மொழி



மதியுள்ள மானிடனாய்
மாண்புடன் மாநிலத்தில்
பிறக்க வைத்தவன் – என்
மதியுயர் மன்னனவன்

மூச்சாலும் பேச்சாலும்
நின் பால் நெருங்கும் எனக்கு
நீ தரும் மெய்ஞானம்
மடை திறந்த வெள்ளமன்றோ

நப்சோடு பேசிப் பேசி – நாயனே
உன்னை மறந்து நரிகள் போல்
உலக மோகத்தில் வாழ்பவரைப்
பார்க்கையில் பைத்தியம்தான்
பிடிக்குதெனக்கு

உன் பெயரை சுவாசிக்கும்
எனக்குள் ஆயிரம் ஆனந்தப் பூக்கள்
பூக்கின்றனவே

மெய்க்குள் மெய் நுழைகையிலே
உன் நேசத்தை அறிவால்
பெறும் எனக்கு உலகம்
முழுதாய் வெறுக்கின்றதே

உன் அளவற்ற அருள்;
நிகரற்ற அன்பு நின்னை
வந்தடைகையிலே என்னை
நான் முழுதாய் மறந்து விடுகிறேன்

என் இரட்சகனே நீ என்னைப்
பொருந்திக் கொள்ளும் காலமெல்லாம்
என் உடல், பொருள், ஆவி
எதுவும் எனக்குத் தேவையில்லை
நீயன்றி நானில்லையே!

சப்ரி எம். ஷாஃபி
பூவலிகடை

## பணக்காரனாக வேண்டும்



நானும் பணக்காரனாக வேண்டும்
மாளிகையில் வாழ்வதற்கல்ல
உயர் ரக வாகனங்களை
உரிமையாக்கவல்ல
என் இறைபாதையில் செலவளிக்க

நடந்து தேய்ந்த
என் தந்தையின் பாதங்கள்
நடை தெரியாது பயணமாக
உழைத்துக் களைத்த
என் தாயின் எலும்புகள்
ஓய்வு பெற


ஓர் உஸ்மானாய்
அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பாய்
நளீமிய்யாவின் தந்தை
நளீம் ஹாஜியாய்
என்னை நான் காண வேண்டும்

என் மீஸானும் கனக்க வேண்டுமே
நதிகள் பல ஓடும் சுவனத்தின்
நானும் ஒரு வாரிசாய்
இறை முகம் காணும் அடிமையாய்
அந்நாளில் ஜொலிக்க வேண்டுமே

சனீரா அப்துல் மஜீத் (இஸ்லாஹி)
தஸ்கரை

# மானுட தேசம்

10



## உமர் லெவ்வை முஹம்மது றியாழ்

புத்தளம் மாவட்டத்தில் நீர்கொழும்பு, குளியாப்பிட்டிய பிரதான வீதியில் நாத்தாண்டி நகருக்குச் சமீபமாக அமைந்துள்ளது கொட்டாரமுல்லை எனும் ஊர். வயல் நிலங்களால் சூழப்பட்ட ஓர் அழகிய மருத நிலக் கிராமம், இது.

பல்லினத்தவர்கள் செறிந்து வாழும் பலகிராமங்கள்இவ்வூருக்குஅண்மையில் மிகநெருக்கமாக உள்ளன. இம்மாற்றுமதச் சகோதரர்களோடு கொட்டாரமுல்லை முஸ்லிம்கள் தொன்றுதொட்டு பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவியாக, மிக ஒற்றுமையோடு வாழ்ந்து வருகின்றனர். சூழவுள்ள வயல் நிலங்களில் அதிகமானவற்றின் சொந்தக்காரர்களும் இந்த மாற்று மதத்தவர்களே.

அக்கரை, ஊர்மனை, ரொபர்ட் தோட்டம், நளீம் ஹாஜியார் புரம், பாத்திமா புரம் போன்ற பிரிவுகளில் உள்ள ஐந்து பள்ளிவாசல்களோடு அக்பர் பள்ளிவாசல் என்றழைக்கப்படும் ஜும்ஆ மஸ்ஜிதுமாக மொத்தம் ஆறு பள்ளிவாசல்கள் கொட்டாரமுல்லையில் உள்ளன.

ஒரே ஜும்ஆ மஸ்ஜிதான அக்பர் பள்ளிவாசலில்தான் முஹம்மது றியாழ் பணிபுரிகிறார். இவர்இக்கிராமத்தில்உமர் லெவ்வை - ஹப்ஸா உம்மா தம்பதிகளின் புதல்ராக 1943 ஆம் ஆண்டு பிறந்தார். 'வப்பார் முஅத்தின்' என ஊர் மக்களால் அன்பாக அழைக்கப்படும் முஹம்மது றியாழ் ஆரம்பக் கல்வியை இங்குள்ள முஸ்லிம் பாடசாலையில் கற்றுக் கொண்டார். குடும்ப நிலை காரணமாக மேற்கொண்டு கல்வியைத் தொடர முடியாத நிலையில், பீடி சுற்றும் கைத்தொழில் ஈடுபட நேர்ந்தது. ஐம்பத்தைந்து அல்லது அறுபது ஆண்டுகளுக்கு முன் பீடி சுற்றும் கைத்தொழில் இக்கிராமத்தில் ஒரு பிரதான தொழிலாக இருந்தமையே இதற்குக் காரணமாகும். பீடி சுற்றும் தொழிலில் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்த போதிலும் வேளாவேளை உரிய வணக்க வழிபாடுகளில் ஈடுபடத் தவறியதில்லை, இளைஞர் முஹம்மது றியாழ் அவர்கள்.

இவருடன் சமமாக ஒரே முற்றத்தில் உட்கார்ந்து பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டிருந்த இவ[illegible] இருபத்தொன்பதாவது வயதில் பீடித் தொழிலை கைவிட்டு, தென் இந்தியாவில் ஒரு பிரபல மத்ரஸாவில் மாணவராகச் சேர்ந்து, ஓதிப் பட்டம் பெற்று மௌலவியாக நாடு திரும்ப, இந்நாட்டில் ஓர் அரபுக் கல்லூரியை நிறுவி அதன் அதிபராகவும் ஆயுட் காலப் பணிப்பாளராகவும் இப்போதும் சேவையாற்றி வருகின்றமை குறிப்படத்தக்கது. இவர்தான் மௌலவி அல்ஹாஜ் கே.எம். ஹலாலுத்தீன் அவர்கள்.

கொட்டாரமுல்லை அக்பர் பள்ளிவாசலின் அன்றைய நிர்வாக சபையினரிடம் தமது நண்பர் முஹம்மது றியாழ் அவர்களைப் பற்றி எடுத்துக் கூறி ஒரு முஅத்தினாக பள்ளிவாசலில் பணி செய்ய சிபாரிசு செய்தவரும் அல்ஹாஜ் ஹலாலுத்தீன் ஹஸரத் அவர்களே.

1984ஆம் ஆண்டு ஆரம்பம் முதல் அக்பர் பள்ளிவாசலில் முஅத்தினாக பணி செய்யத் தொடங்கிய முஹம்மது றியாழ் அவர்கள், சுமார் முப்பது வருடங்களுக்கு மேலாக இப்புனிதப் பணியில் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்.

அமைதியான கணீரென்ற குரல் அயலில் வாழும் மாற்று மதத்தவர்களுக்கும் நன்கு பரிச்சயமாகிவிட்டது. சில சமயங்களில் சொந்த வேலை காரணத்தால் வேறு நபர் ஒருவர் பாங்கு சொல்லக் கிடைத்தால் "இன்னார், இன்று பாங்கு சொல்லவில்லையே" என்று மாற்று மதத்தவர் கூறுமளவிற்கு இவரது குரல் பரிச்சயமாகிய தோடு, அதிகாலை வேளையில் சுப்ஹுத் தொழுகைக்காக அதான் கூறுவதை மாற்றுமதத்தவர் மிக [illegible]கின்றனர். காரணம் இந்த அதான் ஒலி கேட்டுத்தான் அவர்கள் உறக்கத்திலிருந்து விழித்து தத்தம் தொழில்களுக்குச் செல்லத் தயாராகின்றனர்.

அதான் கூறுவதை தவிர, ஊரில் ஜனாஸாக்கள் நிகழ்ந்தால் அவற்றுக்கான இறுதிக் கிரியைகளை நிறைவேற்றுவது, உழ்ஹியாவுக்காக மிருகங்களை அறுப்பது, பள்ளிவாசல் பரிபாலன சபையால் ஜமாஅத்தாருக்கு விடுக்கப்படும் அறிவுறுத்தல்களை சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று எத்திவைப்பது, பைத்துல் மால் நிதியை ஜமாஅத்தாரிடம் வசூலிப்பது போன்ற கடமைகளையும் மகிழ்ச்சியோடு செய்கிறார். பல சமயங்களில் தாமே முன் வந்து மலசலகூடங்களைச் சுத்தப்படுத்தும் வேலையையும் மனமுவந்து செய்வார். இது அல்லாஹ்வின் மாளிகைக்காக தாம் செய்யும் நல்லமல் என்ற எண்ணமே தமக்கு திருப்தியைத் தருவதாக வப்பார் முஅத்தின் அடிக்கடி சொல்வதுண்டு.

இவ்விதம் பள்ளிவாயிலில் பணி செய்ய வப்பார் முஅத்தினாருக்கு எல்லாம் வல்ல அல்லாஹ் மேலான அருள் ஒன்றை அருளினான். ஆம், அவர் நீண்ட காலமாகச் செய்து வரும் பள்ளிவாசல் பணியை கண்ணியப்படுத்தி கௌரவிக்கும் முகமாக ஊரிலுள்ள பரோபகாரிகள் முன்வந்து தமது செலவில் இவரை ஹஜ் கடமை நிறைவேற்றும் பொருட்டு புனித மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள், அல்ஹம்துலில்லாஹ்.

அல்லாஹ்வுக்காக தான் ஈடுபட்டிருக்கும் இந்த நல்லமலில் இன்ஷா அல்லாஹ், தன் உடலில் தெம்பிருக்கும் வரை, குரலில் கம்பீரம் ஓயும் வரை தொடர்ந்தும் ஈடுபட நாட்டம் கொண்டுள்ளதாக உறுதியாகக் கூறுகிறார் வப்பார் முஅத்தினார் என அழைக்கப்படும் அல் ஹாஜ் முஹம்மது றியாழ் அவர்கள்.

கலாபூஷணம் கொட்டாரமுல்லை ஸலீம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மை சமூகத்தின் சந்தேக கண்ணோட்டத்திற்கு முஸ்லிம் சமூகம் ஆளாக்கப்படக் கூடாது



## அமைச்சர் அதாஉல்லா

பைஷல் இஸ்மாயில்

தொடர்ந்தும் பெரும்பான்மை சமூகத்தின் சந்தேக கண்ணோட்டத்திற்கு முஸ்லிம் சமூகம் ஆளாக்கப்படக் கூடாது. எதிர்வருகின்ற தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றி பெறுவது உறுதியாகும். ரணிலினால் ஒரு போதும் இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர முடியாது. ஆதலால் தான் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் பலி கொடுப்பதற்காக ஒருவரை அழைத்து வருவது ரணிலின் யுக்தியாக மாறியுள்ளது என்று உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

சம்மாந்துறை பிரதேசத்தில் வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

யுத்தத்தை வைத்து அரசியல் செய்தவர்களுக்கும் இந்த நாட்டை சூறையாட நினைத்த சர்வதேசத்திற்கும் பயங்கரவாதத்தை ஒழித்து யுத்தத்தை விரைவாக முடிவுக்குக் கொண்டு வந்தமை கசப்பான விடயமாகவே மாறியுள்ளது. இதற்காகவே உலக நாடுகள் உள்நாட்டிலுள்ள அரசியல் முகவர்களை வைத்துக் கொண்டு மஹிந்த ராஜபக்ஷவையும் இந்த நாட்டையும் அடக்கி ஆளுவதற்கு முற்பட்டு வருகின்றனர். ஆனால் அதற்கு ஒருபோதும் அடிபணிய இந்தத் தலைமை முன்வரவில்லை.

தேசிய காங்கிரஸ் கட்சியானது இரண்டு விடங்களை மட்டுமே ஜனாதிபதியிடம் கூறியிருந்தது. ஒன்று, இந்த நாட்டின் யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். இரண்டாவது, வடக்கு-கிழக்கு மாகாணங்கள் தனித் தனியாகப் பிரிக்கப்படல் வேண்டும். அவற்றை இன்று ஜனாதிபதி நிறைவேற்றியுள்ளார். ஆதலால்தான் இம்முறை எந்த விதமான நிபந்தனையுமின்றி ஆதரவு தெரிவித்துள்ளோம்.



கொழும்பு கிராண்ட்பாஸ் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதான தேர்தல் அலுவலகம் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படுவதையும் இந்நிகழ்வில் பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மேல் மாகண சபை உறுப்பினர் பாயிஸ், கொழும்பு மாநகர சபை உறுப்பினர் மன்சில் ஆகியோரையும் காணலாம்.

அஸ்ரப் ஏ. சமத்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Print by IPC Printers No. 23, Dewaas Lane, Colombo-14